

பரந்து விரிந்து வானத்துக்குப் போட்டியாக கருநீலக் கடல் ஆழமும் அகலமுமாய் நீண்டிருந்தது. படித்த மனிதர்கள் அமைதியாய் இருப்பது போல், ஆழமான கடல் பகுதி அமைதியாய் இருந்தது. வெற்றுப் பணக்காரனாய் அலைகள் தான் ஆர்ப்பரித்துக் கொண்டிருந்தது.

மஹதி கடலையே வெறித்துக் கொண்டிருந்தாள். அவள் அருகே கைப்பையும் அவளுடைய சான்றிதழ்கள் அடங்கிய பையும் மட்டுமே இருந்தன.

கால்களைக் கட்டிக் கொண்டு, அருகே யாருமே இல்லாமல் தனியே அமர்ந்து கடலை வெறிக்கும் அவளை விசித்திரமாகப் பார்த்தபடி நெருங்கினான் சுண்டல் விற்கும் பையன்.

''சுண்டல் வேணுமாக்கா?''

எத்தனை சுண்டல் பையன்கள் கேட்டு விட்டார்கள் என்ற

# வளர்பிறை நிலவுகள்

-ராஜசியாமளா

அலுப்பு எழுந்தாலும், அதை வெளியே காட்டாமல் கைகளால் மறுத்தாள்.

காதலன் வராத கோபம் போலும் என்று எண்ணிய படி சுண்டல் பையன் விலகினான்.

காற்று குளுமையாய் அடித்தது.

அது, மனத்தணலை ஆற்றுமா?

சூரியன் கடலின் விளிம்பில் நின்று கொண்டு கடலில் விழுந்து விடட்டுமா என்று கேட்டுக் கொண்டிருந்தது. இன்னும் அதிக நேரம் அங்கு உட்கார்ந்திருக்க முடியாது. வீட்டுக்குக் கிளம்ப வேண்டும். அந்த எண்ணமே கசப்பாக இருந்தது.

வீடு என்பது விடுதலையாய் உணர வேண்டிய இடம். சொர்க்கம் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டிய இடம். உறவுகள் பாதுகாப்பாய் நிற்க வேண்டிய இடம். புரிந்து கொள்ளல் என்பது அடிநாதமாய் இருக்க வேண்டிய இடம். புற உலகைக் கண்டு பயந்து ஓடினாலும், பாதுகாப்பாய் புகலிடம் தரும் இடமாய் இருக்க வேண்டும்!

ஆனால் தன் நிலையில் நடப்பது என்ன? வீட்டிற்கு பயந்து வெளியே சுற்றிக் கொண்டு...

வேலை கிடைத்து விடாதா... வீட்டை விட்டு நிரந்தரமாய் வெளியேறி விடலாமே என்று நப்பாசைபட்டுக் கொண்டு...

இந்த நிமிடம் தப்பி ஓட ஏது இடம் என்று அல்லாடிக் கொண்டு...

சொந்த வீடே அந்நியமாய்...

ஆமாம், அதுதான் தன் சொந்த வீடா? சொல்ல உரிமை உண்டா?

ஆறுமாதம் முன்பு வரை இப்படியா இருந்தது? அது தன் சொந்த இடமல்ல என்ற எண்ணமாவது வந்திருக்குமா?

இந்த மங்கா பாட்டி கூட அல்லவா தனக்குப் பரிந்து பேசத் தயங்குகிறாள்! ஏன், வார்த்தைக்கு வார்த்தை 'தங்கம், பட்டு, செல்லம், கண்ணம்மா' என்று கொஞ்சும் ஞானம்மா,

வாயே திறப்பதில்லையே. எல்லோருக்குள்ளும் இத்தனை சுயநலமா?

''கொஞ்சம் பொறுத்துப் போம்மா'' என்று எல்லோரும் தனக்குத்தானே அறிவுரை கூறுகிறார்கள். ஒரு பெண்ணால் ஒரு ஆணை இந்த அளவு வளைக்க முடியுமா? ஐயோ!

எண்ணம் முடிவில்லாமல் தொடர, கண்கள் 'அழுது விடவா?' என்று தயாரானது. அருகே யாரோ நிற்பது போல் தோன்ற மனதையும் கண்களையும் அடக்கிக் கொண்டு நிமிர்ந்தாள்.

சிரித்தபடி அவன் நின்று கொண்டிருந்தான்!

அவளுக்கு எரிச்சல் வந்தது.

அவனோ ''ஹலோ!'' என்றான்.

''நிம்மதியா ஒரு இடத்துல உட்கார விடமாட்டாங்க'' என்று முணுமுணுத்தபடி வேகமாக அந்த இடத்தை விட்டு அகன்றாள்.

அவன் போகும் அவளையே பார்த்தபடி நின்றான்.

## 2

பஸ் பிடித்து வீடு திரும்பும் போது சற்று இருட்டத் துவங்கி விட்டது.

புதினாவை ஆய்ந்து கொண்டிருந்த அண்ணி நிமிர்ந்து பார்த்து விட்டு தலையைக் குனிந்து கொண்டாள்.

சமையலறையிலிருந்து ஜானம்மா எட்டிப் பார்த்தார். வாயால் ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் கண்களில் நிச்சயம் வழக்கமான நட்பு தெரியவில்லை. பாட்டி பின்பக்கம் தேங்காயை உடைத்துக் கொண்டு வந்தார். பாட்டியும் ஒன்றும் கேட்கவில்லை.

வீட்டின் அமைதி முகத்தில் அடித்தது.

சில மாதங்களாய் இது தான் வாடிக்கையாக உள்ளது. ஒன்று இப்படி அடிக்க வரும் அமைதி- 'நீ என்ன செய்தாலும் அக்கறை இல்லை' என்பது போல். அல்லது பிரிகட்டி இழுக்கப்படும் சண்டை.

மஹதி உள் அறைக்குச் சென்று பையையும் கைப்பையையும் ஷெல்பில் வைத்தாள். முகம் கைகால் கழுவிக் கொண்டு வந்தாள். பீச்சில் ஒரு கக்கு காபி குடித்ததோடு சரி. மதியம் ஒரு மணிக்கு இன்டர்வியூ என்பதால் பதினொரு மணிக்கே சாப்பிட்டதாகப் பேர் பண்ணி விட்டு கிளம்பி இருந்தாள். பசித்தது.

இதே ஆறு மாதத்திற்கு முந்தைய வீடாக இருந்திருந்தால், ''ஜான்... ஜானு... டிபன் ரெடியா?'' என்று ஜானம்மாவின் தோளைக் கட்டித் தொங்கி இருப்பாள்.

''போதுமே... இன்னும் ரெண்டு வயசு போகட்டும். அம்மா கழுத்தைக் கட்டித் தொங்கலாம்.'' பாட்டி விளையாட்டாய் நொடிப்பார்.

''ஏன், எங்கம்மா நான் கொஞ்சறேன். உனக்கேன் நோவுது கிழவி.'' பாட்டியைச் சீண்டுவதில் அத்தனை ஆனந்தம்.

''அடி செருப்பால. புருஷன் வீட்டுக்குப் போற வயசுல இதென்ன மரியாதை இல்லாத கொஞ்சல்?'' பாட்டி போலியாய் கோபம் காட்டி சீறுவார்.

''புருஷன் வீட்டுக்குப் போனா, நான் இந்த வீட்டுப் பெண் இல்லைன்னு ஆயிடுமா பாட்டி?''

ஜானம்மாவால் இதற்கு மேல் தாங்க முடியாது.

''நீ எப்பவும் இந்த வீட்டுப் பெண் தான்டீ பெண்ணே'' சொல்லும் போதே ஜானம்மாவின் கண்களும் மனமும் நெகிழ்ந்து தளும்பிவிடும்.

அந்த வார்த்தைகளின் ஆழம் அனைவரையும் தாக்க, ஒரு நொடி அப்படியே அமைதியாகும் வீடு.

அன்று நிலவிய அந்த அமைதிக்கும் இன்றைய அமைதிக்கும் தான் எத்தனை வித்தியாசம்!

பதினொரு மணிக்கு வீட்டை விட்டுப் போன பெண். கையில் காசும் அதிகம் இருக்காது. பசிக்குமே என்று மனம் பதறாதா? பதறித் துடித்த மனம் தானே. இப்போது பாறையாய் எப்படி இறுகிப் போனது?

சொந்த வீடுதான். என்றாலும் தன்மானம் என்ற ஒன்று இருக்கிறதே. முகம் கொடுத்துப் பேசாத இடத்தில் பசி என்று போய் நிற்பதா? மனதிற்குத் தெரியும் மான அவமானம், வயிற்றுக்குத் தெரிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்.

மெல்ல ஹாலுக்குப் போனாள். அண்ணி ஏதோ அந்த வீட்டிலேயே பிறந்து வளர்ந்த பெண் போல் மிகச் சுவாதீனமாய் டி.வி. ரிமோட்டைக் கையில் எடுத்துக் கொண்டு சேனல் மாற்றிக் கொண்டிருந்தாள். தான் அந்த வீட்டில் அனுபவித்த சலுகைகள் தன் கண் முன்னே கைமாறி விட்டதே என்று தோன்றியது.

அன்று அவளுடன் இன்டர்வியூவிற்கு வந்திருந்த தோழி சசி சொன்னது நினைவில் மோதியது.

''உனக்கு பொசஸிவ்னெஸ் மஹி.



அதான், உன் அண்ணி வருகையை உன்னால தாங்க முடியலை.''

உண்மைதான்! பொதுவாக பெண்களுக்குப் புதிதாக வரும் மருமகள் மீது சந்தேகமும் பயமும் எழுகிறது. அதுவரை தங்கள் மீது பாசம் வைத்த பிள்ளை நிறம் மாறி விடுவானோ என்கிற ஆதங்கம், மருமகளை எதிரியாகவே பார்க்க வைக்கிறது. உரிமையை நிலைநாட்ட பிள்ளையின் அம்மாவும் சகோதரிகளும் எடுக்கும் நடவடிக்கைகளே மருமகளுடன் சண்டைக்கான பிள்ளையார் சுழியாய் அமைகிறது.

ஆனால், தன் வீட்டில் அப்படியா நடந்தது? தன் வயதொத்த, தன் உணர்வுகளைப் புரிந்து கொள்ளப் போகிற ஒரு உற்ற தோழியின் வருகையாய்த் தானே அண்ணியின் வருகையை எதிர்பார்த்திருந்தாள். விழுந்து விழுந்து அண்ணிக்காக புடவையை தேர்ந்தெடுத்தாளே. அண்ணியின் விருப்பம் கேட்டு அண்ணனின் படுக்கை அறைக்கு இளநீல வண்ணம் அடிக்க வைத்தாளே. தனக்கு சுடிதார் எடுக்கும் போது, அண்ணிக்கும் ஒன்று எடுத்தாளே! எந்த இடத்திலாவது வித்தியாசம் பாராட்டினாளா?

அண்ணனின் திருமணம் முடிந்து அண்ணி வீடு வந்த பிறகும் அன்பாய்த்தானே நடந்து கொண்டாள். இருந்தும் எங்கு, ஏன் தவறு நடந்தது?

''காபி குடிக்கறியா?'' சுவரிடம் கேட்பது போல் ஜானம்மா கேட்டார்.

மறுத்து விட தன்மானம் தவித்தாலும் அல்ப வயிறு அலறியது.

''ம்'' என்றாள்.

அப்போது தான், கழுவிய முகத்தைத் துடைத்தபடி அண்ணி அருகே சேகர் அண்ணன் வந்து அமர்ந்திருப்பதை அவள் கவனித்தாள். வழக்கமாய் அவளைப் பார்த்தவுடன் பூவாய் மலரும் முகம் இப்போதெல்லாம் பாறையாய்த்தான் இறுகிக்கிடக்கிறது. இப்போது கூடுதலாய் ஒரு அழுத்தம் தெரிவது போல் இருந்தது.

என்ன சண்டைக்கு இது துவக்கமோ! எண்ணத்தை ஒதுக்கிவிட்டு காபியை பருகினாள். களைத்த உடலுக்கு சுகமாய் இருந்தது.

சேகரும் காபியை பருகிவிட்டு இவளை நேராகப் பார்த்தான். ஒரு உலக யுத்தத்தின் துவக்க உரை அதில் இருந்தது.

''எத்தனை மணிக்கு இன்டர்வியூ முடிஞ்சது?''

அவளுக்கு ஆயாசமாய் இருந்தது. இருந்தாலும் சொன்னாள்.

''மூணு மணிக்கு.''

''இப்ப மணி என்ன?''

''ஆறரை''

அவன் அவளை முறைத்தான். தன் அம்மாவை நோக்கி அதே வேகத்தில் திரும்பினான்.

''அவளைத் திட்டறேன்னு மட்டும் சொல்நீங்களே... வயசுப் பொண்ணு, மூணு மணி நேரம் என்ன செஞ்சுகிட்டு இருந்தாளாம்?''

''சொல்லேன்டீ'' சேகரின் அதட்டலில் அடிபட்டு மங்கா பாட்டி இவளிடம் எரிந்து விழுந்தார்.

''பீச்சுக்குப் போயிருந்தேன்.''

''யாரோட?''

''சசி கூட''

''பொய்''

''இல்ல நிஜம்.''

''அப்ப நாங்க உன்னைத் தனியா ஒரு பையனோட பார்த்தது பொய்யா? தோள்ல பையை மாட்டிக்கிட்டு நீ கிளம்பவும், அவன் டாட்டா காட்டினதையும் தான் என் ரெண்டு கண்ணால பார்த்தேனே.''

அவள் அடிபட்டுப் போனாள். இனி என்ன வாதாடியும் பயன் இருக்கப் போவதில்லை. இருந்தும் விளக்க வேண்டியது தன் கடமை.

''அண்ணா, உண்மையா சசி கூடத்தான் பீச்சுக்குப் போனேன். அவ கிளம்பிப் போன பிறகு ஒரு பத்து நிமிஷம் தனியா உட்கார்ந்திருந்தேன். நீ சொன்ன அந்தப் பையன் யாருன்னே எனக்குத் தெரியாது. அவன் அங்க வந்தவுடனே நான் கிளம்பிட்டேன். அந்த சமயத்துல தான் நீ பார்த்திருக்கணும் என்னை''

சேகர் நக்கலாய் சிரித்தான். அம்மா, பாட்டி இருவரையும் பார்த்தான்.

''நம்பறீங்க?'' என்றான். பிறகு இவளிடம் திரும்பி சிரித்தபடி, ''சொல்றது சொல்றே நம்பும்படி ஒரு கதை சொல்லக்கூடாது?''

அவளுக்கு ஆத்திரம் வந்தது.

'பொறுமையா இரு. பொறுமையா இரு' என்று சசி படித்துப் படித்துச் சொன்னதெல்லாம் ஒரு நொடியில் மறந்து போனது.

''கற்பனையா சொன்னா நம்பும்படி கோர்வையா சொல்லலாம். உண்மை சம்பவம் சில நேரம் இப்படித்தான் முன்பின் இடிக்கும். அண்ணி கூட ஒரு ஆண் நின்னு ஒரு வார்த்தை பேசினாக் கூட இப்படித்தான் நீ சந்தேகப்படுவியா அண்ணே?'' பளிச்சென்று கேட்டு விட்டாள்.

சேகருக்கு கோபத்தில் உடல் நடுங்கியது. கையை ஓங்கி விட்டான். ஜானம்மா குறுக்கே வந்து தடுத்தார்.

''பார்த்தியா? என்ன பேச்சு பேசறா உன் வளர்ப்பு மக'' என்றவன் மஹதியின் பக்கம் பல்லைக் கடித்தபடி திரும்பினான். ''அவளைப் பத்தி பேச உனக்கு தகுதி கிடையாது.''

''ஏன் கிடையாது? நான் என்ன மானத்தைக் காத்துல பறக்க விட்டிருக்கேனா? ஆறு மாசமா தெரிஞ்ச மனைவியை நம்ப நீ தயார். அதே, பிறந்தது முதல் உன் கூடவே வளர்ந்த என்னை சந்தேகப்படுவே. யார் சொல்லிக் கொடுத்து நீ ஆடறேனு நல்லாவே தெரியுது!''

''பேசினே பல்லு முப்பத்திரண்டையும் பேத்துடுவேன். என்ன, ஜாடையா என் பொண்டாட்டியைப் பத்தி பேசறே நாயே...''

''அண்ணா வார்த்தையை அளந்து பேசு. இதே உன் கல்யாணத்துக்கு முன்னால இப்படி ஒரு காட்சியை பீச்ல பார்த்திருந்தா நீ அந்த ஆளை அடிச்சுட்டு, என்னை உன் கூட கூட்டி வந்திருப்ப. இப்ப பேடி மாதிரி உன் மனைவி பின்னாடி வீட்டுக்கு ஓடி வந்துட்டு, நல்லவன் மாதிரி நடுக்கூடத்துல நின்னு என்னை பேசறே...''

அவ்வளவு தான். அவள் சொல்லி முடிக்கும் முன் பளீரென்று மின்னல் வேகத்தில் அவள் கன்னத்தில் இறங்கியது, அவன் கை.

''மேலே பேசினே, கொன்னுடுவேன்.''

இத்தனையும் கேட்டுக் கொண்டு அண்ணி வனிதா மவுனமாய் உட்கார்ந்திருந்தாள். ஜானம்மா உணர்வை மறைத்துக் கொள்ள சமையலறைக்குள் புகுந்து கொண்டார்.

''வாயக் கொடுக்காம இரேன்டி பெண்ணே'' என்றபடி மங்கா பாட்டியும் உள்ளே போனார்.

அண்ணன் அடித்துத் திட்டியதை விட, 'உன் வளர்ப்பு மக' என்று சொன்னது அதிகம் வலித்தது.

உண்மை வலிக்கும் தானே!

**மொட்**டை மாடி ஓவர் ஹெட் டாங்கின் கீழ் கால்களைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்தாள், மஹதி. அங்கிருந்து பார்த்தால் பக்கத்து பிள்ளையார் கோவில் கோபுரம் கம்பீரமாய் தெரியும். மாலை விளக்கு வைக்கும் நேரம் எம்.எஸ்., பாலமுரளிகிருஷ்ணா, சீர்காழி, சுசிலா, ஜேசுதாஸ் என்று பக்திமணம் கேசட் மூலம் பரப்புவார்கள். சலசலவென்ற வேப்பமரக் குளிர் காற்றும்; பக்திப் பாட்டும் மனதிற்கு உற்சாகமாய் இருக்கும். மெல்ல எழும் சந்திரன் தென்னங்கீற்றின் வழியே கண்ணாமூச்சியாடுவான்.

பலநாட்கள் சேகருடன் அமர்ந்து இருட்டும் வரை இங்கே மஹதி பாடம் படித்திருக்கிறாள். பொறுமையாய் பாடம் சொல்லித் தருவான். நிறைய டிப்ஸ் தருவான்.

''பரீட்சைக்குப் படிக்க எல்லாத்தையும் எழுதிடறது மட்டும் முக்கியம் இல்ல, மஹதி பேப்பரை எப்படி 'பிரெசன்ட்' பண்ணறேங்கறதும் முக்கியம். அடசலா பக்கம் பூரா எழுதாதே. பேப்பரோட மூணு பக்கமும் மார்ஜின் விடு. கடைசி சில பக்கங்கள் கிறுக்கலா போகும், அதைத் தவிர்க்க டயத்தை பிளான் பண்ணி ஒரு கேள்விக்கு இத்தனை நிமிஷம்னு ஒதுக்கி எழுது. நூத்துக்கணக்கான பேப்பர்களைத் திருத்தறவங்களுக்கு கையெழுத்து பளிச்சுனு இருக்கற பேப்பரைப் பார்த்தவுடனே நிம்மதியா இருக்கும். சைக்காலஜிக்கலா ஒர்க் அவுட் ஆகும் விஷயம் இது. குறிச்ச நேரத்துல எழுதணும்னா, வீட்ல நிறைய எழுதிப் பழகணும்.''

அவன் சொன்னபடி செய்திருக்கிறாள். வகுப்பிலேயே அதற்கான பலனும் கிடைத்திருக்கிறது. ஆசிரியர்களே அவள் பேப்பரைக் கொடுக்கும் போது ''குட், நல்ல மதிப்பெண்களுக்காக மட்டுமில்ல மஹதி. பேப்பர் நீட்டா, அழகா செஞ்சிருக்கே. இதே மாதிரி பெரிய பரீட்சையிலயும் செய்ம்மா'' என்று சொல்வார்கள்.

உற்ற தோழனாய், நல்ல சகோதரனாய் இருந்தவன் இன்று அடிக்கிறான். நாக்கில் நரம்பில்லாமல் பேசுகிறான். தனியாய் தங்கையை ஒரு இடத்தில் பார்க்கும் சகோதரன், 'இங்க என்ன பண்ணறே?' என்று சாதாரணமாய் அங்கேயே கேட்க மாட்டானா? அதுவும் அறிமுகம் இல்லாத ஒரு ஆண் தங்கை அருகே நிற்பதைப் பார்த்தால், 'யார் இது?' என்று தங்கைக்குப் பாதுகாப்பாய் நிற்க மாட்டானா? அதையெல்லாம் விட்டுவிட்டு வீட்டில் நிற்க வைத்து கேள்வி கேட்டு அடிக்கிறான்.

'என் தங்கை பத்தி எனக்குத் தெரியும். அவ நெருப்பு' என்று பரிந்து பேச வேண்டியவன், புது மனைவி முன் விட்டுக் கொடுத்து விட்டான். அவளுக்கு அழுகை பொத்துக் கொண்டு வந்தது. அவள் அதுவரை அதிகம் அழுததில்லை. அவளைப் பொருத்தவரை, மனம் நெகிழ்ந்த நிலையில் அன்பையோ ஆனந்தத்தையோ வெளிப்படுத்த கண் கலங்குவது தான் உத்தமமானது. மற்ற நேர அழுகை மனதை பலவீனப்படுத்தி சுயகழிவிரக்கத்திற்கு வழி வகுத்து ஆளைக் கீழே தள்ளி விட்டுவிடும். அதனால், எதையும் துணிவுடன் ஏற்க வேண்டும், கலங்கக் கூடாது என்று தான் நினைப்பாள்.

ஆனால், இப்போது அந்த சுயகட்டுப்பாட்டையும் மீறி அழுதாள். அண்ணன் தன்னை சந்தேகப்பட்டது, திட்டி அடித்தது எல்லாவற்றையும் விட 'வளர்ப்பு மகள்' என்று சொன்னது அதிகம் வலித்தது. இந்த இருபது வருடத்தில் ஒருநாள் கூட அந்த வீட்டில் யாரும் இப்படிச் சொன்னதில்லை.

நேரமாகி விட்டதென்று சமயத்தில் ஸ்கூட்டரில் தன்னை கல்லூரியில் இறக்கிவிடச் சொல்லி சேகரிடம் கெஞ்சுவாள்.

''இதுக்கு ஏன்டா செல்லம் கெஞ்சறே? ஏறு''

''உனக்கு லேட்டாயிடுமே, அண்ணா''

''ஒருநாள் தங்கைக்காக லேட்டா போறேன் போ. என்னாயிடும்?''

அவன் பின்னே வண்டியில் தொற்றும் போது செல்லமாய் சீண்டியிருக்கிறாள். ''இந்த பின் சீட் உரிமையெல்லாம் இன்னும் கொஞ்ச நாள் தான் இல்லண்ணே? உனக்குனு ஒருத்தி வந்த பிறகு தங்கையெல்லாம் கண்ணுக்குத் தெரிவேனா என்ன?''

''ஏன்டா அப்படிச் சொல்றே? நீ தானே எப்பவும் இந்த வீட்டு இளவரசி.''

வீட்டு இளவரசி இன்று கேட்பார் இல்லாமல் அழுது கொண்டிருக்கிறாள்.

வேலை அடக்க முயலும் போது வளையோசையும் பேச்சுக்குரலும் கேட்டது. அண்ணனும் அண்ணியும் தான். காயப்போட்ட துணிகளை எடுக்க வருகிறார்கள் போலும். திருமணத்திற்கு முன் அண்ணன் இது போன்ற எந்த வீட்டு வேலையும் செய்ததில்லை. மங்கா பாட்டி ஜாடையாய் இது பற்றி பேசிய போது கூட, மஹதி அண்ணிக்கு ஆதரவாய் தான் பேசியிருக்கிறாள்.

''சின்னச் சின்ன விஷயத்துல, வீட்டு வேலையில ஒரு ஆண் பெண்ணுக்கு உதவி செஞ்சா தப்பா பாட்டி? நாளைக்கு எனக்கே கல்யாணமான பிறகு மாப்பிள்ளை இப்படி எனக்கு உதவி செஞ்சா அப்ப உச்சி குளிரும் இல்ல உனக்கு!''

விழுந்து விழுந்து பரிந்த அண்ணியே தனக்கு இப்போது பாதகமாய் இருக்கிறாள்.

அவள் அங்கு அமர்ந்திருப்பது அவர்களுக்குத் தெரியாது. எழுந்து அவர்களைக் கடந்து கீழே

# விபா, வரையும் அழகு ஓவியங்கள்

**விபா** மோதக் வரையும் ஓவிய காவியங்கள், காண்போரை விழி விரிய வைக்கின்றன. மராட்டிய மாநிலம், வார்தா நகரத்தை சேர்ந்த இவர், பழம்பெரும் ஓவியங்களை அப்படியே நிதர்சனப்படுத்தி விடுகிறார். விபாவுக்கு நவீன ஓவியமும் வரைய தெரிந்திருக்கிறது. இவரை அங்குள்ளோர் 'லேடி டிராயிங் பிரம்மா' என்றே அழைக்கிறார்கள்.

இவரது அப்சரஸ் ஓவியங்களுக்கு உள்நாட்டில் மட்டுமின்றி வெளிநாடுகளிலும் அமோக மவுசு. விபா ஆண்டவனின் ஓவியங்களை வரைய அதிக முக்கியத்துவம் கொடுக்கிறார். இவரது தூரிகை இறைவனின் சொரூபத்தை அப்படியே தத்ரூபமாக பிரசன்னப்படுத்துகிறது.



''ஆயில் பெயிண்டிங் ஓவியங்கள் வரைய கவிதை மூடு உருவாக்கும் ரம்மிய சூழல் தேவை'' என்று குறிப்பிடும் விபா 'டிராயிங்' தவிர்த்து மிச்ச மீதி நேரங்களில் இயற்கையை ரசிக்க கிளம்பி விடுகிறார்.

''நான் வரைகிற ஒவ்வொரு ஓவியமும் எனக்கு குழந்தை போல'' என்று பெருமை பொங்க கூறும் இவர் இதுவரைக்கும் 150 ஓவியங்களை வரைந்து சகாப்தம் படைத்து உள்ளார்.

-ப.சந்தானலட்சுமி.

இறங்கி விடலாம் என்று தான் நினைத்தபடி எழுந்தாள். அதற்குள் அவர்கள் பேச்சு தன்னைப் பற்றி தான் என்பது புரிய, அப்படியே நின்று விட்டாள்.

இந்த நிலையில் அவர்களைக் கடந்து போவது அவர்களை இக்கட்டில் மாட்டும். பல்லைக் கடித்துக் கொண்டு நின்றாள். அவள் விரும்பாமலே அவர்கள் பேச்சு அவள் காதில் விழுந்தது.

''என்ன பேச்சு பேசறா பாருங்க உங்க தங்கை. நான் ஏதாவது பேசினேனா? என்னை எதுக்கு வம்புக்கு இழுக்கறா?''

''அதான் பலிக்கனு விட்டேன் ஒண்ணு.''

''உங்க தங்கை யார் கூடவோ பேசிக்கிட்டு இருக்காளேன்னு ஒரு ஆதங்கத்துல உங்ககிட்ட சொன்னேன். அவ்வளவு தான். அது தப்பா? வேறு ஏதாவது சொன்னேனா?''

''இல்லம்மா... நான் உன்னை எதுவும் தப்பா சொல்லலையே.''

''ஒரு அண்ணனுக்குக் கண்டிக்க உரிமை கிடையாதா?''

''அது அந்த நாய்க்குப் புரியலை. விடு.''

''அதுக்காக அப்படியா பேசறது?''

''இந்த வீட்ல அவ இளவரசி மாதிரி இருந்தா. நீ வந்ததுல தன் உரிமைகள் பாதிக்கப்படும்னு ஒரு காம்ப்ளக்ஸ்''

''அதுக்குத் தாங்க வயசுப் பொண்ணுங்க இருக்கற வீட்ல, முதல்ல அண்ணன்களுக்கு கல்யாணம் பண்ண யோசிப்பாங்க.''

''நீ சொல்றது சரி, வனி... ஆனா, நம்ம கல்யாணம் நடந்தப்ப அவ ஃபைனல் பி.காம். படிச்சுகிட்டு இருந்தா. ஐசிடபிள்யுஏ வேற சேர்ந்திருக்கா. படிப்பை முடிக்காம கல்யாணம் செஞ்சுக்க மாட்டேன்னு சொல்லிட்டா. அந்த சமயம் பார்த்து உன் ஜாதகம் எங்க கைக்கு வந்தது. நல்ல இடம்னு வீட்ல ஆர்வம் காட்டினாங்க. எனக்கு வேற உன்னை பிடிச்சுப் போச்சா...''

அண்ணியின் இடைப்பற்றி அண்ணன் வழிவது புரிந்தது.

நெருப்பின் மீது நிற்பது போல் நின்றாள் மஹதி.

''போதும், வழிய ஆரம்பிச்சுட்டீங்க. கீழப் போகலாம். வீட்ல பேசி முதல்ல அவ கல்யாண விஷயமா முடிவெடுங்க. ஆமா, பணம் காசு நாம தான் செலவழிக்கணுமா? அவ அப்பாம்மா கொடுப்பாங்களா?''

பேச்சுக்குரல் தேய்ந்து மறைந்தது.

மஹதி அப்படியே உட்கார்ந்து விட்டாள்.

## 3

**க**டற்கரையில் மஹதி விருட்டென்று எழுந்து போனதை நினைத்துப் பார்த்த போது விகாஷ் சிரித்துக் கொண்டான். ஒரு குழந்தையை வலுக்கட்டாயமாய் அழைத்தால் சிணுங்கிக் கொண்டு ஓடுமே, அது போல் இருந்தது அவள் பாராமுகம் அவனுக்கு.

சில மாதங்களுக்கு முன்பு வரை கண்டதும் காதல்- ஏன் காதல் என்று சொன்னாலே கைகொட்டிச் சிரித்தவன் தான் விகாஷ். எல்லாம் பக்கத்து வீட்டு நவீனின் பிறந்தநாள் விழாவில் மஹதியைப் பார்க்கும் வரைதான்.

அதென்ன அதிசய ரசாயன மாற்றம்! மனமும் உடலும் பரபரத்து, மூளை என்பது கட்டுப்பாட்டை இழந்து, வெளி உலகமான அவமானமே மறந்து 'யார் இவள்? யார் இவள்?' என்று கண்ணும் மனமும் அவளையே சுற்றி...

'நவீனுக்கு உறவா? யார் இவள்?'

மன்மதன் தன் பாணத்தை விகாஷை நோக்கி விட்டது அப்போதுதான். அவளைப் பற்றி அறிய அவன் தவித்துத் துடித்துத்தான் போனான்.

அவர்கள் வீட்டுக்கு இந்தப் பெண் வந்ததில்லையே. அப்படியென்றால் தூரத்து உறவா? யாரிடம் கேட்பது? நவீனிடமேவா? பதினைந்து வயதுச் சிறுவனிடம் கேட்பது சரியா? ஆசை வெட்கம் அறியாது தான். ஆனால், பலர் சூழ நிற்கும் பிறந்த நாள் பையனிடம் உடனே கேட்க முடியுமா? அந்தப் பெண்ணிடமே கேட்டு விட்டால்...

நினைத்த அடுத்த நொடி அந்தப் பெண் முன் போய் நின்றான்.

''ஹாய், ஐ'ம்...''

அவள் சட்டை செய்யவே இல்லை. 'நீ யாராய் இருந்தால் எனக்கென்ன?' கண்களில் அலட்சியத்தை கொட்டி விட்டு நகர்ந்தாள்.

ஒரு ஜோடிக் கண்களில் இத்தனை வெறுப்பைக் கொட்ட முடியுமா? அவன் வாக்கியத்தை முடிக்காமல் அப்படியே நின்றான்.

அவனை இதுவரை யாரும் அலட்சியப்படுத்தியதில்லை. அவனின் இயல்பான நகைச்சுவையும் உதாரக்குணமும் அனைவரையும் கவரும். எப்போதும் அவனைச் சுற்றி ஒரு கூட்டமே இருக்கும். யாருக்கும் உதவும் குணமும் இனிய சொல்லும் உள்ள அவனை யாரும் 'தள்ளி நில்' என்று ஒரு வார்த்தை சொன்னதில்லை. முதல் மறுதலிப்பு அவனை ஒரு அசைப்பு அசைத்து விட்டது.

காரணமே இல்லாமல் இந்தப் பெண் ஏன் தன்னை வெறுக்க வேண்டும். அந்நிய ஆடவரைக் கண்டவுடன் இயல்பாய் ஒரு பெண் ஒதுங்கும் பண்பாட்டு விலகலாய் இது இல்லை. ஆனால், அவளையே கவனித்ததில் அவள் யாரிடமும் ஒட்டாமல் விலகியே நிற்பது புரிந்தது. ஏதோ நிர்ப்பந்தத்தில் வந்தது போல்- முள் மேல் நிற்பது மாதிரி நிற்பது புரிந்தது.

அந்த சமயம் பார்த்து அங்கு வந்த நவீனை பிடித்து கிசுகிசுப்பான குரலில் கேட்டான் ''ம்... அது யாரு உன் பாட்டி பக்கத்துல உட்கார்ந்து இருக்கே... அந்தப்...''

அவன் தயங்கித் தயங்கி துவங்க, நவீன் மிக அலட்சியமாய் ''அவளா? மஹதி... என் சிஸ்டர்.'' என்றான்.

''கஸினா?''

''அட, சொந்த அக்காப்பா'' என்றவன் அதற்கு மேல் நிற்காமல் அடுத்த நபரிடம் நகர்ந்து விட்டான். நவீன் அதற்கு மேல் அவளைப் பற்றி பேச விரும்பாதது போல் இருந்தது.

அவனுள் விடை தெரியாத ஆயிரம் கேள்விகள். மஹதி, இதே வீட்டுப் பெண்ணா? ஒட்டுதல் இல்லாமல் ஏதோ அந்நியர் போல் அல்லவா நிற்கிறாள். அதுவும் வெறுப்பு வெளிப்படையாய் தெரிய. ஏன் இப்படி?

அந்த இரவு முழுவதும் அவனுக்குத் தூக்கம் வரவில்லை. முள் குத்துவது இயல்பு. மலர் ஏன் குத்துகிறது?

**ம**றுநாள் மாலை அலுவலகம் விட்டு வரும்போது நவீனின் அம்மா ராதா வெளியே நின்று கொண்டிருந்தாள்.

இவனைப் பார்த்தவுடன் முகம் மலர ''விகாஷ், நல்லவேளை கடவுளாப் பார்த்து அனுப்பினா மாதிரி வந்து நிக்கற. வீட்ல ஃப்யூஸ் போயிடுச்சு. கொஞ்சம் போட்டுத் தரியா?''

அவனுள் மஹதியைப் பற்றிய குறுகுறுப்பு அடங்காமல் அலைக்கழிக்கிறதே. இதுதான் சந்தர்ப்பம் என்று தோன்ற, ''அதுக்கென்ன ஆன்ட்டி.'' என்றபடி வீட்டுக்குள் நுழைந்தான்.

அவன் ஃப்யூஸ் போட்டு முடிப்பதற்குள் மணக்கும் ஃபில்டர் காபியோடு வந்துவிட்டாள் ராதா.

''அட, இதெல்லாம் என்ன பார்மாலிட்டீஸ் ஆன்ட்டி?''

''பார்மாலிட்டீஸ் இல்லப்பா. ஆபீஸ்லயிருந்து நேரா வரே. இந்தா பிடி. ஒரு வாய் காபி தானே?''

அவன் மெல்ல குடித்தான். மனதுக்குள் எப்படி மஹதி பற்றி பேச்சைத் துவங்குவது என்று கணக்கிட்டான்.

அமைதியான இந்த அம்மாள் பெற்ற மகளிடம் ஏன் அத்தனை படபடப்பும் வெறுப்பும்? ஏன் அந்த விலகல்? குறுகுறுக்கும் கேள்விகளுக்கு மட்டும் அவன் விடை தேடவில்லை. அவன் மனதைக் கவர்ந்து விட்டவளைப் பற்றி அறியும் ஆவலும் கூட.

''ஆன்ட்டி காபி ஏ.ஒன்.'' என்று காபிக் கோப்பையை மேஜை மீது வைத்தான். மெல்ல கனைத்துக் கொண்டு ''நவீன் பிறந்த நாள்ல சந்திச்ச மஹதி... உங்க பெண்ணா?'' மெல்ல மிக மெல்ல ரோஜாவின் ஒரு இதழைப் பிய்ப்பது போல் கேட்டு விட்டான்.

ராதா இதை எதிர்பார்க்கவில்லை. தலையைக் குனிந்து கொண்டாள்.

அவன் மனதுள் பதறிப் போனான். ஏதாவது கேட்கக் கூடாத கேள்வியைக் கேட்டு விட்டோமா? அவள்- அந்த மஹதி- அவமானச் சின்னமா? இந்த அம்மாளின் குனிந்த தலை அவமானத்தின் வெளிப்பாடா?

''சாரி, ஆன்ட்டி. நான் தப்பா ஏதாவது கேட்டிருந்தா...''

அவன் முடிக்கும் முன் அவசரமாய் தலை நிமிர்ந்து மறுத்தாள் ராதா. ''இது தப்பான கேள்வியா அமைய, மஹதி தப்பான வழியில பிறந்தவ இல்லைப்பா. நான் மலடியில்லனு ஊருக்குப் பறைசாற்ற பிறந்த என் தலைச்சன் குழந்தை. 'தாயார்'னு பட்டம் கொடுத்து என்னை தலை நிமிர வெச்ச செல்வம். ஆனா நிர்ப்பந்தத்துனால, நானும் ஒரு குந்திதேவியா நிக்கறேன்.''

அவன் புரியாமல் பார்க்க, தன் கதை முழுதும் அவனிடம் சொல்லத் துவங்கினாள் ராதா.

## 4

**ம**ஹதிக்குப் பணம் தேவைப்பட்டது- பரீட்சைக்குப் பணம் கட்ட டிராப்ட் எடுக்க வேண்டும். இன்னும் இரண்டு தினங்கள்தான்

இருந்தன. ஜானம்மாவிடம் நான்கு நாட்களுக்கு முன்பே சொல்லி இருந்தாள். கிணற்றில் போட்ட கல்லாக யாரும் எதுவும் அதுபற்றிச் சொல்லவில்லை.

ஆசையாய் ஐசிடபிள்யூஏ படி என்று அண்ணன்தான் சேர்த்து விட்டிருந்தான். வழக்கமாய் அவன் படிப்பிற்கு அவன்தான் பணம் கட்டுவான். இந்த முறை ஜானம்மா மூலம் நினைவுபடுத்தியும் இதுவரை பணம் கட்டுவது பற்றி அண்ணன் எதுவும் சொல்லவில்லை.

அவளுக்கு பயமாக இருந்தது. அண்ணி சொன்னது போல் படிப்பை போதும் என்று பாதியில் நிறுத்தி திருமணம் செய்து விடுவார்களோ என்று அஞ்சினாள். அதனால்தான், அண்ணன் வழக்கமாய் நினைவு வைத்துக் கட்டும் பணம் பற்றி ஜானம்மா மூலம் நினைவுபடுத்தினாள். ஆனால், பலன் தான் இல்லை.

உரிமையாய் வாழ்ந்த வீட்டில், என்னவோ கையேந்தி நிற்பது போன்ற ஒரு அவலம் மனதில் சூழ்ந்தது.

பணம் கட்டுவார்களா மாட்டார்களா?

மேலே படிக்க விடுவார்களா, மாட்டார்களா?

திருமணம் பேசி முடித்து விடுவார்களோ?

மன உளைச்சலில் தலைவலி வந்ததுதான் மிச்சம். மீண்டும் ஒருமுறை ஜானம்மாவிடம் நினைவுபடுத்தி விடுவோம் என்று அவள் எழுந்தபோது தான் தொலைபேசி மணி அடித்தது.

அண்ணிக்காக இருக்கும் என்று அலட்சியமாய் ''ஹலோ'' என்றாள்.

எதிர் முனையில் சற்றே மவுனம் நிலவ மீண்டும் அவள் ''ஹலோ'' என்றாள்.

''நா... நான்... அம்மா பேசறேன்டா மஹதி'' குரல் தழுதழுப்பாய் வெளிப்பட்டது.

ஒரு நொடி தயங்கிய மஹதி ரிசீவரை டொக்கென்று வைத்தாள்.

உள்ளேயிருந்து மங்கா பாட்டி எட்டிப் பார்த்தாள். ''யாரு போன்ல?''

ஒரே நொடி மவுனம் சாதித்த மஹதி, ''ராங் நம்பர்'' என்றாள் எந்த மாற்றுச் சிந்தனையும் இன்றி. மனம் இறுகிப் போனது. தன் தற்போதைய நிலைக்கு இந்த அம்மாதானே காரணம். வெறுப்பு மனம் முழுவதும் நிறைந்தது.

ஜானம்மாவைத் தேடிப் போனாள்.

''என்ன, மஹதி?''

இரவு சமையலுக்கு காய் நறுக்கிக் கொண்டிருந்த ஜானம்மாவின் கைகள் வேகமாக, லாவகமாக இயங்கும் அழகை ஒரு நொடி ரசித்தாள் மஹதி.

''பரீட்சைக்கு டிராப்ட் எடுக்கணும்மா. வெள்ளிக்கிழமை கடைசி தேதி''

''ம்...'' என்று சற்றே இழுத்தார் ஜானம்மா.

''அண்ணா கிட்ட சொல்றியா?''

''ம்'' சுரத்தின்றி வந்தது அந்த ஒற்றைச் சப்தம்.

மஹதிக்கு சுரீரென்றது.

ஏன் இப்படி சுரத்தின்றி சொல்கிறாள்? தனக்கு பணம் கட்ட வீட்டில் ஒருவருக்கும் மனமில்லையா? இந்தக் கோர்ஸ் சேர்ந்த போது எல்லோரும் எவ்வளவு உற்சாகம் காட்டினார்கள். இப்போது காற்றுப் போன பலூனாய் எங்கே போனது எல்லாம். அண்ணன்தான் அண்ணியால் மாறிப் போனால் ஜானம்மா கூடவா?

''அம்மா''- 'நீ கூடவா' என்பது போல் அடிபட்ட பறவையாய் ஒலித்த மஹதியின் குரல் ஜானம்மாவை பாதித்து விட்டது.

சட்டென்று நிறைந்த கண்களைத் தழைத்துக் கொண்டார். வேர்வையைத் துடைப்பது போல் புடவைத் தலைப்பால் கண்களையும் ஒற்றிக் கொண்டார் ஜானம்மா.

மென் குரலில் ''நாளைக்கு அப்பாவோட பென்ஷன் வந்துடும். எடுத்துக் கட்டிடலாம்''

# யானைகள் இசைக்குழு!

ஐந்தறிவு யானைகளின் சங்கீதஞானம், ஆறறிவு மனிதனுக்கே சவாலாக விளங்குகிறது. தாய்லாந்தின் லாபங்க் நகர யானைகள் பராமரிப்பு மையம், களிறுகளின் மியூசிக் ஆர்வத்தை ஊக்குவிக்கும் பொருட்டு 'எலிபெண்ட் மேஸ்ட்ரோ ஆர்கெஸ்ட்ரா' இன்னிசை குழு ஒன்றை ஏற்படுத்தி உள்ளது.

இதில் நான்கு யானைகள் பேண்டு வாத்தியம், ஆர்மோனியம் உள்ளிட்ட இசைக்கருவிகளில் நிபுணத்துவத்துவம் பெற்று திகழ்கின்றன. இவை போடும் டியூன்கள், சகல தரப்பினரையும் தலையாட்ட செய்கிறது.

யானைகள் தும்பிக்கையில் 'ஸ்டிக்' சுழற்றியபடி லாவகமாக இசை அமைப்பதுடன் குத்தாட்டம் போடவும் தவறுவதில்லை. 'எலிபெண்ட் மேஸ்ட்ரோ ஆர்கெஸ்ட்ரா' கச்சேரியில் பாடகிகள் சரணத்தை எடுத்து விட்டால் போதும், களிறுகள் கன ஜோராக பாடலுக்கு பல்லவி அமைத்து விடுகிறது. அதிலும் குறிப்பாக டப்பாங்குத்து பாடல் என்றால், யானைகளுக்கு ரொம்பவும் இஷ்டமாம். இந்தக்குழுவின் பயிற்சியாளரான ரிச்சர்டு லா, களிறுகளின் இசைக்கச்சேரியை ஆடியோவில் பதிவு செய்து வெளியிட்டு உள்ளார்.

இதற்கு அங்கே நல்ல வரவேற்பு இருக்கிறதாம். இன்னிசைக் குழுவில் 'டயானா' எனப்படும் பெண் யானை மியூசிக் டைரக்டராக செயல்படுகிறது.

தாய்லாந்து நாட்டின் கோவில் திருவிழா மற்றும் விசேஷ வைபவங்களில் கச்சேரி வைத்து கதிகலக்கும் யானைகள் தொழிலுக்கு கிளம்பும் முன்பாக நீராடுவது இங்கே குறிப்பிடத்தக்க அம்சம். களிறுகளின் கானா மியூசிக் சங்கீத ஞானிகளின் யானைப் பசிக்கு சோள பொரிதான் என்றாலும் இவைபோடும் மெட்டுக்கள் சுருதி சுத்தமாகவே இருக்கிறதாம்.

தாய்லாந்து தலைநகர் பாங்காங்கில் இந்த யானைகளின் கச்சேரி தான் இப்போது அங்கே 'டாக் ஆப் தி டவுன்'.

-சந்தியா சென்.





மென்று முழுங்கி ஜானம்மா சொல்ல, மஹதி எங்கோ தவறு என்று புரிந்து கொண்டாள்.

சேகர் சம்பாதிக்கத் துவங்கியது முதல் அவன் சம்பளப் பணத்தில் தான் இதுவரை அவள் படிப்பிற்கான செலவுகளை கவனித்து வந்தது. இதென்ன புதிதாக அப்பாவின் பென்ஷனில்? அக்கறையாய் அம்மாவின் அருகே அமர்ந்தாள்.

''ஏதாவது பிரச்சினையாம்மா?'' மென்மையாய் கேட்டாள்.

ஜானம்மாவால் பேச முடியவில்லை. மகனையும் விட்டுத்தர முடியவில்லை. பெற்ற மகளையே பாரமாக நினைக்கும் உலகம் இது. ஆனால் சொந்த மகள் போல் வளர்த்த மஹதியை- தங்கை மகளை- என்றுமே வேறாய் நினைக்க முடிந்ததில்லை அவரால். ஆனால், வீட்டுக்கு வந்த மருமகளிடம் இதையே எதிர்பார்க்க முடிகிறதா? ரிடையரான கணவன், அம்மா, வளர்ப்பு மகன் என்று மகன் தயவில் தான் வாழும்போது மகளையும் மருமகளையும் அரவணைத்து, சற்று அடக்கித்தானே வாசிக்க வேண்டியுள்ளது. இனி மகன் குடும்பமும் பெருகும். நாளுக்கு நாள் ஏறும் விலைவாசி வேறு. அனுபவம் தந்த பொறுமை இத்தனையும் யோசித்து நடக்க உதவுகிறது. ஆனால் மஹதியின் இளம் ரத்தம் எளிதில் அல்லவா கொதித்து விடுகிறது.

சேகரும்தான் ஆகட்டும் மனைவியை அரவணைக்கும் அதே நேரம் தங்கையையும் ஆதரிக்க வேண்டும் என்று புரிந்து நடக்கக் கூடாதா? சொன்னால் 'மஹதியை வாயை அடக்கச் சொல்' என்கிறான். சின்னக் குழந்தையாய் இருந்தபோது கூட இப்படி அடித்துக் கொண்டதில்லை.

மஹதியின் திருமணத்தை முடிக்காமல் மகனின் திருமணத்தை நடத்தியது எத்தனை பெரிய தவறு.

ஜானம்மாவின் சிந்தனை ஓட்டம் புரியாத மஹதி அந்த மவுனத்தை வேறு விதமாய் புரிந்து கொண்டாள்.

''என் கிட்ட சொல்ல இஷ்டப்படலைன்னா, வேண்டாம்'' விருட்டென்று எழப்போனாள்.

ஜானம்மா அவள் கரம் பற்றி தன் அருகே அமர்த்திக் கொண்டார்.

''பிரச்சினை எதுவும் இல்லடா. உங்கண்ணி ஏதோ டிப்ளமோ கோர்ஸ் சேரப் போறாளாம். அதனால, அண்ணன் அதுக்குப் பணம் கட்டணுமில்ல. உனக்கு அப்பாவைக் கட்டச் சொன்னான். அதான் பென்ஷன் பணம் வந்ததும் கட்டலாம்னு சொன்னேன்.''

யதார்த்தமாய், கூடுமானவரை யாரையும் குறை சொல்லாத தொனியில் ஜானம்மா பேசினார்.

மஹதிக்குத்தான் குமுறிக் கொண்டு வந்தது.

அப்பா என்று அவள் அழைக்கும் பெரியப்பா ராகவனின் பென்ஷனில் குடும்பச் செலவுகள் அனைத்தும் அடங்கி விடும். பால், மளிகை, காய்கறி, மின் கட்டணம் எல்லாம் கட்டிவிட்டால் தினப்படி மேல் செலவுக்குக் கொஞ்சம் கையில் மிஞ்சும் அவ்வளவுதான். பெரி

யப்பா ஊரில் வீட்டை விற்று முன்பணம் தர, மேலே அண்ணன் லோன் போட்டுக் கட்டியது தான் இந்த வீடு. அண்ணனின் பணத்தின் கால் சதவிகிதம் லோனுக்குப் போய் விடும். கணிசமான ஒரு பகுதி சேமிப்பாய் போகிறது. மீதித் தொகையில் தங்கைக்கும் தனக்கும் தாராளமாய் செலவழித்தான் சேகர்.

அண்ணி வந்து அதற்கு 'தடா' போட்டு விட்டாள். படிப்பில் அதிகம் ஆர்வம் காட்டாதவள், டிப்ளமோ கோர்ஸ் சேருவதாகச் சொல்லி, தன் படிப்பிற்கும் அண்ணன் பணம் கட்டுவதைத் தடை செய்து விட்டாள் சாமர்த்தியமாய்.

சே, என்ன உலகம் இது. அப்பாவின் பென்ஷன் பணத்தில் எதிர்பாராத இந்தச் செலவை சமாளிக்க முடியுமா? அண்ணனால் இரண்டு பேருக்கான பணத்தையும் நிச்சயம் செலுத்த முடியும். அப்படியும், அப்பாவின் நிலை தெரிந்தும் தன்னால் பணம் கட்ட முடியாது என்று அண்ணா மறுத்து அப்பாவை கட்டச் சொன்னால், அவள் படிப்பின் மேல் அவனுக்கு அக்கறை இல்லை என்றுதானே அர்த்தம்.

''அப்பாவால எப்படிம்மா பணம் கட்ட முடியும்?''

அவள் குரலில் தெரிந்த பயத்தை ஜானம்மா புரிந்து கொண்டார்.

''கொஞ்சம் மளிகை, பால்னு எல்லாத்திலும் சிக்கனம் பிடிக்கலாம். இந்த மாசம் டெலிபோன், மின் கட்டணம் கிடையாது. சமாளிச்சுக்கலாம். கவலைப்படாதே''

ஆதரவாய் ஜானம்மா பேசினாலும் மஹதிக்குள் இனம்புரியாத கலக்கம் எழத்தான் செய்தது.

## 5

**வி**காஷ் புரண்டு படுத்தான். தூக்கம் வரவில்லை. நினைவு ராதாவைப் பற்றியே சுற்றித்திரிந்தது.

'மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா' என்று போற்றப்படும் நாட்டில் பெண்களுக்குத் தான் எத்தனை இடையூறுகள். அவனுக்கு ராதாவின் கதை கேட்டது முதல், மஹதியின் விசித்திர நடத்தைக்கான காரணமும் புரிந்தது. அவள் மீது ஏற்பட்டிருந்த இனம்புரியாத காதல் இரக்கமிகு பாசமாகவும் உருபெற்றது.

'பெண்ணே நீ வாழ்வில் புரிந்து கொள்ள வேண்டியது நிறைய இருக்கிறது. பலரை அறிந்து கொள்ள வேண்டும். முதலில் என்னை பற்றித் தெரிய வைக்கிறேன். பிறகு எல்லாம் தெளிய வைக்கிறேன்.'

மனதில் அவளை நிறுத்திப் பேசினான்.

இதுவரை புயலாய் தெரிந்த மஹதி தென்றலாய் மனதில் வீசினாள். அது திமிரால் வளையாமல் நிற்கும் நெடுமரமல்ல, அன்பென்ற நீர் காணாமல் வாடும் சிறு செடி என்பது புரிய காதல் இன்னும் ஆழமாய் வேர் ஊன்றியது.

'மஹதி, நீ தான் என் மனைவி,

உன்னை அன்பாய், மிக அன்பாய் வைத்துக் கொள்வேன்.

எந்தத் தடையையும் மீறி உன் கரம் பற்றுவேன். உன் மனதில் இடம் பிடிப்பேன். உன் மலர்ந்த முகத்தின் சிரிப்பொன்றே என் குறிக்கோள்.

கண்ணே, என்னைப் புரிந்து கொள்வாயா? என் அன்பை ஏற்பாயா?

என் அம்மாவிடமும் சீக்கிரமே உன்னை பற்றிப் பேசுகிறேன். இனி தனியாய் நான் புரள வேண்டாம்'.

நினைவின் தாலாட்டில் அவனை அறியாமல் அவன் உறங்கும் போது மணி விடிகாலை நாலடித்து விட்டது.

## 6

**மா**லைச் சூரியன் ஆரஞ்சுப் பந்தாக கடலை நோக்கி விழுந்து கொண்டிருந்தான். சூரியப் பந்தைக் கடலை நோக்கித் தள்ளும் மாயக் கால் எது என்று தேடுவது போல் மேகப் பஞ்சுகள் மிதந்து கொண்டிருந்தன. பறவைகள் கும்பலாய் வீடு திரும்பிக் கொண்டிருந்தன.

ஆர்ப்பரிக்கும் கடலுக்கும் அமைதியான அஷ்டலட்சுமி கோவிலுக்கும் இடையே கால்களைக் கட்டியபடி அமர்ந்திருந்தாள் மஹதி.

தானும் இப்படித்தான் அமைதிக்கும் அமைதியின்மைக்கும் இடையே ஊஞ்சலாடுவதாகப் பட்டது மஹதிக்கு. கடலலை போல் தன் மனதிற்கும் அமைதி என்பதே இருக்காதோ? நீறுபூத்த நெருப்பாக மனதில் வடு உள்ள வரை எப்படி அமைதி கிடைக்கும்?

''என்ன பலத்த யோசனை? சாரிடா, லேட்டாவந்துட்டேன்'' கூறியபடியே சசி தோள் பையை கீழே போட்டு விட்டு மஹதியின் அருகே அமர்ந்தாள்.

போன முறை கடற்கரையில் நடந்த சம்பவமும் அதன் தொடர்பாக வீட்டில் நடந்த ரகளைகளும் மனதில் மோத, சோகச் சிரிப்பை உதிர்த்தாள்.

புரியாமல் ''என்ன?'' என்றாள் சசி.

''நீ இன்னும் கொஞ்சம் லேட்டா வந்திருந்து, ஏதாவது கண்டல் பையன் என்கிட்ட பேசப் போய், அதை என் மதிப்பிற்குரிய அண்ணியார் பார்த்திருந்தா, வேற வினையே வேண்டாம்'' என்றவள் நடந்த சம்பவங்களை முழுவதும் விவரித்தாள்.

முடிவாய், ''ரொம்ப பயமா இருக்கு சசி. வீட்ல நாளுக்கு நாள் என் நிலைமை மோசமாப் போகுது. வேண்டாத விருந்தாளியா எத்தனை நாட்கள் அங்கே காலம் தள்ள முடியும்? ஒரு ஆணாப் பிறக்கலையேனு இதுவரை ஒரு நொடி கூட யோசிச்சுப் பார்த்ததில்லை. ஆனா, இப்ப யோசிக்கறேன். ஆணாப் பிறந்திருந்தா வீட்டை விட்டுப் போயிருப்பேன். பிளாட்பார்ம்ல படுத்து மூட்டைத் தூக்கியாவது பிழைச்சுக்கலாம். பெண்ணாப் பிறந்து சீரழியறேன், பார்''

''சீ அசடு. எதுக்கு இப்படி மனசைத் தளர விடறே?'' சசி ஆதரவாய் அவள் முதுகைத் தடவிக் கொடுத்தாள்.

''இல்ல சசி, உனக்கு என் நிலை புரியாது. எனக்குக் கல்யாணம் பண்ணி அனுப்பிடணும்னு அண்ணி பேசறாங்க. படிப்பைத் தொடர முடியாம முட்டுக்கட்டை போடறாங்க. சொந்த வீட்லயே பயந்து பயந்து வாழறேன்.''

''உங்க வீட்டு மனுஷங்க உனக்குப் பரிஞ்சு பேசறதில்லையா?''

''சம்பாதிக்கற மகனை எதிர்த்துக்கிட்டு அவங்களால என்ன செய்ய முடியும்?''

''உன்னோட இந்த நிலைமைக்குக் கல்யாணமே பரவாயில்லை.''

''வாழ்க்கையில படிப்பு, வேலைனு சில லட்சியங்கள் வச்சிருக்கற பெண்ணை திடீர்னு கல்யாணங்கற பந்தத்துல தள்ளி விடறது சரியா? எந்தப் பொண்ணுக்கும் தன் கால்ல நிக்கற தகுதியும் நம்பிக்கையும் வேணும், சசி.''

''அப்படி பக்கபலமா நிக்கற ஒரு கணவன் உனக்கு அமைஞ்சா நல்லது தானே. இப்ப நிறைய ஆண்கள் ரொம்ப நல்லவங்களா இருக்காங்க, மஹதி''

''எனக்கு அப்படி ஒரு கணவன் கிடைக்கறது கஷ்டம், சசி. இப்பவே என் கல்யாணத்துக்கு யார் செலவு செய்வாங்கனு அண்ணி கேள்வி எழுப்பிட்டாங்க. பரீட்சைக்குப் பணம் கட்ட யோசிக்கறவங்க என் கல்யாணத்துக்கா செலவு செய்வாங்க? ஜானம்மா அப்பாவுக்கு ஊர்ல கொஞ்சம் நிலம் தவிர வேற எதுவும் இல்ல. அதை விக்க அண்ணி விடுவாங்களா? என்னைப் பெத்ததோட சரி, திரும்பிப் பார்க்காத என் சொந்த அம்மா என் கல்யாணத்துக்கு என்ன செஞ்சு கிழிச்சுடுவாங்க? அப்பா செஞ்சாக்கூட அம்மா தடுத்துடுவாங்க.''

''சேச்சே ஒரு தாய் அப்படி இருக்க மாட்டாங்க மஹதி.''

''உனக்குத் தெரியாது சசி, நான் பிறந்த பத்தாவது நாள் எங்கம்மாவுக்கு ஜான்டீஸ் வந்தது. அதைச் சாக்கா வச்சு தன் அம்மா வீட்டுக்கு, அதான் மங்கா பாட்டி வீட்டுக்கு என்னை அனுப்பி வச்சவங்க தான் என் அம்மா. அதுக்குப் பிறகு என்னை திரும்பியேப் பார்த்ததில்லை.''

''ஏதாவது காரணம் இருக்கும், மஹதி''

''என்னடி பொல்லாத காரணம்? காமாலை காரணமா கைக்குழந்தையை பக்கத்துல வச்சுக்கக் கூடாதுனு முதல் சில மாசங்கள் தவிர்த்தாங்க. நான் தாய்ப்பால் கூட குடிச்சதில்லை தெரியுமா? அடுத்த சில மாசங்களிலேயே அவங்க திரும்ப கன்சீவ் ஆயிட்டாங்க. வியாதி வந்த பிறகு கருதரிச்சதனால உடல்ல பலமில்லை. அதைக் காரணம் காட்டி சில மாசங்கள் நான் பாட்டி வீட்லயே இருந்தேன். பிறகு குழந்தை பிறந்தது. ரெண்டு சின்னக் குழந்தைகளையும் பார்த்துக்கறது கஷ்டம்னு சொன்னாங்க. மங்கா பாட்டியும் 'அதனால என்ன, இவ இங்கேயே இருக்கட்டும்'னு சொல்லிட்டாங்க. எனக்கு பள்ளிக்கூடம் சேர்க்கற வயசுல அம்மாவுக்குக் கருச்சிதைவு. மங்கா பாட்டி தன் வீட்டுப் பக்கத்துலயே ஒரு பள்ளிக்கூடத்துல என்னை சேர்த்துட்டாங்க. நான் ஒண்ணாவது போகும் போது என் அடுத்த தம்பி நவீன் பிறந்துட்டான். நான் இப்படியே இங்கேயே இருந்துட்டேன்.''

பெருமூச்சு விட்டாள் மஹதி.

''நீயே சொல்றா மாதிரி சந்தர்ப்பம் சூழ்நிலை காரணமாத்தானே மஹதி உங்கம்மா உன்னை தன் கூட வச்சுக்க முடியாம இருந்திருக்காங்க.''

''உண்மைதான் சசி. ஆனா, எங்கம்மா என்கிட்ட ஆசையாவே இருந்ததில்லை. லீவுக்குக் கூட தன் கூட கூப்டு வச்சுக்க மாட்டாங்க. என்



தம்பிகளோட தான் வந்து பாட்டி வீட்ல ஒரு வாரம் ப
நான் தங்கிட்டுப் போவாங்க. அவ்வளவு தான். அப்
கூட என்கிட்ட அன்பா இருக்க மாட்டாங்க.''

''ஏன் மஹி?''

''என்னவோ! ஒருவேளை நான் பையனாப் பி
காதது காரணமா இருக்கலாம். ஆனா, எனக்கு இந்
குறையெல்லாம் ஆரம்பத்துல தெரியலை. அதுக்குக்
ணம் என் பாட்டி, ஜானம்மா, பெரியப்பா, அண்
எல்லோரும் அப்படி அன்பா என்னைப் பார்த்துக்
டாங்க. நான் ஹை-ஸ்கூல் வர்ற வரை நான் அவ
சொந்தப் பெண்ணில்லைனு எனக்குத் தெரியாது





''உங்க பெரியம்மாவுக்கு நீ சொந்த தங்கை மக. அதனால, அவங்க உன்கிட்ட பிரியமா இருக்கறது இயல்பு. ஆனா, உங்க பெரியப்பாவும் அன்பு காட்டறது பெரிய விஷயம், இல்லையா?''

''கரெக்ட். ஆனா, அதே சமயம் அவர் எங்க மங்கா பாட்டியோட சொந்த தம்பி. தம்பியை மூத்த மகளுக்கு கட்டி வச்சிருக்காங்க. அப்படிப்பார்த்தா நான் அவங்க சொந்த மருமகளோட மக.''

''ஓ! உங்கப்பா உன்கிட்ட அன்பா இருப்பாரில்லை?''

''ம், பாட்டி வீட்டுக்கு வந்து பார்த்து, அன்பா பேசிட்டுப் போவாரு. அம்மாதான் அன்பையே காட்டாதவங்க. எனக்கு அது பெரிய இழப்பா அப்பத் தெரியலை. இப்ப அண்ணி வந்த பிறகு, சொந்த வீட்லயே வேண்டாத விருந்

தாலியா நடத்தப்பட்ட போது என்னால தாங்க முடியலை. அம்மா என்னை ஒதுக்கினதால தானே இப்படி உறவுக்காரங்க வீட்ல தங்கி நான் வதைபடறேன். என் அம்மாவை நான் வெறுக்கறேன், சசி. ஐ ஹேட் ஹர்''

சொல்லும் போதே குரலும் தொண்டையும் அடைக்க அழுகையில் கேவினாள், மஹதி. சசி ஆறுதலாய் தன் மீது சாய்த்துக் கொண்டாள். மெல்லத் தட்டிக் கொடுத்தாள். அந்தச் செயலே ஆயிரம் வார்த்தை ஆறுதலுக்கு நிகராக இருக்க, மஹதி நெகிழ்ந்து போனாள்.

''சசி, என்னை நல்லாப் புரிஞ்சுக்கிட்ட தோழி நீயும் இல்லாட்டா, நான் என்னவாகி இருப்பேன்.''

அவள் ரொம்ப அடிபட்டிருப்பது புரிந்தது, சசிக்கு. அவளுக்குத் தேவை ஆறுதல் மட்டுமல்ல மனத் திடமும் தான் என்பதும் புரிந்தது. அந்தத் திடம் இல்லாவிட்டால், அவள் உடைந்து விடுவாள். சுயபச்சாதாபம் அவளை அழித்து விடும் என்று புரிந்தது. நல்ல தோழியாய் தன் கடமை உணர்ந்தாள் சசி. மெல்ல, காயத்தின் மேல் பஞ்சு ஒத்தடமாய் பேசத் துவங்கினாள்.

''என்ன மஹி இது? இப்படியா மனசைத் தளர விடுவே? உனக்கென்ன குறை? அம்மா கொஞ்சம் பாராமுகமா இருக்காங்க. அவ்வளவு தானே. வாழ்க்கையில எத்தனை பேர் எத்தனை விஷயங்களை இழந்திருக்காங்க. சொந்த பந்தங்களை அகாலமா இழந்தவங்க எத்தனை பேர்! உடல் உறுப்புக்களை இழந்தும் எதிர்நீச்சல் போட்டு வாழ முயற்சி செய்யறவங்க எத்தனை பேர்! ஹெலன் கெலன் பார்வை, பேச்சு, கேட்கும் திறன்னு எல்லா முக்கிய உறுப்பும் இல்லாம பிறந்தும் சாதிச்சுக் காட்டலையா? தந்தை, கணவர், மகன்னு ஒவ்வொருத்தராய் இழந்தும் இரும்பு மனுஷியாய் இந்தியாவை நல்லாட்சி செஞ்ச இந்திராகாந்தி சாதிக்கலையா? நீ மட்டும் ஏன் இப்படிக் கலங்கறே? உன்னை வெறுக்கற ஒரு ஜீவனை நினைச்சு நீ ஏன் மறுகறே? வேலை கிடைக்கற வரை அண்ணியைப் பொறுத்துக்க. கொஞ்சம் பொறுமையா இரு. வாசமான ரோஜா இருக்க முள் பத்தி ஏன் யோசிக்கறே?''

''முள் குத்தும் போது வலிக்குதே, சசி.''

''முள் குத்தைத் தாங்கினாத்தான் மென்மையும் வாசமுமான ரோஜாவைப் பறிக்க முடியும் மஹி. கஷ்டத்தைத் தாங்க மனசைப் பக்குவப் படுத்திக்க. வாழ்க்கை உனக்கு சொர்க்கமாகும்.''

கண்களை மலர்த்தித் தோழியைப் பார்த்தாள் மஹதி.

''எல்லா முள்ளுக்கும் நடுவில் ரோஜா[...] எனக்கு நீ இருக்கே, சசி. நல்ல நட்பை விட [...] என்ன வேணும்.''

''குட். இப்பத்தான் 'பாஸிடிவ்[...] யோசிக்க ஆரம்பிச்சிருக்கே. எதிர்மறைய[...] எண்ணங்களை மனசிலிருந்து துடைத்து [...] தேவையில்லாத எண்ணங்கள் மனசையும் [...] லையும் பாதிக்கும். எப்பவுமே ஆக்கப்பூர்வ[...] யோசி. எதிரிகளை நண்பர்களா நினைக்கப் [...] முடியலையா, ஒதுங்கிடு. மனசு எப்பவு[...] துடைச்சு வச்ச வெள்ளைப் பலகையா இருக்க[...]டும். அதுல அன்புங்கற கலர் சாக்பீஸால வாழ்[...]கைப் பாடம் எழுது. ஒழுக்கமும் பாசமு[...] அதோட விதிகளாய் இருக்கட்டும்.''

சசி பேசப் பேச அவள் கரங்களைப் பற்[...]னாள் மஹதி.

''சசி, நீ பேசறது எனக்கு எவ்வள[...] தெம்பா இருக்குத் தெரியுமா. ஏதோ நூறு பா[...]டில் சலைன் ஏத்தினா மாதிரி புத்துணர்வு வருது[...] ரொம்ப தேங்க்ஸ்பா.''

''உன் நன்றியெல்லாம் வேண்டாம். உ[...] பிரச்சினை தீர்ந்தா போதும். சரி, பரீட்சைக்கு பணம் கட்டியாச்சா?''

''ம், ஜானம்மா கட்டிட்டாங்க.''

''குட், கவனமாப் படி.''

''நேத்து வரை மனசு எதிலும் ஒட்டா[...] இருந்தது. இன்னைக்கு உன்னால மனசு தெளி[...]சிருக்கு. படிக்க உட்காரப் போறேன்.''

''தட்ஸ் த ஸ்பிரிட்.''

''எப்ப என்னால பணம் ஒரு பிரச்சினை[...] வீட்ல கருதப்படுதோ, அப்பவே அதுக்கு நா[...] ஏதாவது செய்யணும்னு நினைக்கறேன், சசி.'' மஹதி உறுதியாய் பேசினாள்.

''அதான் வேலை தேடறியே.''

''அது கலபத்துல நடக்கற விஷயமா? அ[...]கம் பக்கம் பசங்களுக்கு டியூஷன் நடத்த[...] போறேன்.''

''நல்லது.''

''அதைத் தவிர ஏதாவது பார்ட் டை[...] வேலை கிடைச்சா சொல்லேன்.''

''பார்ட் டைம் வேலையா?'' என்[...] யோசித்த சசி திடீரென்று நினைவு வந்தவளா[...] ''எங்க பக்கத்து வீட்டு டாக்டர் ஆன்ட்டியை[...] தெரியுமில்ல. அவங்க ரெண்டு தெரு தள்ளி இன்[...]னொரு கிளினிக் துவங்கி இருக்காங்க. அஞ்[...] மணியிலிருந்து ஏழு வரை கிளினிக்கைத் திறந்து[...] கும்பலை வரிசைப்படுத்தனு உதவிக்கு ஆ[...] கேட்டாங்க... உன்னைச் சொல்லவா? வீட்[...] கேட்டுக்கிட்டு வரியா? உங்க வீட்லயிருந்து நட[...]கற தொலைவு தானே? ஆனா, பணம் அதிகம் எதிர்பார்க்க முடியாது. ஐநூறு, அறுநூறு கொடுப்பாங்கனு நினைக்கறேன்.''

மஹதி யோசித்துப் பார்த்தாள். ஐநூறு ரூபாய் தான் யார் கொடுக்கிறார்கள். மாலை இரண்டே மணிநேரம். டியூஷனையும் நாலு முதல் ஐந்து வரை பின்பு ஏழு முதல் எட்டு வரை என்று அட்ஜஸ்ட் செய்து கொள்ளலாம். சசி சொல்வது போல் பத்து நிமிட நடைதூரம். பரீட்சைக்குப் பணம் கட்ட இப்போது யோசிப்பவர்கள் நாளை 'தண்டச்சோறு' என்று சொல்ல எத்தனை நேரமாகும். வேலை காரணமாய் மதிய நேர படிப்பு, பரீட்சை எதுவும் பாதிக்கப் போவதில்லை. மிக நல்ல யோசனையாகவே பட்டது.

''நல்ல ஐடியா, சசி. அம்மாகிட்ட சொல்லிட்டு நாளை வரேன்...''

''சரி, இருட்டத் துவங்கிடுச்சு. கோவிலுக்குப் போயிட்டு வீட்டுக்குப் போகணும். கிளம்பலாமா?''

இருவரும் எழுந்தார்கள். அஷ்டலட்சுமி கோவிலை நோக்கி நடந்தார்கள். மனம் தெளிந்து லேசாகி இருப்பதை உணர்ந்தாள் மஹதி.

'இந்த நிம்மதி வாழ்நாள் முழுவதும் தொடரணும் தாயே' என்று வேண்டிக் கொண்டாள்.

7

**அ**பூர்வமாய் சென்னையில் அன்று மழை பெய்தது. ஆர்வமாய் பார்த்தாள் மஹதி.

மழை இயற்கையின் கொடைதான். அது பொழியும் போது மனதில் எத்தனை சந்தோஷத்தைத் தோற்றுவிக்கிறது! சில்லென்ற காற்றும் மண்வாசமும் உடலைச் சிலிர்க்க வைக்கிறதே. தாகம் தீர்க்கும் மகத்தான வேலை தவிர இந்தச் சில்லறை மகிழ்வு வேறு தருகிறது! வீழ்ந்தாலும் மழை போல் விழ வேண்டும்.

தன்னை மறந்து லயித்திருந்தவளை நோயாளிகளின் வருகை கலைத்தது.

உடல் உபாதையின் முன் இயற்கை சீற்றமெல்லாம் எம்மாத்திரம்! ஆட்டோவிலும் குடை பிடித்தும் வந்து சேர்ந்தார்கள் நோயாளிகள். அவர்களுக்காக மின் விசிறியைச் சுழல விட்டு, டோக்கனை விநியோகித்து அமரச் செய்தாள்.

''டாக்டர் இப்ப வந்துடுவாங்க'' என்று ஒவ்வொருவர் கேள்விக்கும் பொறுமையாய் பதில் சொன்னாள்.

வேலையில் சேர்ந்து விளையாட்டாய் ஒரு மாதம் ஓடி விட்டது. நேற்றுத்தான் சசி அழைத்துப் போய் டாக்டரை அறிமுகப்படுத்தியது போல் இருந்தது.

டாக்டர் சுசீலா பெயருக்கு ஏற்ப இனிமையாய் இருந்தார். நல்ல கம்பீரமும் படிப்பின் தெளிவுமே ஒரு தனி களையைத் தருவதை உணர்ந்தாள். பேச்சில் கனிவு இருந்த அதே அளவு கண்டிப்பும் கண்ணியமும் இருந்தன.

''உன்னைப் பத்தி சசி சொன்னாம்மா. உழைக்க நினைக்கறது நல்ல குணம் தான். பாராட்டறேன். அதே சமயம், உன் வீட்லயிருந்து எந்தப் பிரச்சினையும் வராதே?''

அண்ணன் சேகர், தான் வேலைக்குப் போகப் போவதாய் சொன்னவுடன் ஆடிய ருத்ர தாண்டவம் நினைவில் மோதியது.

''படிப்பை முடிச்சுட்டு கவுரவமான ஆபீஸ் வேலைனா பரவாயில்லை. இது என்ன ஆயா வேலை மாதிரி.''

''வேலையில உயர்வு தாழ்வு கிடையாதுனு நினைக்கறவ நான். திருடலை, பொய் சொல்லலை, மானத்தை விக்கலை. ஒரு டாக்டருக்கு சேவகம் செய்யறது ஒண்ணும் கேவலம் கிடையாது.''

''எதுத்து எதுத்து பேசினா பல்லைப் பேத்துடுவேன்.''

அண்ணன் எகிற, அண்ணி கண் ஜாடை காட்டி உள்ளே அழைத்துப் போனாள். என்ன சொன்னாளோ... திரும்பி வந்த அண்ணன் சுருதி குறைந்திருந்தது.

''சரி, போய்த் தொலை. ஆனா நாலு காசு கையில வருது, இஷ்டத்துக்கு ஆட்டம் போடலாம்னு மட்டும் நினைக்காதே. இனி வீட்டு நிர்வாகத்தை அண்ணியும் பார்த்துக்கப் போறாங்க. அவங்க கையில கொண்டு வந்து சம்பளத்தை அப்படியே கொடு, என்ன?''

மஹதியால் இதை கேட்டுக் கொண்டு சும்மா இருக்க முடியவில்லை. எவ்வளவு சுலபமாய் சொல்லி விட்டான். இனி இந்த வீட்டில் அம்மா செல்லாக் காசா? புது மருமகள் வீட்டு நிர்வாகத்தை ஏற்பது தவறல்ல. ஆனால், இயல்பாய் வயதின் காரணமாய் அம்மா மெல்ல ஒதுங்க, மருமகள் கொஞ்சம் கொஞ்சமாய் பாரத்தை ஏற்பது எப்படி! இப்படி தடாலடியாய் பறிப்பது எப்படி?

''நான் அம்மா கையில தான் கொடுப்பேன். அம்மா என்ன படுத்த படுக்கையாவா இருக்காங்க, உன் மனைவி பொறுப்பெடுக்க?''

அவள் ஆவேசமாய் கத்தினாள்.

''பாரு சம்பளம் பணம் கைக்கு வரலை. அதுக்குள்ள திமிரைப் பாரு. அம்மாவுக்கு பிறகு என் மனைவிதானே இந்த வீட்ல எல்லாம். நீ இந்த வீட்ல ஒண்ட வந்தவ தானே. நீயே இவ்வளவு பேசினா, நான் எவ்வளவு பேச மாட்டேன்.''

அவ்வளவு தான். பொங்கும் பாலில் நீர் தெளித்தது போல் அடங்கி விட்டாள் மஹதி.

என்ன பேச்சு பேசி விட்டான். 'நீ இந்த வீட்ல ஒண்ட வந்தவ தானே!' உண்மைதானே. பெற்றவளே வேண்டாம் என்று உதறிய பின் இந்த வீட்டில் அண்டியவள் தானே தான். பெற்றவளுக்கே இல்லாத பாசத்தை இவர்களிடமா எதிர் பார்க்க முடியும்?

மஹதியின் கண்கள் நிறைய மாடிக்கு ஓடி விட்டாள். தண்ணீர் தொட்டியின் அடியில் அமர்ந்து தேம்பினாள். யார் எது சொன்னாலும் அழக் கூடாது என்ற வைராக்கியம் கரைய அழுதாள். பெற்றவர்களிடம் வளர்ந்திருந்தால் ரோஷப் பட்டு உரிமை பேசலாம். இரவல் உறவில் அன்பைக் கூட அல்லவா யாசிக்க வேண்டியுள்ளது.

'அம்மா என்னும் என்னைப் பெற்ற ராட்சசியே. உன்னால், உன் பாரா முகத்தால் நான் எப்படியெல்லாம் அவமானப்படுகிறேன் பார். கறந்த பாலை விட தூய்மையானது தாயின் அன்பு என்கிறார்கள். ஆனால் அது பொய். கொடிய பாம்பை விட விஷமாய் உன் போன்ற சிலர் இருக்கிறார்கள். இரண்டு மகன்கள் பிறந்து விட்ட திமிரில் பெற்ற மகளைப் பிறந்த வீட்டில் விட்டு விட்டு திரும்பிக்கூடப் பார்க்காமல் இருக்கும் நீயெல்லாம் ஒரு அம்மாவா?'

மானசிகமாய் தாயை கண் முன் நிறுத்தி கேள்விகளால் வீழ்த்தினாள். ஆத்திரமும் அழுகையும் குமுறிக் கொண்டு வந்தன.

மென்மையான ஒரு கரம் தோளில் விழ திரும்பிப் பார்த்தாள்.

ஜானம்மா!

கலங்கிய கண்களால் என்ன என்பது போல் நிமிர்ந்து நோக்கினாள்.

''அசடு! எதுக்கு இப்படி அழறே? உங்கண்ணனைப் பத்தி உனக்குத் தெரியாதா? அவன் கோபமெல்லாம் எத்தனை நேரம்?''

ஜானம்மா மென்மையாய் பேசப்பேச அப்படியே அவள் மடியில் சாய்ந்து அழத் துடித்தது மனம். ஆனால், தன்மானம் அவளை இழுத்துப் பிடித்தது. வயதான ஜானம்மாவின் அனுபவம் பணிந்து போனது. சிலும்பிய இளரத்தத்தை அனுசரிக்க இறங்கியது.

தன் தோள் மீது அவளைச் சாய்த்துக் கொண்டு மெல்ல முதுகை வருடிக் கொடுத்தார்.

''இங்க பாரு, அவனுக்கும் ஏதேதோ டென்ஷன். ஆபீஸ்ல வேலைப் பளு அதிகம்... போகப் போக குடும்பமும் பெருகும். பணம் ஒரு பிரச்சினையாகாம சமாளிக்கணுமேனு கவலைப் படறான். அப்பாவுடைய சொற்ப பென்ஷன் தவிர அவன் ஒரு ஆள் சம்பாத்தியம் தானே... புது மனைவியால குடும்பம் பிரிஞ்சுடக் கூடாதேன்னு கூடிய வரை அவ போக்குல போய் பிடிக்கப் பார்க்கறான். இத்தனை வருஷமா அவனோட பழகின நாமே அவனைப் புரிஞ்சுக்கலேன்னா எப்படி, மீ? வந்தவளும் புதுப்பொண்ணு. தெருவிலிப் பழகற கணவன் மட்டும்தான் சொந்தம்னு நினைக்கத் தோன்ற காலகட்டம். ஒரு குழந்தை பிறந்துட்டா நம் மோட அருகாமை அவசியத்தையும், பாசத்தையும் புரிஞ்சுப்பா. அதுவரை நாமதான் பொறுமையா நம்ம அன்பை அவகிட்ட பக்குவமா வெளிக்காட்டணும். எட்டிக்குப்போட்டியா நின்னா பிரச்சினைதான் பெரிசாகும் இல்லையா?''

ஜானம்மா பேச்சில் அசந்து போனாள் மஹதி. யாரையும் குற்றம் சொல்லாமல் எல்லோரையும் அனுசரித்து நேசிக்கும் இந்த குணம் எத்தகைய மேன்மையானது! நிறைவில் ஆயிரம் குறை காணும் மனிதரிடையே குறையை நிறைவாய் பேசும் ஜானம்மா வழக்கம் போல் உயர்ந்தவர்தான்! ஆனால், அண்ணன் தன்னை இத்தனை பேசியும், ஒரு வார்த்தை அங்கே தனக்கு ஆதரவாய் யாரும் பேசவில்லையே! முகத்தைத் திருப்பிக் கொண்டாள் மஹதி.

புரிந்து கொண்டது போல் தரை பார்த்து மீண்டும் மெல்ல பேசத் துவங்கினார் ஜானம்மா.

''வயசான என் அம்மா, நான், நீ, அப்பா இப்படி எல்லோருமே உன் அண்ணன் ஆதரவுல தான் இருக்கோம். ஊர்ல வீட்டை வித்த பணத்தையும் இந்த வீட்டுக்காகக் கொடுத்தாச்சு. இனைக்கு உன் கல்யாணத்துலயிருந்து ஒரு தலைவலி காய்ச்சல் வரை உன் அண்ணன் தயவு நமக்கு தேவனும். அதான், எல்லோருமே பொறுமையா இருக்கோம். புரியுதா?''

'ஆதரவு வேணுங்கறதுக்காக அடிமைப் பட்டுக் கிடக்கோம் இல்லையா?'' தன்னையும் மீறி நாக்கைச் சுழட்டி விட்டாள் மஹதி.

ஜானம்மாவால் தலை குனியத்தான் முடிந்தது.

மஹதிக்கு ஜானம்மாவைப் பார்க்கப் பாவமாக இருந்தது. 'மகன் ஆதரவு தான் வேண்டும். சும்மாகிட நாயே' என்று சேகர் போலவே பேச அம்மாவுக்கு எத்தனை நேரமாகி விடப் போகிறது? ஆனால், அப்படி அதிகாரம் காட்டாமல் பாசம் காட்ட ஓடி வந்தவளை ஏன் நாவால் சுட வேண்டும்?

''சாரிம்மா'' என்றவளை மீண்டும் பச்சாதாபம் சூழ்ந்தது. முழங்காலில் முகம் புதைத்தவள் மெல்ல தனக்குத் தானே பேசுவது போல் பேசினாள். ''என்னாலதானே உங்களுக்கும் இந்தப் பாடு. சொந்த அப்பாம்மாவை வெச்சுக்க அண்ணன் கணக்கா பார்க்கப் போகுது. நான் தானே பாரம். சொந்தம்னு நினைக்கற வீடு சொந்தமா? பெத்தவளே நிராகரிச்சவளை யார் தான் ஆதரிப்பாங்க? என் படிப்பு, கல்யாணம்னு நீளப்போற பணச் செலவுதானே அண்ணனை மிரள வைக்குது. 'என்ன பெரிசா சொந்தத் தங்கையா நீங்க செலவழிக்க'னு அண்ணி கேட்டா, அண்ணன் என்ன பதில் சொல்லும்? பெத்த அம்மாவுக்கு இல்லாத அக்கறை அண்ணிகிட்ட எதிர்பார்க்க முடியுமா?'' சொல்லச் சொல்ல குரல் கம்ம, அப்படியே உடைந்து போனாள் மஹதி.

ஜானம்மாவாலும் தாங்க முடியவில்லை.

''அடி என் கண்ணே, என்டாம்மா இப்படி மனசை ஒடிஞ்சு பேசறே?''

''இல்லம்மா, நான் இங்க வேண்டாதவிருந்தாளிதானே! பெத்தவளுக்கே வேண்டாதவ...''

''அப்படியெல்லாம் இல்லடா...''

''அம்மா, இத்தனை வருஷமா நான் இந்த வீட்ல ஒருத்தியாத் தான் இருந்தேன். அப்பா என்னைப் பெத்தவளோட பாராமுகம் எனக்கு ஒரு பொருட்டாத் தெரியலை. 'நீ உதாசினப் படுத்தினாலும் என்கிட்ட அன்பு காட்ட இத்தனை பேர் இருக்காங்க'னு திமிராவேத் திரிஞ்சேன். ஆனா, அதெல்லாம் இரவல் உறவுனு இப்பத்தாம்மாப் புரியறது.''

வார்த்தையை முடிக்க முடியாமல் அழுகை தான் முட்டிக் கொண்டு வந்தது.

ஜானம்மா அப்படியே மஹதியை அள்ளி அணைத்துக் கொண்டார். உச்சி முகர்ந்து அவள் கண்ணீரைத் துடைத்தவரின் கண்களும் மடை திறந்தது போல் நீரைப் பொழிந்தன.

''அப்படிச் சொல்லாதே, மஹிம்மா. நான் உன்னைப் பெறாத இரவல் அம்மா தான். ஆனா, என் அன்பு இரவல் அன்பு இல்லடி பெண்ணே. உனக்கும் சேகருக்கும் நான் பேதம் பார்த்ததில்லைனு உனக்கேத் தெரியும்...''

ஜானம்மா கலங்குவது மஹதியால் தாங்க முடியாத ஒன்று. அதனால் தன்னைச் சுதாரித்துக் கொண்டு அம்மாவின் கண்ணீரையும் துடைத்து விட்டாள்.

''ப்ளீஸ்மா, நீ கலங்கினா நான் தாங்க மாட்டேன்.''

''அதேதான்டா, கண்ணே. நீ கலங்கினா இந்த அம்மாவால தாங்க முடியுமா? சில சமயம் வீடுகளில் உறவுகளால குழப்பமும், பிரச்சினையும் வரும். நீ இதுவரை அப்படிப்பட்ட சூழலைச் சந்திச்சதில்லை. அதான் சொல் பொறுக்க

## அழியும் மூலிகைகள்

உலகில் செடி, கொடிகளிலிருந்து கிடைக்கும் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட மூலிகைச் செடிகளில் பலவகைகள் நமக்கு எதிர்காலத்தில் கிடைக்காமல் போகும் ஆபத்தான நிலை உருவாகியுள்ளது. இவைகளில் 80 சதவீதம் நம் நாட்டிலும் சீனாவிலும் தான் கிடைக்கின்றன.

நிலத்தடி நீர் பாதிப்பு மற்றும் இந்த மூலிகைச் செடிகளை பறித்து பயன்படுத்துபவர்கள் திரும்பவும் இவற்றை பயிர் செய்யாததாலும் இவைகள் கொஞ்சம் கொஞ்சமாக அழிந்து வருகின்றன என இயற்கை மருத்துவ உலகம் கவலைப்படுகிறது.

-பாரீஸ்பார்த்தசாரதி.



முடியாம கலங்கற.''

''யாரோ சொன்னாப் பரவாயில்லம்மா. ஆனா, சொந்த அண்ணன்...'' என்று நிறுத்தியவன், தயங்கி ''சொந்த அண்ணன்னு சொல்ல இனி உரிமை இருக்காம்மா?''

கண்மூடி ஒரு நிமிடம் பெருமூச்சு விட்டார் ஜானம்மா.

''சொன்னாலும் சொல்லாட்டாலும் நீ ஒருத்தி தான் அவனுக்குத் தங்கை. வாழ்க்கையில மேடு பள்ளம் சகஜம் மஹிம்மா. அதையெல்லாம் தாங்கப் பழகணும் நீ. வீட்டு மனுஷங்க வார்த்தைக்கே இப்படி இடிஞ்சு போனா, எப்படி சகஜமா வாழ்க்கையில முன்னேற முடியும், ம்? நீரடிச்சு நீர் விலகாதுடாம்மா... நானும் சேகர் கிட்ட பேசறேன்...''

''வேண்டாம்மா, பிரச்சினை அதிகமாயிடும். உன் மனசுல எனக்கு இன்னும் அதே பழைய இடம் இருக்கில்ல அது போதும் எனக்கு... ஒரே ஒரு சந்தேகம். தீர்த்து வை, போதும்''

''என்ன?''

''எங்கம்மா ஏன் என்னை இங்க விட்டுட்டுத் திரும்பிப் பார்க்காம போனா?''

கேள்வியின் வீச்சும் வேகமும் ஜானம்மாவை ஒரு நொடி திணற வைத்தன. பற்றி எரியத்தயாராய் இருக்கும் நெருப்பு. மெல்ல நீரிட்டு அணைக்க வேண்டும் என்று உணர்ந்தார். அதனால் நிதானமாக ''உனக்குத் தான் தெரியுமே. நீ பிறந்தவுடனே உங்கம்மாவுக்கு உடம்பு சரியில்லாம போச்சு. அதான் உன்னை இங்க வச்சுக்கிட்டோம். அவளுக்கும் அடுத்தடுத்து பிரசவம் குழந்தை குட்டினு ஆனதனால, அப்படியே நாங்க உன்னை இங்கயே வச்சுக்கிட்டோம். எனக்கும் சேகருக்குப் பிறகு குழந்தை இல்லை. அதுவும் நீ பெண் குழந்தை. உன் மேல உசிரையே வச்சுட்டோம். நீயும் இங்கயே ஒட்டிக்கிட்ட....''

''எல்லாம் சரிம்மா. ஒரு தடவை கூட எங்கம்மா வந்து என்னை திருப்பிக் கேட்கலை இல்லையா?''

ஒரு நொடி அவளை ஆழமாகப் பார்த்தார் ஜானம்மா. அந்தக் குரலின் ஏக்கமும், வெறுப்பும், தவிப்பும் அவரை ஏதோ செய்தன.

''எதுக்குக் கேட்கணும்? கேட்டாலும் கொடுக்கறாப்ல நாங்க இல்லை.'' தன் பாசத்தையெல்லாம் குரலில் குழைத்துச் சொன்னார்.

ஜானம்மாவின் பாசம் நெகிழ்த்தினாலும், பெற்றவள் நிராகரிப்புத் தானே செய்துள்ளாள் என்று மனம் குமைந்தது. முகத்தை வேறு புறம் திருப்பிக் கொண்டாள் மஹதி.

ஜானம்மா அவளைப் புரிந்து கொண்[...] தாயின் பாராமுகத்தால் தான் தனக்கு இந்த [...] என்று இவள் ஏங்குவது புரிந்தது. அவள் [...] தொட்டுத் திருப்பினார்.

''இங்க பாரு. உங்கம்மா வசதி[...] கொஞ்ச நாள் உன்னை இங்க விட்டு [...] நாங்க உன்னை நல்லா கவனிச்சுக்கிட்ட[...] உன்னைப் பத்தி கவலைப்படாம மத்த [...] மேல தன் கவனத்தைத் திருப்பினா. தன்[...] பெத்தவகிட்டயும் கூடப் பிறந்தவனான எ[...] டயும் தானே உன்னை விட்டு வச்சிருக்கோ[...] நிம்மதியில அவ அதிகம் உன்னைப் பத்தி [...] டிக்கலை அவ்வளவு தான். உனக்கும் இது[...] அந்த வித்தியாசம் தெரியலை. இப்ப, சந்தர்[...] சூழ்நிலை காரணமா நீ உன் அம்மா மேல கோ[...] படறே. மனசைப் போட்டு அலட்டிக்காம இ[...]

'இது கோபம் இல்லம்மா. ஃபீலிங் [...] நெக்லக்ட். ஒதுக்கப்படறதால ஏற்படற [...] என்று கத்தத் தோன்றியது. ஆனால், தாய்[...] தாயாய் நின்று தன்னை சமாதானம் செய்யும் [...] விடம் ஏன் கோபப்பட வேண்டும் என்று ம[...] மானாள், மஹதி.

ஜானம்மாவே தொடர்ந்தார்.

''இங்க பாரு மஹி. அண்ணன் கோபத்[...] கத்தறதால உலகமே அஸ்தமிச்சா மாதிரி இடி[...] போயிடக்கூடாது. வாழ்க்கையில பல பேர் [...] விதமாப் பேசுவாங்க. அதுக்குப் போய் மன[...] டிஞ்சு போனா அப்புறம் எப்படி வாழ முடி[...] நமக்குனு வாழ்க்கையில ஒரு குறிக்கோள் வ[...] கணும். என்ன தடை வந்தாலும் முறியடி[...] அந்த எல்லையைத் தொட முயற்சி செய்யணு[...] அதுக்காக உடலையும் மனசையும் ஆரோ[...] யமா வச்சுக்கணும். எழுத உட்காரும் போது [...] தமான பேப்பரை எடுத்து எழுதுவியா? கச[...] இங்க், அழுக்கெல்லாம் படிஞ்ச பேப்பரை [...] ப்ியா? அதுமாதிரிதான் வாழ்க்கையிலும் ந[...] விஷயங்களை மட்டும் மனசுல போட்டு[...] மத்த விஷயங்களை 'நமக்கு சம்பந்தமில்[...] தது'னு விட்டுடு. கனியிருப்பக் காய் கவர்ந்து[...] இனிய சொல் மட்டும் கனி இல்ல. நல்ல [...] யங்களும், செயல்களும் கனி தான். மத்த[...] லாம் குப்பை.''

ஜானம்மாவை ஆச்சர்யமாய் பார்த்[...] மஹதி. இந்த வீட்டுப்பறவைக்குள் இத்த[...] ஞானமா?

''உனக்கு மனசுக்குப் பிடிச்சா, ஒரு அ[...] லெட்டா இருந்தா, டாக்டர்கிட்ட வேலைக்[...] போ. படிப்பையும் விடாதே. நல்ல வே[...] கிடைக்கும். நீ வாழ்க்கையில நல்லபடி வருவே. கவலைப்படாதே. மனசை மட்டும் திடமா வச்சுக்க.''

சிலுசிலுவென்று காற்று அடித்தது. மனம் விட்டுப் பேசியதும் தெம்பாய் இருக்க ''சரிம்மா'' என்றாள்.

ஜானம்மா சொல்படி அன்று முதல் சற்று நிதானமாய் இருக்க முடிவெடுத்தாள். டாக்டர்கிளினிக்கைப் பார்த்து வேலையில் சேர்ந்தாள். டாக்டர் சந்தேகப்பட்டதுபோல் வீட்டிலிருந்து எந்தப் பிரச்சினையும் வராது என்று உறுதி கூறினாள்.

இதோ ஒரு மாதம் ஓடி விட்டது. வேலையும் பழகி விட்டது. காசுக்குச் செய்யும் கடமையாய் இல்லாமல், சேவை நினைவோடே அவள் நோயாளிகளிடம் பழகியதால், அந்த அனுசரணையும், அன்பும் எல்லோரையும் கவர்ந்தன. பிணியின் வலி உணர்ந்து அவர்களிடம் கருணையும் அன்பும் செலுத்தினாள்.

டாக்டரோ கைராசி டாக்டர். இந்தக் கிளினிக்கில் இரண்டே மணி நேரம் தான் இருப்பார் என்பதால், கூட்டம் அள்ளும். பொறுமையாய் அவர்களை ஒழுங்குபடுத்தி, அவர்கள் கேட்கும் அற்பசொற்ப கேள்விகளுக்கும் நிதானமாய் பதில் சொல்லி, அவர்களைத் தன் கட்டுப்பாட்டிலேயே வைத்துக் கொண்டதால், டாக்டருக்கும் பாரம் குறைந்தது. மொத்தத்தில் டாக்டர், நோயாளிகள் என இருபக்க நன்மதிப்பையும் பெற்றாள்.

அன்று கும்பல் குறைந்து எல்லோரும் சென்ற பின், டாக்டர் கிளம்பக் காத்திருந்தாள். விளக்கெல்லாம் அணைத்து, கிளினிக்கைப் பூட்டிச் செல்ல வேண்டும். போய் டியூஷனுக்கு வந்திருக்கும் இரண்டு சிறுமிகளுக்குப் பாடம் நடத்த வேண்டும். ஒருத்திக்கு அல்ஜீப்ரா துவங்கியிருந்தாள். அதுபற்றி யோசித்தபடி இருந்தவளை டாக்டர் அழைத்தார்.

''டாக்டர்?''

பர்சிலிருந்து கத்தையாய் பணம் எடுத்தவர், எண்ணி இவளிடம் நீட்டினார். ''உன் சம்பளப் பணம்மா. என்கிட்ட வாங்கற யோகம் நீ லட்சலட்சமா சம்பாதிக்கணும்.''

''தேங்க்ஸ் டாக்டர்'' கரம் நடுங்கப் பெற்றுக் கொண்டாள்.

வாழ்வின் முதல் சம்பளம். வாழ்வின் கடைசி வரை மறக்க முடியாத ஒரு கணம். நினைக்கும் போதே உடல் சிலிர்த்தது. பணத்தை பத்திரப்படுத்தினாள். டாக்டர் கிளம்பிய பின் கிளினிக்கைப் பூட்டிக் கொண்டு வெளியே வந்த போது பைக்கில் சாய்ந்து அவன் நின்று கொண்டிருந்தான்.

இவளைப் பார்த்தவுடன் சட்டென்று நிமிர்ந்து ''ஹாய்'' என்றான்.

## 8

அண்ணன் வழக்கம் போல் கத்திக் கொண்டிருந்தான். மஹதிக்கு ஆயாசமாய் இருந்தது. சேகரைப் போலவே கத்திவிட்டு கண்காணாத இடத்திற்கு போய் விட வேண்டும் போல் இருந்தது.

ஹார்டியின் 'பார் ப்ரம் தி மேடனிங் க்ரவுட்' என்ற நாவல் தலைப்புதான் நினைவில் மோதியது. இந்தப் பைத்தியக்கார கும்பலிலிருந்து தப்பி எங்காவது ஓடிவிட மாட்டோமா என்றிருந்தது. எங்கு போக முடியும்? சம்பாதிக்கும் ஐநூறு ரூபாயை வைத்துக் கொண்டு தனியாய் 'என் காலில் நின்று கொள்கிறேன்' என்று வெளியே நடக்க முடியுமா? மலை, அருவி, மரம், பறவை, மிருகம் என்று எத்தனை கோடி இன்பங்களை கடவுள் படைத்திருக்கிறான். ஆனால், இவற்றை அனுபவிக்கக்கூட மனிதன் படைத்த பணமல்லவா பிரதானமாய் வேண்டியுள்ளது. எதுவும் வேண்டாம் என்று முற்றும் துறந்த முனிவனாய் ஒரு ஆண் இமயமலை நோக்கி ஓடிவிட முடியும். பெண்ணால் முடியுமா?

சேகர் கத்துவதை காதில் போட்டுக் கொள்ளாமல் தன் போக்கில் சிந்தனை வயப்பட்டிருந்தவளை சேகரின் கர்ஜனை போன்ற குரல் முழக்கம் கலைத்தது.

''ஏதாவது பதில் சொல்றாளா பாரு. என்ன அழுத்தம்?''

''என்ன பதிலை எதிர்பார்க்கறே? நீ நினைக்கற பதிலை என்னால சொல்ல முடியாது''

''ஒரு தடவை நடந்தா தற்செயல். அதே திரும்பத் திரும்ப நடந்தா, அது...? பீச்சுல அவன் வந்தான். யாருன்னே தெரியாதுன்னு சொன்னே. சரி, நம்பறோம். நீ வேலை செய்யற இடம் தேடி வந்து பேசறான். இப்பவும் 'எனக்கு எதுவும் தெரியாது'னு சொன்னா என்ன அர்த்தம்?''

''நான் சொல்றது உண்மைனு அர்த்தம்''

அதற்கு மேல் என்ன சொல்வது என்று மஹதிக்குப் புரியவில்லை.

உண்மையிலேயே அவளுக்கு விகாஷைப் பற்றி எதுவும் தெரியாது. எதேச்சையாக கடந்த ரைவில் அவளைப் பார்த்தான் விகாஷ். அவளைப் பொருத்தவரை அவன் அவள் காதல் கண்மணி. ஆசையாய் பேச வந்தான். அவளைப் பொருத்தவரை அவன் யாரோ. தனியே அமர்ந்திருக்கும் தன்னிடம் முன்பின் அறிமுகமில்லாத ஆண் ஏன் பேச வேண்டும் என்ற உணர்வில் அவனை தவிர்த்து விட்டாள். வீட்டு சூழல் காரணமாய் மனதில் ஏற்கனவே கசப்பு வேறு. இதில் ஒரு ஆணைப் பற்றி நினைக்கும் நிலையிலா அவள் இருக்கிறாள்? நவீன் பிறந்தநாளில் விகாஷ் அவளோடு பேச முயன்று தோற்ற சம்பவம் கூட அவள் நினைவில் சுத்தமாக இல்லை. அதனால், பீச்சில் அவனை அவள் நிமிர்ந்து கூடப் பார்க்காமல் போய் விட்டாள்.

விகாஷோ தன் முயற்சியில் சற்றும் மனம் தளராத விக்ரமாதித்தன்- வேதாளம் போல் அவளைச் சந்தித்துத் தன் மனதை திறக்க முயல்கிறான். ராதா மூலம் அவள் வேலை செய்யும் இடம் பற்றித் தெரிந்து கொண்டு மழையையும் பொருட்படுத்தாமல் அன்று எப்படியாவது அவளிடம் பேசிவிட வேண்டும் என்றுதான் நின்று கொண்டிருந்தான் கிளினிக் வாசலில்.

முதல் சம்பளப் பணத்தை பெற்றுக் கொண்டு அவள் மனம் முழுவதும் மகிழ்ச்சியோடு வெளியே வர, அவன் ''ஹாய்'' என்று அவள் முன் போய் நின்றான். மிகக் கனிவாய் அவளிடம் பேசி மென்மையாய் தன் காதல் சொல்லி அவள் பதில் பெறும் ஆர்வம் அவனிடம்.

அவள் பாம்பைப் பார்த்தது போல் மருண்டு நின்றாள்.

இவன் எங்கே இங்கே?

எதற்காக என்னைத் தொடர்கிறான்?

இவன் பீச்சில் ஹலோ சொன்னதற்கே வீட்டில் அப்படி ஒரு பூகம்பம் வெடித்ததே. இப்போது யாராவது பார்த்தால்...

அவள் எண்ணி முடிக்கும் முன் குறுக்கே சர்ரென்று சேகரின் பைக் வந்து நின்றது.

''எத்தனை நாளா இந்த காதல் நாடகம்?'' என்றவன் பளிச்சென்று அவள் கன்னத்தில் ஒன்று விட்டான்.

மஹதி அப்படியே துடித்துப் போனாள். எதிர்பாராமல் கன்னத்தில் சுளீரென்று விழுந்த அடி, கண்களை இருள வைத்தது. அதைவிட முன்பின் தெரியாதவன் முன் சேகர் அடித்தது அதிகம் பாதித்தது. கண்கள் மளுக்கென்று நிறைய அப்படியே அடக்கினாள்.

''ஏறுடி வண்டியில'' சேகர் கர்ஜித்தான்.

பதில் பேசாமல் ஏறிக் கொண்டாள். வண்டியை தன் ஆத்திரம் முழுவதும் வெளிப்படும் வண்ணம் ஓங்கி உதைத்தவன் விகாஷ் பக்கம் திரும்பினான்.

''இன்னொரு தரம் உன்னை இவ கூடப் பார்த்தேன்... மவனே அப்புறம் நீ உயிரோட இருக்க மாட்டே''

தன் வேகம் முழுவதும் வண்டியில் காட்டி வீட்டிற்கு வந்தவன்தான் இப்போது சரமாரியாக அர்ச்சித்துக் கொண்டு இருக்கிறான்.

''எத்தனை நாளா அவனோட பழக்கம்?'' என்ற கேள்வியை நூறு முறை கேட்டு விட்டான்.

''இல்லாத ஒரு விஷயத்துக்கு நான் எப்படி அண்ணே பதில் சொல்வேன்?''

''எல்லா இடத்திலும் உன்னைத் தொடர்ந்து வரானே.''

''அதுதான் எனக்கும் புரியலை''

பற்களைக் கடித்து முறைத்தவன், ''நல்லா பொய் சொல்றே'' என்றான்.

''கொஞ்ச நாளா எதுக்குமே நீ என்னை நம்பாத போது, இதுக்கா நம்பப் போறே?'' அவள் குரலில் வருத்தமும் விரக்தியும் இழையோடின.

குற்றம் செய்தது இவன். என்னைக் குற்றவாளியாக்குவதா என்ற ஆத்திரம் அவளுள் மூண்டது.

''நம்பும்படியாவா நீ நடந்துக்கறே? சரி, விடு. உனக்கும் அவனுக்கும் சம்பந்தம் கிடையாது இல்லையா?''

''கிடையாது, கிடையாது, கிடையாது''

''ரைட். அப்ப எண்ணி ஒரே மாசத்துல உனக்கு நான் மாப்பிள்ளை பார்க்கறேன்''

அவளுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

கல்யாணமா? படிப்பை முடிக்காமல், கையில் வேலை இல்லாமல்... இத்தனை அன்பைக் கொட்டிய அண்ணனே ஆறு மாதத்தில் குணம் மாறும் போது முன்பின் தெரியாத ஆண் மகனை நம்பி எப்படி வாழ முடியும். சொந்த வீடே அந்நியப்படும் போது சுயமாய் சம்பாதிக்க முடியாமல் கலங்குகிறோம். அந்நிய வீட்டில் எப்படி சுயசம்பாத்தியம் இன்றி வாழ முடியும்? அண்ணி போல் கணவனை கைக்குள் போட்டுக் கொண்டா? அண்ணிக்கு வகையாய் சீர் செய்து பிரச்சினை என்றால் 'ஏன்' என்று கேட்க பிறந்த வீடு வசதியாய் இருக்கிறது. தனக்கு?

''அண்ணா, நான் தப்பு எதுவும் செய்யலை, அண்ணா. தண்டனை மாதிரி கல்யாணம் வேண்டாம்''

''தப்பு எதுவும் நடந்துடக்கூடாது இல்லையா. அதுக்குத்தான்''

''அப்ப நீ உன் தங்கையை நம்பலையா?''

''உன் வயசை நம்பத் தயாரா இல்லை''

''அண்ணா, ப்ளீஸ்...''

''இங்க பாரு, நீ அவனை விரும்பலை, இல்லை. அப்ப நான் சொல்ற யாரை வேணும்னாலும் கல்யாணம் செய்யத் தயாரா இருக்கணும்...''

''தயார்தான் அண்ணா. ஆனா...''

''என்ன ஆனா, ஆவன்னா?''

''படிப்பை முடிச்சு ஒரு வேலைக்குப் போன பிறகு...''

''இங்க பாரு, அந்த லட்சணம்தான் தெரியுதே. ஐநூறு ரூபாய் சம்பளத்துக்கே எவனோ இப்படி உன் பின்னாடி சுத்தறான். இன்னும் நீ படிப்பை முடிக்க வேலை தேடிக்கறதுக்குள்ள எத்தனை பேர் உன் பின்னாடி சுத்துவாங்களோ. அது வரை, யார் வயத்துல நெருப்பைக் கட்டிக்கிட்டு வாழறது? அடிப்படையில ஒரு டிகிரி இருக்கு. மேல உன் கணவன் அனுமதிச்சா படி. இல்ல விடு. நம்ம வீட்ல எந்த பொம்பளை வேலைக்குப் போறா? போய் நாளைக்கு டாக்டர்கிட்ட வேலையை விடறதா சொல்லிட்டு வந்துடு...''

அண்ணன் இதற்கு மேல் பேச எதுவும் இல்லை என்பது போல் நகர்ந்து விட, அப்படியே பிரமை பிடித்து உட்கார்ந்து விட்டாள் மஹதி.

## 9

இரவு ஒன்பது மணிக்குத் தான் ராகவனும் ஜானகியும் மளிகை, காய்கறி என்று வாங்கிக் கொண்டு வீடு திரும்பினார்கள். மங்கா பாட்டி

## மேஜிக்... மேஜிக்!

மேஜிக் கலைக்கு நம் நாடு புகழ் பெற்றது என்பதை சொல்லித் தெரிய வேண்டியது இல்லை. பிரான்ஸ் நாட்டிலும் இந்த புகழ் பரவியுள்ளது. பாண்டிச்சேரியைச் சேர்ந்த தோனி சான், இங்கு கடந்த 40 ஆண்டுகளாக பல மேஜிக் நிகழ்ச்சிகளை நடத்தி பெருமைப்படுத்தி வருகிறார்.

காலி பலூனுக்குள்ளிருந்து புறாக்கள் வெளிவருவது, வெறும் கையில் ரோஜா, எதிரில் நிற்போர் பையிலுள்ள பொருட்களை மறையச் செய்வது, சீட்டுக்கட்டில் சாகசம் என இவர் செய்யும்



சாகசங்களைக் கண்டு, பிரான்ஸ் நாட்டு மேயர்கள், நடிக-நடிகையர்கள் பாராட்டியுள்ளனர். இவரின் வெள்ளைக்கார மனைவி 'அன்னி'யும் இவருக்கு உறுதுணையாக மேடையில் தோன்றுகிறார்.

பிரான்ஸ் நாட்டு ராணுவத்தில் உயர் பதவியிலிருக்கிறார் இந்த மேஜிக் மேன் தோனி சான்.

-பாரீஸ் பார்த்தசாரதி.

மூலம் வீட்டில் நடந்தவற்றை தெரிந்து கொண்டார்கள். சேகரும் தன் பங்கிற்கு சாப்பிடும் போது விஷயத்தைச் சொன்னான்.

மஹதி மனம் துடித்தது. இன்னொரு குறுக்கு விசாரணையா இப்போது?

நிதானமாக கேட்டுக் கொண்ட ராகவன், ''எல்லாம் சரி சேகர், நம்ம குழந்தை தப்பு செய்யாத போது, அவ படிப்பையும் வேலையையும் நிறுத்தி அவளுக்கு ஏன் நாம தண்டனை தரணும்?'' என்றார் அமைதியாக.

மஹதி, சேகர் இருவருமே இதை எதி(ர்) பார்க்கவில்லை.

மஹதிக்கு அப்பாவை அப்படியே கட்டிப் பிடித்து ''தேங்க்யுப்பா'' என்று கதற வேண்டும் போல் இருந்தது.

சேகரோ எதிர்பாராமல் முகத்தில் அடிவாங்கியது போல் திகைத்தான்.

''அப்பா, என்ன சொல்றீங்க?''

''இங்க பாரு சேகர். அவ டாக்டர்கிட்ட வேலைக்கு சேர்ந்து ஒரு மாசம் தான் ஆகியிருக்கு. திடீர்னு போய் 'நின்னுக்கறேன். வேற ஆளைப் போட்டுக்கோ'னு சொல்றது சரியில்ல. அவமேல தப்பில்லை. எவனோ அவளைத் தொடர்ந்து வந்தா, அவனைப் பிடிச்சு நாலு சாத்து சாத்தறதை விட்டுட்டு நம்ம வீட்டுப் பெண்ணை நாமே சந்தேகப்படறது எந்த விதத்துல நியாயம்?''

ராகவனின் நியாயமான விவாதத்திற்கு சேகரிடம் பதில் இல்லை. கோபம் கொழுந்தாய் எழுந்து முகத்தை சிவக்க வைத்தது. ஆத்திரத்தில் கத்தினான்.

''நாளைக்கே அவ காதல் கத்தரிக்காய்னு வந்து நிற்கல்லே, என் பேரை மாத்தி வச்சுக்கறேன்.''

''வந்து நின்னாலும் தப்பில்ல சேகர். பையன் நல்லவனா தகுதியானவனா இருந்தா, கல்யாணத்துக்கு சம்மதிச்சுடுவேன்.''

இதையும் சேகரால் ஜீரணிக்க முடியவில்லை. தன் மனைவி முன் அப்பா தன்னை எதிர்த்து வாதிடுவது மானப் பிரச்சினையாய் தோன்றியது. தன்னை பெரியவனாய் காட்டிக் கொள்ள, அவரை சிறுமைப்படுத்தவும் அவன் தயங்காமல் தரம் இறங்கினான்.

''கல்யாணத்துக்குப் பணம் மூட்டையா கட்டி வச்சிருக்கீங்களா?'' எகத்தாளமாய் கேட்டான்.

அவர் அவனை இளக்காரமாய் பார்த்தார். 'நீ இவ்வளவு தானா?' என்றது அந்தப் பார்வை.

''இத்தனை வருஷத்துல உங்கம்மா அவளுக்கு இருபத்தஞ்சு பவுன் நகை சேர்த்திருக்கா. என் சம்பாத்யத்துல சீட்டு கட்டி சேர்த்திருக்கா. ஊர்ல நிலம் இருக்கு. அதை வித்து கல்யாணம் செய்வேன். போதுமா?''

இதைக் கேட்டவுடன் சேகரின் மனைவி வனிதாவுக்குச் சுர்ரென்று கோபம் எகிறியது.

''மாமா...'' என்று குறுக்கே வந்தவளை கையால் நிறுத்தினார் ராகவன். கோபமாய் எகிறாவிட்டாலும் அழுத்தமாய் பேசினார்.

''இங்க பாரும்மா, இது எனக்கும் என் மகனுக்குமான விஷயம். நீ தலையிடாதே, புரியுதா?''

வனிதாவால் இதைத் தாங்க முடியவில்லை.

''மாமா, தப்பா எடுத்துக்காதீங்க. கல்யாண பந்தம் பத்தி உங்களுக்கு நான் சொல்லணுமா? உங்க மகனும் நானும் வேற வேறயா?''

''இல்லம்மா. அதே சமயம் உனக்கு அவன் கணவனாகும் முன்பே எனக்கு மகன். அந்த உரிமையை மறந்துடக் கூடாது.''

''சரி, மாமா. உங்களுக்கு உங்க மகன்கிட்ட உரிமை இருக்கு. அவருக்கும் உங்ககிட்ட கடமை இருக்கு. ஆனா, பெத்த அப்பாம்மா இருக்கும் போது மஹிக்கு நாம லட்சக்கணக்குல ஏன் செலவு செய்யணும்?''

அவளை ஆழமாக நோக்கினார் ராகவன்.

''இங்க பாரும்மா, இந்த போதனை எல்லாம் உன் புருஷனோட நிறுத்திக்கோ. நானும் கொஞ்ச நாளா பார்க்கறேன். வீட்டு சூழல் ரொம்ப மாறிக்கிட்டு வருது. இது சரியில்லம்மா. நீயும் ஒரு வீட்லயிருந்து வாழ வந்திருக்கே. மஹி இந்த வீட்டுப் பொண்ணு. என் மகனுக்காக வீட்டை வித்து அஞ்சு லட்சம் கொடுத்தேன். நல்ல வேலைக்குத் தேவையான கல்வியைக் கொடுத்திருக்கேன். ரிடையரானப்ப வந்த கணிசமான தொகை, எங்களுக்குப் பின்னாடி உங்களுக்குத் தான். இந்த வீட்டு நிர்வாகம் இன்னமும் என் பென்ஷன் பணத்துல தான் நடக்குது. நான் விக்கறதா சொன்ன நிலம் என் மனைவியோட பிறந்த வீட்டு சொத்து. என் அக்காவான மங்கம்மா சொத்து. அதாவது மஹிக்கு பாத்யதை உள்ள சொத்து புரியுதா? அதைப் பத்திக் கேட்க உனக்கு எந்த உரிமையும் கிடையாதும்மா. உன் மனசு நோகக் கூடாதுனு நாங்க எல்லோரும் மவுனமா இருக்கோம். அதே போல இந்த வீட்டுப் பெண்ணோட மனசும் உன்னால நோகக் கூடாது. பார்த்து நடந்துக்கம்மா.''

அவர் மிக மென்மையாய் சொன்னாலும், ஒவ்வொரு வார்த்தையும் அவள் மனதில் ஊசி போல் ஆழத் தைத்தது.



விருட்டென்று எழுந்து உள்ளே போனாள் (வ)னிதா.

சேகருக்கு சங்கடமாய் போய் விட்டது. (ம)னைவியை போய் எப்படி சமாளிக்கப் போகி(ற)ாம் என்ற பயம் எழுந்தது. என்ன செய்வது (எ)ன்று புரியாமல், ''என்னப்பா இது? இப்படி (பே)சிட்டீங்க'' என்றான்.

ராகவன் அப்போதும் நிதானத்தை இழக்க(வி)ல்லை.

''நீ பேசியிருக்கணும்ப்பா. நீ பேசித் இருக்(க)த் தவறிட்டதால நான் பேச வேண்டி வந்தது. (நா)னும் போகட்டும் போகட்டும்னு பேசாம (இ)ருந்தேன். கொஞ்சம் யோசிச்சுப் பாரு... (கொ)ஞ்ச நாளா நீ உன் தங்கையை என்னவெல்லாம் பேசிட்டே! இன்னைக்கு மஹியைப் பேச(ற)வன் நாளைக்கு எங்களைப் பேச எத்தனை நாழி(கை) ஆகும்ப்பா?...''

''அப்பா!''

''இல்லப்பா. மனைவிகிட்ட நீ அன்பா (இ)ருக்கே சந்தோஷம், நல்லது. ஆனா, ஒரு (உ)றவை ஆதரிக்க இன்னொரு உறவை மட்டம் (தட்)டறது நல்ல குணமில்லப்பா... அது யாரா(இ)ருந்தாலும் சரி. மஹி இந்த வீட்டுப் பொண்ணு (இ)ல்லனு உன் மனசைத் தொட்டுச் சொல்லு.''

சேகர் தலை குனிந்தான். மஹதியால் (அ)தற்கு மேல் தாங்க முடியவில்லை. ஓடி வந்து (ரா)கவனின் மடியில் ''அப்பா'' என்று கதறியபடி (சா)ய்ந்தாள். வாஞ்சையாய் தட்டிக் கொடுத்து (அ)ணைத்துக் கொண்டவர் சேகர் பக்கம் திரும்பி(னா)ர்.

''குடும்பங்கறது 'நீயா நானா'னு பலத்(தை)ப் பரீட்சை செஞ்சு பார்க்கும் குஸ்தி மேடை (கி)டையாதுப்பா. 'அன்பால பிணைக்கப்பட (வே)ண்டிய கதம்ப மாலை. ஒவ்வொரு பூவுக்கும் (ஒ)வ்வொரு மணமும் குணமும் நிறமும் இருக்க(ல)ாம் தப்பில்லை. ஆனா, அதுல ஒரு பூ அழுகி(ன)ாலும் போச்சு. சரமே நாறிடும். கடவுளுக்கு (அ)ர்ப்பணிக்கற தகுதியை சரமே இழந்துடும். (ப)ா, போய் உன் மனைவிக்கு இதைப் புரிய வை. (ச)மாதானப்படுத்து.''

தலையை நிமிர்த்தாமலே, ''சரிப்பா'' என்(ற)ான்.

ரொம்ப நாட்களுக்குப் பிறகு மஹதி (அ)ன்று நிம்மதியாய் தூங்கினாள். மனம் பாரம் (கு)றைந்து அழுத்தம் இல்லாமல் இலகுவாய் (உ)ணர்ந்தாள். நல்ல தூக்கம் என்பது எத்தகைய (வ)ரப்பிரசாதம் என்பதை அன்று தான் உணர்ந்(த)ாள்.

## 10

ஸ்பென்சர் பிளாசா முழுதும் சசியுடன் சுற்றி விட்டாள் மஹதி. கல்லூரித் தோழியின் கல்யாணத்திற்கு பரிசு வாங்க வந்திருந்தார்கள். பரிசு தேர்வு திருப்தியாய் இல்லை. மஹதிக்குப் பிடித்தது சசிக்குப் பிடிக்கவில்லை. சசிக்குப் பிடித்தது மஹிக்குப் பிடிக்கவில்லை.

''போப்பா, இப்படியே சுத்திக்கிட்டு இருக்கப் போறோமா? ரெண்டு ஐஸ்கிரீம், பேல்பூரி, பாப்கார்ன்... இப்படியே போனா கிஃப்டுக்கு வெச்சிருக்கற பணத்தையும் தின்னே தீர்த்துடப் போறோம். எனக்குக் கால் வேற வலிக்குது. உனக்கு என்னாச்சு, மஹி. பயங்கர எனர்ஜடிக்கா இருக்கே.''

சிரித்துக் கொண்டாள் மஹதி. முதல் நாள் இரவு பெரியப்பா தனக்கு சாதகமாய் பேசியது முதல் அவளுக்கு உண்மையிலேயே தலைகால் தான் புரியவில்லை. ஆறுமாதமாய் மவுனமாய் இருந்திருக்கிறார். வீட்டுப் பெண்கள் தான் மகனுக்கு பயந்து கொண்டு தனக்குச் சாதகமாகப் பேசத் தயங்குகிறார்கள் என்றால் இந்த அப்பா கூடவா இப்படி இருக்க வேண்டும் என்று எத்தனை நாட்கள் குமைந்திருக்கிறாள். ஆனால், அவரோ நிதானமாய் வீட்டுச் சூழலை ஆராய்ந்து, எல்லை மீறும் போது சமயம் பார்த்து சரியாகப் பேசி விட்டார். அனுபவஸ்தர் அனுபவஸ்தர் தான். ஒரு சொட்டு மழைக்காக ஏங்கும் போது அருவியாய் மழை கொட்டுவது போல் இருந்தது அவளுக்கு.

அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாழ்?

எத்தனை உண்மை!

அண்ணன் மட்டும் ஏன் தாழ் போட்டிருக்கிறான்? அப்பா மவுனம் உடைத்தது போல் அண்ணனும் இந்தப் பாராமுகம் களைவானா? எப்போது? அண்ணியும் மனம் மாறி அன்பானவளாய், இந்த சசி போல் தோழியாய் மாறினால் எத்தனை நன்றாக இருக்கும்?

நினைவின் தீவிரத்தில் கவனிக்காமல் எதிரே வந்தவர் மீது மோதினாள். ''சாரி'' என்றபடி நிமிர்ந்தாள் அப்படியே உறைந்தாள்.

விகாஷ்!

முதல் வேலையாய் தன்னைச் சுற்றி ஒரு

முறை அவசரமாய்ப் பார்த்தான். எங்கிருந்தோ அண்ணன் முளைத்து வந்து தன்னை அடித்து விடுவானோ என்ற திகில்தான் முதலில் மனதில் எழுந்தது. ஏற்கனவே வீட்டில் பிரச்சினை. அது இவனால்தானே தீவிரமாகி அண்ணன் அடிக்கும் அளவு வளர்கிறது. அண்ணனைப் போல் அப்பாவும் யோசித்திருந்தால் தன் கதி என்னவாகி இருக்கும். அதற்கெல்லாம் காரணம் இவன்தானே என்ற எரிச்சல் அடிவயிற்றிலிருந்து எழுந்தது. அவனைக் கோபமாய் முறைத்தாள்.

நடுத்தெருவில் சேகர் மஹதியை அடித்திருந்ததால், தன்னால் அவளுக்கு வீட்டில் பிரச்சினை ஏற்பட்டிருக்கும் என்பதை விகாஷ் உணர்ந்தே இருந்தான். ஏற்கனவே அவளை அன்பால் குளிப்பாட்ட வேண்டும் என்று நினைத்திருந்தான். தன்னால் அவள் துன்பப்பட்டது உணர்ந்ததும் மனம் இன்னும் வலித்தது.

முதல் நாள் இரவு அவன் சரியாகவே உறங்கவில்லை. அவளிடம் மென்மையாய் காதலைச் சொல்லத் தவித்திருந்தவன் மனம் இப்போது மன்னிப்பு கேட்கத் துடித்தது. அவளோ அவனைத் தவிர்க்கிறாள். முறைக்கிறாள்... என்ன செய்வது? எப்படி ஆரம்பிப்பது? துடிக்கும் மனதில் வார்த்தைகள் வேறு தந்தியடிக்கும் போல் இருந்தது. ஆனால் நல்ல சந்தர்ப்பம். நழுவ விடலாமா?

சட்டென்று யோசித்தவனாய், ''நீங்க நவீன் சிஸ்டர்தானே?'' என்றான்.

மஹதி ஒரு நிமிடம் குழம்பினாள்.

தம்பி பெயரைச் சொல்கிறான். அப்படியென்றால் தம்பிக்கு தெரிந்தவனா? தெரிந்த நபர் என்ற முறையில்தான் பேச வருகிறானா? அண்ணனைப் போல் தானும் தவறாக நினைத்து விட்டோமா? தம்பியை அறிந்தவன் அம்மாவையும் அறிந்து கொண்டிருப்பானா? உடனே ஒரு வெறுப்பு சூழ்ந்தது.

இவர்களிடையே நடக்கும் நாடகம் புரியாத சசி, விகாஷிடம் ''ஆமாம், நவீன் இவ தம்பிதான்'' என்றாள்.

''நீங்க இவங்க பிரெண்ட்தானே?''

சசி தலையாட்டுவதற்குள் மஹதி, ''சசி வா'' என்று அவளை இழுத்துக் கொண்டு அகல முயன்றாள்.

அவர்களுடனே நடந்த விகாஷ், கெஞ்சலாக ''மஹதி ப்ளீஸ், ஒரு நிமிஷம். நான் சொல்றதைக் கேளுங்களேன்'' என்றான்.

மஹதிக்குக் கோபம் தலைக்கேறியது. படபடவென்று ''என்ன? நீங்க என் தம்பியோட பிரெண்டா? சந்தோஷம். அதுக்கு என்ன இப்போ? நீங்க இப்படி என் பின்னாடியே வர்ற
நல்லாவா இருக்கு? நேத்து எங்கண்ணன்கிட்
நான் வாங்கின அடியைப் பார்த்தீங்க இல்ல
போதும் சார். ஒரு பொண்ணு பின்னாடி பொ
இடங்களில் சுத்தினா அவளுக்குப் பே
கெடும்னு கூடத் தெரியாத மனுஷரா நீங்க?'' த
ஆத்திரம் முழுதும் கொட்டித் தீர்த்தாள் மஹதி

சசி எதுவும் புரியாமல் நின்றாள்.

''மஹதி, நான் செஞ்சது தப்புதான். ஆன
ஒரு நிமிஷம் நின்னு. நான் என்ன சொல்
வரேன்னு கேட்கலாம் இல்லையா?'' அவ
இறைஞ்சினான்.

இரண்டடி எடுத்து வைத்த மஹதி நின்
அவனை முறைத்தாள்.

''வயசுப் பொண்ணு பின்னாடி சுத்தற உ
களை மாதிரி ஆண்கள் என்ன சொல்வீங்க?
லவ் யுதானே? போங்க சார், போய் வேற வேல
இருந்தா கவனியுங்க.''

சொல்லிவிட்டு நிற்காமல் சசியை இழு
துக் கொண்டு வெளியேறினாள்.

ஆட்டோவில் பயணிக்கும் போதும் படபடப்பு அடங்கவில்லை மஹதிக்கு. ஒரு ஹோட்டலில் இறங்கிக் கொண்டார்கள். இரண்டு பிரெஷ் லைம் ஜூசுக்கு ஆர்டர் கொடுத்து விட்டு காத்திருந்த வேளையில் சசியிடம் எல்லாம் கொட்டினாள் மஹதி. எல்லாம் நிதானமாய் கேட்டுக் கொண்டாள் சசி.

''எல்லாம் சரிதான் மஹி. ஆனா, அவன் என்னதான் சொல்ல வரான்னு ஒரு வார்த்தை நீ பொறுமையாக் கேட்டிருக்கலாம்னு எனக்குத் தோணுது''

சசி சொல்ல, தோள்களைக் குலுக்கிக் கொண்டாள் மஹதி.

## 11

சேகர் அலுவலகம் கிளம்பிப் போனபின் வனிதாவுக்கு வேலையே இருக்காது. மாமியார் ஜானம்மாவும் அவர் அம்மா மங்காப் பாட்டியுமே சமையலின் பெரும் பகுதிகளைக் கவனித்து விடுவதால் அவளுக்குச் சில்லறையாய் சில சுற்று வேலைகள் மட்டுமே இருக்கும். அதை முடித்து பதினோரு மணி வாக்கில் எல்லோருமாய் சாப்பிட்டால் பின் நான்கு மணி வரை எந்த வேலையும் இருக்காது.



இயல்பிலேயே வனிதாவுக்கு வாழ்வில் பெரிய குறிக்கோள்களோ இலக்குகளோ கிடையாது. சற்று வளமான வறுமை அறியா சூழல். அதனால் படிப்பும், வாழ்வின் எதிர்கால அவசியத்திற்காய் அறிவிற்காய் அல்லாமல் 'இந்த வீட்டுப் பெண்ணும் படித்திருக்கிறாள்' என்ற பகட்டிற்காய் மட்டுமே அமைந்தது. மயிரிழையில் தேர்வில் வெற்றி பெறுவது, சினிமா, டி.வி. பார்ப்பது, விதவிதமாய் உடுத்துவது, நகை அணிவது இவை மட்டுமே வாழ்க்கை என்று உல்லாசியாய் வளைய வந்தாள்.

அவளுக்கு அமைந்த தோழிகளும் உறவுப் பெண்களும் இதே போன்ற இயல்பில் இருந்து விட்டதால் இவளுக்கு உலகின் மற்ற ரம்ய நிறங்கள் தெரியாமலே போய்விட்டன. அவளுடைய அத்தைப்பெண், பெரியப்பாமகள் என்று நெருங்கிய அவள் வயதொத்த பெண்களும் கணவனைக் கைக்குள் வைத்திருப்பதே புத்திசாலித்தனம் என்றும், நகையும் நட்டும் சீரும் சிறப்புமாய் வாழ்க்கைப்பட்டு கணவன் குடும்பத்தை அதிகாரமாய் கைக்குள் வைத்திருந்தாலே கடைசி வரை கவலை இல்லாமல் வாழலாம் என்றும் போதிக்க, அதை அப்படியே வேதவாக்காய் எடுத்துக் கொண்டு விட்டாள் வனிதா.

அன்பால் வென்றிருக்க வேண்டிய குடும்பத்தை அதிகாரத்தாலும், ஆசையால் கட்டிப்போட்டிருக்க வேண்டிய கணவனை அதட்டலாலும் ஆட்டிப் படைத்தாள்.

## வலிப்பு நோயை முன்கூட்டியே அறியும் நாய்

வீட்டு செல்லப்பிராணியான நாய், நன்றி உள்ளது மட்டுமல்ல, குழந்தைகளுக்கு வரும் வலிப்பு நோயை முன்கூட்டியே அறி
வித்து எச்சரிக்கும் ஆற்றல் படைத்தவை என
பது இப்போது மருத்துவ ஆய்வு ரீதியாக நிரூ
பிக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வுக்கு
முன்பு இதுவொரு கட்டுக்கதை
தான் என்று எல்லோராலும்
கருதப்பட்டு வந்தது.
கனடா
வில் உள்ள
ஆல் பெர்ட்
குழந்தைகள் மருத்து
வமனை நரம்பியல் டாக்ட
ஆடம் கிர்டன் தனது ஆய்வி
மூலம் நாய்களுக்கு வலிப்பு நோயை
முன்கூட்டியே அறியும் ஆற்றல் உள்ளது என
பதை நிரூபித்துக் காட்டியுள்ளார். இதற்கா
இவர் 60 நாய்களை ஆய்வில் ஈடுபடுத்தினா
இதில் 9 நாய்கள் (15 சதவீதம்) குழந்தை
ளுக்கு வரும் வலிப்பு நோயை முன்கூட்டியே
தெரிந்து கொண்டன.

குழந்தைக்கு வலிப்பு நோய் வரும் என்பது தெரிந்ததும் நாய் தனது நாக்கால் நக்கி அந்த அறிவிப்பை வெளிப்படுத்தும். அல்லது முனகல் சத்தம் எழுப்பும். அல்லது குழந்தையின் பக்கத்தில் போய் நின்று கொண்டு, வலிப்பு நோய் வந்ததும் குழந்தைக்கு பெரிதும் காயம் ஏது
வும் ஏற்ப டா
மல் பாதுகாக்
கும். இது 80 சதவீதம்
உண்மையாகும் என்று
சொல்லும் டாக்டர் ஆடம் கிர்டன், இதற்காக நாய்க்கு எந்த பயிற்சியும் அளிக்க வேண்டிய அவசியமும் இல்லை என்றார்.

நாய்க்கு இயற்கை அளித்திருக்கும் இயற்கை கொடை இது. வியக்காமல் இருக்க முடியுமா?

-திருமகள்.

படிப்பில் நாட்டமும், வாழ்வில் சாதிக்க வேண்டும் என்ற துடிப்பும் இருந்த மஹதியை அவளால் ரசிக்க முடியவில்லை. வீட்டில் சின்ன தேவதையாய் செல்ல இளவரசியாய் வளைய வந்த மஹதி அவள் மனதில் முள்ளாய் நெருடினாள்.

''வயசுப் பெண்ணை இன்னும் ஏன் கட்டிக் கொடுக்காம வச்சிருக்காங்க'' என்ற பிறந்த வீட்டு மனிதர்கள் பேச்சு வேறு அவள் வெறுப்பை மேலும் தூண்டி விட்டது.

திருமணமான புதிதில் சேகர் வேறு எதற்கெடுத்தாலும் ''எங்க மஹதி புத்திசாலி'' ''எங்க மஹதி நல்லா ரங்கோலி போடுவா. அட அது மாதிரி நீயும் போடறியே!'' ''மஹதி சூப்பரா படம் வரைவா'' ''மஹதி பிரமாதமா படிப்பா'' என்று அவ்வப்போது கூற, எரியும் நெருப்பில் எண்ணெயாய் மேலும் அவளை எரிய வைத்தது.

மறு வீடு போன சமயம் அக்காவிடம் மெல்ல இது பற்றி சொல்ல, அவள் உதட்டைச் சுழித்துப் பழித்தாள்.

''இந்த ஆண்களே இப்படித் தான்டீ. தன் அம்மா, தன் அக்கா தங்கை, தன் குடும்பம்- இதெல்லாம் தான் ஒசத்தி. ஏதுடா, நமக்காக ஒருத்தி தன் குடும்பம், பெத்தவங்க ஒட்டு உறவு எல்லாம் விட்டுட்டு வராளே. அவளை கவனிப்போம், பாராட்டுவோம், அன்பு செலுத்துவோம்னு எதுவும் கிடையாது.''

என்று முன்னுரை வழங்கத் துவங்கிய அக்கா அனிதாவுக்குப் புகுந்த வீட்டில் பிக்கல் பிடுங்கல் அதிகம். இரண்டு நாத்தனார், மூன்று கொழுந்தன்கள் என்று அனைவருக்கும் மூத்தவராய் பிறந்த இவள் கணவன் தலையில் குடும்ப பாரம் முழுதும் விழ, இவளால் தன் கனவு வாழ்வை வாழ முடியவில்லை. அந்த ஏக்கம் எப்போதும் மனதின் அடியில் நீறு பூத்த நெருப்பாக தங்கி விட்டது. அதனால் தங்கையையும் தன் தராசிலேயே வைத்துப் பார்த்து அறிவுரை வழங்கினாள்.

''இங்க பாரு, நான் செஞ்ச தப்பை நீ செய்யாதே. கல்யாணமான புதுசுல புருஷன் நம்மகிட்ட மயங்கிக் கிடக்கும் போதே அவங்களை வளைச்சு முந்தானையில முடிஞ்சு வெச்சுக்கணும். எனக்காவது சொந்த நாத்தனார் கொழுந்தனுங்க. உனக்கு அப்படியா? ஒண்ணுவிட்ட நாத்தனார்தானே! உனக்கு என்ன தலையெழுத்து அவளைத் தாங்கணும்னு? ஒரு பொண்ணுக்குக் கல்யாணம் கார்த்திகைனா சும்மாவா நம்ம சமூகத்துல? அந்தப் பணத்தைச் சாமர்த்தியமா உன் எதிர்காலத்துக்கு சேர்த்து வச்சுக்க. புரியுதா? கொஞ்சம் கொஞ்சமா உன் புருஷன் மனசை மாத்து. அவ படிப்புக்கு வருஷத்துக்கு எவ்வளவு செலவாகுதுனு கணக்குக் காட்டு. அதை சேமிச்சா எதிர்காலத்துல உன் குழந்தைங்க படிப்புக்கு உதவும்னு எடுத்துச் சொல்லு. மெல்ல அந்த பெண்ணை அவ வீட்டுக்கு அனுப்பிடு. அவ கல்யாணம், படிப்பு எல்லாம் அவ பெத்தவங்க பொறுப்புத் தானே? உனக்கென்ன செய்யணும்னு அவசியம்?''

அக்கா தங்கைக்கு துர்போதனை செய்தாள். தங்கை தன் கணவனிடம் சுயநலத்தை விதைத்தாள். சுயநலம் என்ற கத்தரி, பாசம் என்ற செடியை வேரோடு பிடுங்கிச் சிதைக்கப் பார்த்தது. அதில் தான் மஹதி துவண்டு துடித்துப் போனாள். வனிதா செடியை முற்றும் பிடுங்கிப் போடுவதற்குள் ராகவன் தடுத்து விட்டார்.

அவமானமும் தோல்வியும் வனிதாவை அடிபட்ட புலியாய்- கையாலாகாத காலொடிந்த புலியாய் உறும வைத்தது.

இருபத்தைந்து பவுன் நகையும் நிலம் விற்ற பணமும், நியாயமாய் தனக்கும் தன் கணவருக்கும் சேர்ந்திருக்க வேண்டியது. யாரோ ஒரு பெண்ணுக்குப் போகப் போகிறதா? இது என்ன நியாயம் என்று அவளுக்குப் புரியவே இல்லை. மனம் குடைய அம்மாவிடமோ அக்காவிடமோ ஒரு பாட்டம் சொல்லி அழத் துடித்தாள்.

## 12

**சா**ப்பாடானதும் மாமியாரிடம் அம்மா வீடு வரை போய் வருவதாய்ச் சொல்லிக் கொண்டு கிளம்பி விட்டாள் வனிதா. அம்மா வீட்டின் அருகிலேயே அக்கா அனிதாவின் வீடு.

இவள் போனபோது, எதிர்பார்த்தது போல் அனிதாவும் அங்கேயே இருந்தாள்.

''வாடி வனி, என்ன விஷயம்?'' என்றாள் அனிதா.

''விஷயம் இருக்கு. இல்லாட்டி இப்படி உன்னை மாதிரி நினைச்ச போது அம்மா வீட்டுக்கு ஓடி வர முடியுமா?'' வேர்த்து வழிய அமர்ந்து தலையை நொடித்த தங்கையைக் கிண்டலாய் பார்த்தாள்.

''என்ன கோவம் உனக்கு? யார் மேல கோவம்? இரு முதல்ல ஏதாவது குடி...'' என்றவள் உள் பக்கம் திரும்பி ''அம்மா'' என்று குரல் கொடுத்தாள்.

அம்மா கையில் காபியுடன் வந்தாள்.

''வா, வனி. குரல் கேட்டுது. காபியோட வந்துட்டேன். மாப்பிள்ளை ஆபீஸ் போயிருக்காரா? வீட்ல எல்லோரும் நல்லா இருக்காங்களா?''

அம்மா நீட்டிய காபியைப் பெற்றுக் கொண்டே, ''அவங்களுக்கு என்ன குறை? எல்லாம் நல்லா இருக்காங்க.'' என்றாள்.

அவள் அசைந்து உட்கார்ந்ததில் சோபா கிரீச்சென்றது. தாத்தா கால கடிகாரம் ஒன்றடித்து சுரகரவென்று ஓய்ந்தது. பிறந்த வீட்டில் பழகிய அந்த சப்தங்களை காபியோடு சேர்ந்து ரசித்தாள் வனிதா.

''என்னடி விஷயம்?'' என்றாள் மேலும் அடக்க முடியாத அனிதா.

சொல்லத் துவங்கும் முன்பே வனிதாவின் கண்கள் கலங்கி விட்டன. அம்மா பதறிப் போனாள்.

''என்னடி பொண்ணே? ஏன் அழறே?''

''பின்ன என்னம்மா? சொந்தப் பிள்ளையவிட வளர்ப்பு மக உசத்தினு பேசறவங்களை என்னனு சொல்றது? இத்தனை வருஷம் வளர்த்து, படிக்க வெச்சு, சாப்பாடு போட்டாச்சு. போதாதா? அவ பெத்தவங்க என்ன செத்தா போயிட்டாங்க? கல்யாணம் அவங்க தானே செலவு செஞ்சு கட்டிக் கொடுக்கணும்?''

''ஆமாம்'' என்றாள் அவசரமாக அனிதா.

''எங்க மாமியார் அவளுக்காக இருபத்த...ஞ்சு பவுன் செஞ்சு வெச்சிருக்காங்களாம். என் மாமனார் நிலத்தை வித்து கல்யாணம் செய்யப் போறாராம்.''

''ஆஹா, நல்ல நியாயமா இருக்கே'' என்றாள் அனிதா அவசரமாக.

அம்மா அவளைப் போல் தடாலடியாக தன் அபிப்ராயத்தைச் சொல்லி விடவில்லை.

''இதைக் கேட்க எனக்கு உரிமை இல்லையாம்!''

''ஓஹோ! பேஷ். எனக்குத் தான் ஓயாத சாகரம்னு நினைச்சேன். உனக்கும் ஒரு ஒண்ணு விட்ட சனியன் சொத்தைப் பிடுங்க இருக்குனு சொல்லு.''

அனிதா பொரிய அம்மா குறுக்கிட்டார்.

''அனி, சும்மா இரு. இப்படி பேசக் கூடாது.''

''என்னம்மா, நீ. 'சொந்தம் பந்தமெல்லாம் வேணும். நாத்தி மச்சினருக்கெல்லாம் செய்யணும் உன் கடமை. காக பணத்தை விட சொந்தத்தை சேர்த்துக்கறது தான் பலம்'னு எல்லாம் என்கிட்ட லெக்சர் அடிச்சே என்னை ஒரு வழி செஞ்சுட்டே. என் புருஷன் சம்பாத்யத்துல குடும்பச் செலவு போக அரைகாசு சேர்க்க முடியலை. இவளாவது நல்லா இருக்கட்டுமே.''

''நல்லா இருக்கணும்னா, நாத்திக்கு செய்யறதுல கணக்குப் பார்க்கக் கூடாது.''

''போம்மா, என்ன சொந்த நாத்தனாரா?''

''அது முக்கியமில்ல. மஹதி அந்த வீட்டுப் பெண்ணா வளர்ந்திருக்கா. அவளை சொந்த மகளா அவங்க பாவிக்கறாங்க. செஞ்சுட்டுப் போறாங்க.''

அக்காவும் அம்மாவும் பேசுவதில் குறுக்கிடாத வனி, அம்மாவும் மாமனார், மாமியார் போல் பேசுவதில் அடிபட்டுப் போனாள்.

''என்னம்மா, நீ. செஞ்சுட்டுப் போறாங்கனு சுலபமா சொல்லிட்ட. இன்னி தேதியில இருபத்தஞ்சு பவுன்னா சும்மாவா? நிலத்தை வித்தா என்ன காசு வரும். நாலஞ்சு லட்சத்தை சும்மா விட முடியுமா? நாளைக்கு எனக்கு பிள்ளை குட்டி பிறந்தா யார் செய்வாங்க? அதோட நிற்குமா? மஹதி கல்யாணத்துக்குப் பிறகு வளைகாப்பு, சீமந்தம், குழந்தை பிறப்பு, குழந்தைக்கு சீர்னு எத்தனை இருக்கு- ஆயுசு பூரா செஞ்சுகிட்டே இருக்கணுமா நான்?''

கணக்குப் போட்டு வக்கீல் போல் பேசும் மகளை ஆச்சர்யத்தோடு பார்த்தாள் அம்மா. தன் காலத்தில் இப்படியெல்லாம் யோசிப்பு வந்திருக்குமா? மனிதர்கள் பலம் என்று தானே சும்பத் தெரிந்தது. எப்படி, எப்போது பணமே பிரதானம் என்றானது? பங்களா போன்ற வீடும், ஏசி முதல் கார் வரை வீட்டுச் சாதனங்களும் நடுத்தர வர்க்கத்திற்கும் எட்டும் விதம் பொருளாதார சந்தை மலிந்து விட உறவுகளும் மலிந்து நசிந்து விட்டன. சுயநலம் தலை தூக்கி விட்டது. வேறு என்ன சொல்ல? பெருமூச்சு விட்டாள்.


அனிதா தங்கையை பரிதாபமாய் பார்த்தாள். ''வனி, அம்மா அப்படித்தான் பேசுவாங்க. அந்தக்கால மனுஷி. நீ தான் உன் விஷயத்துல முடிவெடுக்கணும். என் விஷயத்துல என் புருஷன் என் சொல் பேச்சு கேட்கமாட்டார். உனக்கு அப்படி இல்லை. நல்லா அவர்கிட்ட வேப்பிலை அடி. சொல்றா மாதிரி,

நாலஞ்சு லட்சம்னா சும்மாவா? அந்தப் பொண்ணுக்குப் பெத்தவங்க இருக்காங்க இல்ல. அப்புறம் என்ன கேடு?"

"என் மாமனார் மாமியார் கேட்க மாட்டாங்க, அக்கா."

"மயிலே மயிலேனா இறகு போடாதும்மா. போட வைக்கணும். புரியுதா? 'நிலம் வித்த காசை எனக்குக் கொடுக்காட்டி என் மனைவியோட நான் வீட்டை விட்டுப்போறேன்'னு பெட்டியைத் தூக்கிகிட்டு உன் புருஷனை நடக்கச் சொல்லு. வீட்டுக்கு லோனும் கட்டியா விட்டா, கிழவனும் கிழவியும் கதறிகிட்டு வருவாங்க."

வனிதாவின் முகம் மெல்ல மலர்ந்தது. டி.வி. வில்லி நடிகை ரேஞ்சுக்கு அனிதா விவரிக்க, வனிதா மகிழ்ந்து போனாள்.



"நல்லதுதானக்கா" என்றாள்.

அம்மாவால் [illegible]

"ஏய், [illegible] வயித்தெரிச்சலை என்ன கொட்டிக்கிறீங்க" என்றாள்.

"அவதாம்மா என் வயித்தெரிச்சலைக் கொட்டிக்கறா" என்றபடி எழுந்த வனிதா "அக்கா, இதுக்கு மேல நான் இங்க நின்னா அம்மாவே என்னை [illegible] ஒரு வழி பண்ணிடுவாங்க. நான் [illegible] கொடுத்திட்டே போறேன்..."

[illegible]

அம்மா, மகளை [illegible] நின்றாள்.

## 13

ஏதோ அஸ்திரங்களெல்லாம் அர்ஜுனன், ராமன் காலங்களோடு போய் விட்டதாய் நினைக்கிறோம். ஆனால், தினசரி வாழ்வில் எத்தனை அஸ்திரங்களைப் பிரயோகித்துக் கொண்டிருக்கிறோம்!

பாசத்தை அஸ்திரமாய் மருமகளுக்கு எதிராக மகன் மீது பிரயோகிக்கும் மாமியார்கள்...

காதலை காமமாய் கணவன் மீது பிரயோகிக்கும் மனைவிகள்...

அழுகையை அஸ்திரமாய் பிரயோகித்துக் காரியம் சாதிக்கும் குழந்தைகள்...

கோபத்தை அஸ்திரமாய் பிரயோகித்து வீட்டை தன் கட்டுப்பாட்டுக்குள் வைக்கும் குடும்பத்தலைவன்கள்...

தந்திரத்தை அஸ்திரமாய் பிரயோகிக்கும் அரசியல்வாதிகள்...

வனிதாவும் தன் அக்கா அனிதா போதனையில் கணவன் மீது ஒரு அஸ்திரத்தைப் பிரயோகிக்க முடிவெடுத்து விட்டாள். அது-

சேகர் மீது பாராமுகம். தன் பாராமுகத்தை சேகரால் தாங்க முடியாது என்று வனிதாவுக்குத் தெரியும். அவன் பக்கமே வராமல் அவனைத் துடிக்கச் செய்வாள்.

சேகர் இயல்பில் மென்மையானவன். வீட்டில் அப்பா தவிர மூவரும் பெண்கள். சண்டை சச்சரவு போடாமல் ஒற்றுமையாய் இருக்கும் பெண்கள். அன்பும் கிடைத்தது. செல்வ வளமையால் கேட்டது அனைத்தும் கிடைத்தன. படிப்பில் கட்டியாய் இருந்ததால், நல்ல உயர்கல்வியும் அது தொடர்பாய் வேலையும் சுலபமாய் கிடைத்து விட்டது.

சுலபமான கஷ்டமறியா வாழ்க்கை. முருகன் படைத்த உலகம் போல் அவனைப் பொருத்தவரை எல்லோருமே நல்லவர்கள். அதனால், அழகான வனிதாவின் உள்விகாரங்களை அவனால் உணர முடியவில்லை.

வனிதாவும் அக்கா சொல்படி மிகத் தந்திரமாய் செயல்பட்டாள். திருமணமான முதல் ஒரு மாதம் வரை சேகரின் குடும்பத்தினரைப் பற்றி அவதூறாய் எதுவுமே அவள் பேசவில்லை. நிதானமாய் கணித்தாள். யார் யார் எப்படி, கணவன் யாரிடம் மிகப் பிரியமாய் இருக்கிறான், பணக் கணக்கெல்லாம் எப்படி கையாளப்படுகிறது என்று கவனித்துக் கொண்டாள்.

மாமனார் பென்ஷனில் வீட்டு நிர்வாகம் ஓடுவதும், கணவன் வருமானம் பாதிக்கும் மேல் அப்படியே சேமிப்பாய் மாறுவதும் அறிந்து நிம்மதியானாள். ஆனால், செலவான அவன் பணத்தின் ஒரு பகுதி மஹதியின் படிப்பிற்காக செலவானது அவளுக்கு எரிச்சலை ஏற்படுத்தியது. வீண் செலவாகப்பட்டது. ஒரு டிகிரி வாங்கி விட்டாள். இதற்கும் மேல் என்ன படிப்பு இந்தப் பெண்ணிற்கு என்ற கோபம் கொழுந்தாய் மனதில் எழுந்தது. சேகர் வேறு தங்கை புத்திசாலி என்று அவள் மன ஓட்டம் புரியாமல் பேசி விட, அவளுள் மஹி மீது வன்மமே எழுந்து விட்டது. சேகரை மெல்ல தன் பக்கம் வளைத்தாள். மஹிக்கு எதிராக தூண்டி விட்டாள்.

இப்போது அவளுக்கு நகைகளும் நிலமும் மாமனாரிடமிருந்து போகப் போகிறது என்றவுடன் வனிதாவால் தாங்கவே முடியவில்லை.

ஆரம்ப காலங்களில் சேகர், ''மஹி சூப்பரா நார்த் இன்டியன் வகை சமையல் செய்வா'' என்று சொல்லி விட்டால் போதும். அவள் அத்தோடு அதை மறந்து விடுவாள். அவள் இரண்டு நாட்கள் மனதிலேயே வைத்திருந்து சமயத்திற்காகக் காத்திருப்பாள்.

இரு தினங்களுக்குப் பிறகு மிகத் தாமதமாக இரவு படுக்க வருவாள். ஏன் என்று சேகர் கேட்டுவிட்டால் போதும். வாழைப் பழத்தில் ஊசி போல் ஏற்றி விடுவாள்.

''பாவங்க அத்தையும் பாட்டியும். அத்தனை வேலையும் செய்யறாங்க. மஹி படிக்கற பொண்ணு தான். இருந்தாலும் கொஞ்சம் சமையல்ல ஒத்தாசை செய்யணும். எங்க வீட்ல நாங்களும் தான் படிச்சோம். ஆனா, அதுக்காக வீட்டு வேலையை செய்யாம விட்டதில்லை. எங்கம்மா கொன்னுடுவாங்க. இங்க பாவம் அத்தை. மஹிக்கு அதிகமா செல்லம் கொடுக்கறாங்க... அது தப்பில்லீங்க... இப்ப பாருங்க, நான் எல்லா வேலையும் அவங்களுக்கு முடிச்சுட்டு வந்தேன். ஆனா, மஹி இன்னொரு வீட்டுக்குப் போற பொண்ணு. கை பழக்கமா எல்லா காரியமும் செஞ்சு பழக வேணாமா?''



எடுப்பார் கைப்பிள்ளை சேகருக்கு இது சரி என்றே படும்.

இப்படியே ஒவ்வொரு விஷயத்திலும் பேசிப் பேசி சேகர் மனதை திரித்து மஹிக்கு எதிராக மாற்றி விட்டாள்.

இப்போது சொத்து விஷயமாய் அவன் மனதை மாற்ற வேண்டும். அதற்குத் தான் பாராமுகம் என்ற அவனால் தாங்க முடியாத அந்த அஸ்திரத்தை எடுத்திருக்கிறாள். அதைத் தாங்க முடியாமல் அவன் தெறப் போகிறான்.

## 14

விகாஷ் மொட்டை மாடி விளிம்பில் உட்கார்ந்து தெருவை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான். கண்கள் தெருவை இலக்கில்லாமல் மேய்ந்தாலும் மனம் மஹதியையே சுற்றி வந்தது.

இதென்ன விந்தை என்றும் தோன்றியது.

தன்னை நினைக்காத, தன்னிடம் ஒரு நொடி கூட நின்று பேசாத ஒரு பெண்ணைச் சுற்றியே மனம் ஏங்கித் தவிப்பது வினோதமாக இருந்தது. உடற்கூற்றின் ரசாயன மாற்றம் தான் இந்தக் காதல் என்று சொல்லலாம்.

ஆனால், அது ஏன் இந்தப் பெண்ணிடம் மட்டும் எனக்கு இப்படி ஒரு உணர்வு ஏற்பட வேண்டும்? இதுதான் ஜென்மாந்திர பந்தமோ? கன்னி மாடத்துச் சீதையைப் பார்த்தவுடன் ராமன் மனதைப் பறி கொடுத்தானாமே. வில்லொடித்தவுடன் மணப்பெண் கன்னிமாடத்தில் பார்த்த அதே பெண்ணாக இருக்க வேண்டுமே என்று மனம் பதைத்தானாமே. அந்த கடவுள் அவதாரத்தையே காதல் படுத்தியதென்றால், மானுடனான நான் எம்மாத்திரம்!

வேலை, வீடு, நட்பு வட்டம் என்று தெளிந்த நீரோடையாய் சென்று கொண்டிருந்த வாழ்வில் கல்லெறிந்து சலனப்படுத்திய மஹிக்கு மனதில் சிறை வைத்து ஆயுள் தண்டனை கொடுத்தாயிற்று.

ஆனால், அவள் மனதில் எனக்கு இடமுண்டா? அண்ணல் நோக்கும் போது அவளும் நோக்கினாள். அவளும் ஏங்கினாள். இங்கே என்னவள் முகம் திருப்பிப் போகிறாள். என்ன பூட்டு போட்டு மனதைப் பத்திரப்படுத்தி இருக்கிறாள்? எனக்கு அந்த வித்தை தெரியவில்லையே. இப்படித் தனியே உட்கார்ந்து புலம்ப வைத்து விட்டாளே.

''விகாஷ்''

எதிரே அம்மா நீலா நின்று கொண்டிருந்தார். கனவிலிருந்து விழிப்பது போல் தன்னை முழித்துப் பார்க்கும் மகனைப் பார்த்தார், நீலா.

''என்னடா திருதிருனு முழிக்கற?''

சுதாரித்துக் கொண்ட விகாஷ், ''ஒ... ஒண்ணுமில்லம்மா. நீ எதுக்கு மாடி ஏறி வரணும்? ஒரு குரல் கொடுத்திருந்தா, நான் வந்திருப்பேனே மே'' என்றான்.

''நல்லா வந்திருப்பே, போ. நூறு முறை கூப்பிட்டுட்டேன். உன் பிரெண்ட் ராஜு போன் செஞ்சான். அதுக்குத் தான் கூப்பிட்டேன்...''

அவசரமாய் எழுந்தான் விகாஷ்.

''இரு. இரு. அவன் போன்ல இப்ப இல்ல. பிறகு நீ பேசுவேனு சொல்லிட்டேன். கூப்பிடறது கூட காதுல விழாத அளவு என்ன செய்யறேனு நானே மேல ஏறி பார்க்க வந்தேன்.''

விகாஷுக்கு வெட்கமாய் போய் விட்டது. அதை வெளிக்காட்டாமல், ''செல்லுல அந்த மடையன் கூப்பிட்டிருக்கலாமே'' என்றான்.

''அதையும் சார்ஜ் பண்ணி மூதானே வச்சிருக்கே. இங்க பாரு, நானே கேட்கணும்னு இருந்தேன். கொஞ்ச நாளாவே நீ சரியில்ல. எப்பப்பாரு கண்ணுல ஒரு கனவு. உதட்டுல ஒரு சிரிப்பு. என்ன விஷயம்?''

சோற்றில் மறைத்த பூசணிக்காய் எட்டிப் பார்க்கிறது. இனி எப்படி மறைக்க முடியும்? அதுவும் பிறந்த நொடி முதல் வாய் பேசாத செய்கையையும் அழுகையையுமே புரிந்து கொண்டு, ஒவ்வொரு முகச்சுழிப்பையும் இனம் கண்டு சாலப் பரிந்து வளர்த்த தாயாரிடமா மறைக்க முடியும்?

''நானே உன்கிட்ட பேசணும்னு இருந்தேன்ம்மா'' என்று நகம் கீறியவன் மெல்ல நிமிர்ந்து அம்மாவைப் பார்த்தான். அனைத்து விஷயங்களையும் தோழியாய் பாவித்துக் கொட்டும் அம்மா தான். ஆனால், இப்போது தயக்கம்!

இது இப்போதைக்கு முடியும் விஷயமல்ல என்பதைப் புரிந்து கொண்டது போல் நீலாவும் மகனெதிரே சுவற்றுக் கட்டையில் உட்கார்ந்து கொண்டார்.

''நம்ம பக்கத்து வீட்டு ராதா ஆன்ட்டி இல்லம்மா...''

''ம். அவங்களுக்கென்ன?''

''அ... அவங்களுக்கு ஒண்ணுமில்ல... ரொம்ப நல்லவங்க.''

''ஆமாம். நீ விஷயத்தைச் சொல்லுடா.''

''அவங்க மக, அவங்க அக்கா வீட்ல வளர்ந்து வரா...''

''ஓ''

அம்மா கண்களில் படர்வது குறும்பா கண்டிப்பா என்பது அவனுக்கு இனம் புரியவில்லை. முறைப்படி மருமகள் வீட்டிற்கு வந்தாலே பிள்ளையைப் பெற்றவள் தன் அன்பிற்கு போட்டியாய் மகனைத் தன்னிடமிருந்து பிரிக்க வந்தவளாய் அவளை நினைப்பது சகஜம். அப்படியிருக்க மகன், தானே ஒரு பெண்ணைத் தேர்ந்தெடுத்திருப்பதாய்ச் சொன்னால் பெற்றவளால் ரசிக்க முடியுமா? விகாஷ் தடுமாறிப் போனான்.

தயங்கும் மகனை நீர்க்கமாகப் பார்த்தார் நீலா. படிப்பு, வேலை, கிண்டல், விளையாட்டு என்று சுறுசுறுப்பும் கலகலப்புமாக வளைய வரும் மகன் என்றாவது ஒருநாள் இப்படி தன் முன் காதலுக்குச் சம்மதம் கேட்டு நிற்பான் என்ற எண்ணம் நீலாவின் மனதில் எப்போதுமே உண்டு. நீலா பொதுவில் பரந்த மனப்பான்மை உள்ள பெண்மணி.

மற்ற எந்த உறவையும் நாமே தேர்ந்தெடுக்க முடியாது. கடவுளாக அருள்வதுதான். அது வரமோ சாபமோ வாழ்ந்து பார்த்து விடுகிறோம். ஆனால், வாழ்க்கைத் துணை என்பது அப்படி அல்ல. நாமே மனதுக்குப் பிடித்த துணையைத் தேர்ந்தெடுக்க முடியும். அதுவும் கூட இன்னார்க்கு இன்னாரென்று தேவன் அன்றே எழுதி வைத்தது தான் என்றாலும், நமக்கு என்னவோ நாமே தேர்ந்தெடுத்தோம் என்ற அற்ப சந்தோஷம்.

எந்தத் தாயாரும் மகன் நன்றாய் வாழ வேண்டும் என்றே விரும்புவாள். அவன் நல்வாழ்வுக்கு துணையாய் வரும் பெண், தான் தேர்ந்தெடுத்தாலும் சரி, மகனே தேர்ந்தெடுத்தாலும் சரி நல்ல பெண்ணாய் இருக்க வேண்டும். அவ்வளவுதான்.

நீலாவிற்கு இந்தப் பக்குவம் இருந்தது. அதனால் மகனிடம் ஏற்பட்ட மாறுதல் அவளை கலங்க வைக்கவில்லை. ஐயோ, மகன் காதலிக்கிறானே என்று பதற வைக்கவில்லை. அவன் காதலிப்பது நல்ல பெண்ணாய் இருக்க வேண்டுமே என்று மட்டும் மனம் விழைந்தது. மகன் மனம் நோகாமல், அந்தப் பெண் வீட்டுச் சம்மதம் கிடைத்து அவன் காதல் நிறைவேற வேண்டுமே என்று நெஞ்சு கரைந்தது.

மகனோ தாயாரின் மனநிலை புரியாமல் தடுமாறுகிறான்.

மகனின் தோளை மெல்ல தொட்ட நீலா, ''ம் சொல்லுப்பா'' என்றார்.

அந்தக் குரலில் தெரிந்த பாசமும் குழைவும் அவனை நெகிழ்த்தியது. இவள் என் தாய். இவளிடம் என்ன தயக்கம்?

''அம்மா, ராதா ஆன்ட்டி மகளை... நான்... விரும்பறேன்'' பட்டென்று சொல்லி முடித்து விட்டான்.



ஒரு நொடி நீலா மவுனம் சாதித்தார். ராதாவை நல்ல பக்கத்து வீட்டுப் பெண்மணியாய் தெரியும். இரு மகன்களுக்கு மட்டுமே தாய் என்று நினைத்திருந்தார். நவீன் பிறந்தநாளின் போதுதான் ராதா ''அதுதான் என் மூத்த மக'' என்று மஹதியைச் சுட்டிக்காட்டி அறிமுகப்படுத்தி இருந்தாள்.

''உங்களுக்கு ஒரு மக கூட இருக்காளா?'' என்று ஆச்சர்யமாய் கேட்டதற்கு, ''அதை ஏன் கேட்கறீங்க'' என்று சிரிக்க முயன்றாள். ஆனால் கண்கள் கலங்கியது போல் தெரிந்தது.

மஹதி அழகாகத்தான் இருந்தாள். ஆனால், முகத்தில் தெரிந்த கடுமை... அந்த நினைவு வந்தவுடனேயே தன்னையும் மறந்து உரக்க ''அந்த பெண்ணாப்பா?'' என்று கூறி விட்டார்.

அம்மாவின் முகம் போன போக்கில் விகாஷின் முகம் சுருங்கிப் போனது. சமாளித்துக் கொண்டான். அம்மா தெளிவாகச் சொன்னால் புரிந்து கொள்ளும் பக்குவம் உள்ளவள் என்பது அவனுக்குத் தெரியும். அதனால், நிதானமாக மஹதி பற்றியும் ராதா பற்றியும் சொல்லத் துவங்கினான்...

## 15

கம்பன் கைகேயியை அழகாக 'நாடக மயில்' என்று அழைக்கிறான். என்ன பொருத்தமான வர்ணனை! நாடகமாடி தன் காரியத்தை சாதித்தவளை இதைவிட வேறு எப்படி ஒற்றைச் சொல்லில் சொல்ல முடியும்? கைகேயி போல் நாடகமாடும் பெண்கள் இங்கே எத்தனை பேர்!

பெண்களுக்கு பொறுமை, தாய்மை, நிதானம், விவேகம், விட்டுக் கொடுத்தல், சகிப்புத்தன்மை என்று பல நல்ல குணங்கள் உண்டு. இந்த நல்ல குணங்களின் உறைவிடமாய் விளங்கும் பெண்கள் வாழும் இல்லங்களில் எல்லா நன்மைகளும் பெருகும்.

அதே தென்றல் புயலாய் சீற்றம் கொள்ளும் போது அங்கே அழிவுதானே நேருகிறது. ஆணிடம் உள்ள கெட்டப் பழக்கங்கள் அவனை மட்டும்தான் அழிக்கும்.

அப்பன் குடிகாரனா, பெண் பித்தனா, சீட்டாட்ட வெறியனா? விட்டுத் தள்ளு. வெறுத்து ஒதுக்கு என்று பிள்ளைகள் கூட தாயைச் சார்ந்து வாழ்ந்து, வளர்ந்து தாயை ராணி போல் வைத்துக் கொள்ளப் பழகிவிடும்.

அதே, பெண் பாதை மாறிப் போனால் அந்தக் குடும்பமே சிதறிப் போகுமே.

நிராசை, பேராசை, பொறாமை, அடுத்தவர் வாழப் பொறுக்காத குணம், புறங்கூறல், பொறுமை இன்மை போன்ற குணங்கள் நிரம்பிய பெண் உள்ள இடமே கொஞ்சம் கொஞ்சமாய் சீரழியும்.

வனிதா என்ற நாடகமயிலும் அப்படி ஒரு அழிவுச் சக்தியாய் தான் விளங்கினாள். சுயம் இல்லாத சேகரை சுலபமாய் * தன் வசப்படுத்தினாள். அவன் பாராமுகத்தை தாங்க முடியாமல் அவன் அவளிடம் அடிபணிய, பொரிந்து விட்டாள்.

''குறைஞ்சபட்சம் நாலஞ்சு லட்சம் எதுக்குங்க அந்தப் பொண்ணுக்குப் போகணும்? பிள்ளை இல்லா சொத்தா? நாளைக்கு நம்ம குழந்தைகளுக்கு ஸ்கூல் பீஸ், டியூஷன் பீஸ்,

## காரை கண்காணிக்கும் கையடக்க கீ செயின்

உலகம் முழுவதும் மின்னணு உள்ள சந்தைகளில் நவீனமான பொருட்களின் வருகை அதிகரித்தபடியே உள்ளது. மனிதனின் தேவைகளை நிறைவேற்றும் நோக்கத்தில் உருவாக்கப்படும் இவை மக்களை கவர்ந்து விடுகிறது. குறிப்பாக 'கீ செயின்' போன்ற பொருட்களுக்கு என்றும் மவுசு உள்ளது.

சமீபத்தில் இன்டோ- சிலிக்கான் தயாரிப்பில் ஒரு நவீன 'கீ செயின்' அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.



சிறிய செல்போன் மாதிரி இருக்கும் இந்த 'கீ செயினில்' ஒரு கருவி பொருத்தப்பட்டுள்ளது. அக்கருவியில் ஒரு சிறிய திரையும் உள்ளது. கார் வைத்திருப்பவர்களுக்காகவே இது உருவாக்கப்பட்டிருக்கிறது.

அதாவது நீங்கள் கார் வைத்திருப்பவர் என்றால் அதனை ஒரு இடத்தில் நிறுத்தி விட்டு காருக்குள் இதற்காகவே பொருத்தப்பட்டிருக்கும் கருவியின் பட்டனை ஆன் செய்து விட்டு இந்த கீ செயினை நீங்கள் கொண்டு செல்லலாம்.

கார் எங்கு நிற்கிறது, அதனை சுற்றி எப்படி இருக்கிறது என்பதை இந்த கீ செயினில் உள்ள திரையில் பார்க்கலாம்.

200 மீட்டர் தூரம் வரை காரை பார்க்கும் வசதி இதில் உள்ளது. இதன் விலை ரூ.7,750 ஆகும். எடை 44 கிராம் மட்டுமே.

-எம்.ஜி.சன்.

டாங்க பாட்டுனு ஆயிரம் செலவு இருக்கு. டாக்டர் படிப்புக்கும், என்ஜினியர் படிப்புக்கும் லட்சக்கணக்குல செலவாகுமே. இந்தப் பணத்தைப் போட்டு வச்சா உதவுமில்ல. சரி, அதை விடுங்க. போன வருஷம் எங்க மாமாவுக்கு பை-பாஸ் ஆபரேஷனாச்சு. செலவு என்ன தெரியுமா? ரெண்டு லட்சம். எங்க பெரியம்மாவுக்கு யூட்ரெஸ் எடுத்தாங்க. செலவு என்ன தெரியுமா...?''

''அந்தக் கணக்கெல்லாம் எதுக்கு, வனி...?''

''அட, தெருப்புன்னா வாய் வெந்துடாதுங்க. நம்ம வீட்ல மூணு வயசானவங்க இருக்காங்க. ஒரு ஹாஸ்பிடல் செலவுன்னா யாரு கிட்ட போய் நாம கேட்க முடியும்? உங்க சம்பளத்துல சேமிச்ச பணத்துல இல்ல அப்ப கை வைக்கணும். தேவையா? இருக்கற சேமிப்பெல்லாம் கரைச்சுக்கிட்டு சொத்தை சம்பந்தமில்லாத ஒரு பொண்ணுக்குக் கொடுக்கணுமா என்ன?''

நீட்டி முழக்கி வனிதா பேசுவது சேகருக்கு சரியாகவேப்பட்டது. மிக பலஹீனமாய் முணுமுணுத்தான்.

''என்ன வனி செய்ய? அப்பா பிடிவாதமா இருக்காரே. வளர்த்துட்டோம்.''

''வளர்த்துட்டா எல்லாத்தையும் கொடுத்துடணுமா? அவளுக்குப் பெத்தவங்க இல்ல? ஏதோ கல்யாணம்னா பாட்டி, பெரியம்மா இவங்க சீரா பட்டுப்புடவை, ஒரு சின்ன நெக்லஸ்னு கொடுங்க. போதாதா?''

''போதும்தான். ஆனா... அப்பா?''

''அப்பாவை நீங்கதாங்க சம்மதிக்க வைக்கணும்.''

''பேசினோமே. அவர் கேட்க மாட்டார் வனி.''

''பேசிப் பிரயோஜனமில்லீங்க. செயல்ல காட்டணும்.''

''எப்படி?''

''கறாரா பேசுங்க. 'நிலம் வித்த காசை எனக்குத் தரமாட்டீங்களா? அப்ப இந்த வீடு மட்டும் எனக்கு எதுக்கு? உங்க முன்பணம் போட்டதை நீங்களே வச்சுக்கங்க. நான் இதுவரை கட்டின லோன் பணத்தை மட்டும் கீழ வைங்க. நான் வீட்டை விட்டுப் போறேன்'னு சொல்லுங்க.''

''ஐயோ''

''என்ன ஐயோ? அப்ப அந்த அஞ்சு லட்சம் வேணாமா?''

''வேணும்தான். ஆனா...''

''இப்படித் தயங்கினீங்க காரியம் ஆவாது.''

''சரி, ஒரு வேளை அப்பா வீட்டை விட்டுப் போனு சொல்லிட்டா?''

''உங்க லோன் பணத்தைத் தரணுமில்ல. அதுக்குப்பிறகு அவங்க வருமானத்துல எப்படி லோன் பணம் கட்டுவாங்க?''

''ஆமாம்.''

''அதனால, நம்மை வீட்டை விட்டு அனுப்ப மாட்டாங்க. நம்ம வழிக்குத்தான் வருவாங்க.''

சற்று யோசித்தான் சேகர். ''நைஸ் ஐடியா'' என்றான்.

அலுவலக நண்பர்கள் வீடு கட்ட, குழந்தைகளை பள்ளி, கல்லூரிகளில் சேர்க்கப் படும்பாடு அவனும் அறிந்ததே. அப்பாவின் முன் பணத்தில் வீடும், பென்ஷன் பண உதவியில் குடும்பமும் ஓடுவதால் அவனுக்கு அதிக சிரமம் இல்லை. ஆனால், வனிதா சொல்வது போல் தன் குடும்பம் பெரிதாகி தேவைகள் அதிகரிக்கும் போது ஒவ்வொரு பைசாவும் தானே முக்கியமாகும். அப்போது யாரிடம் போய் உதவி கேட்க முடியும்? ஐந்து லட்சம் என்பது என்ன சும்மாவா? மஹிக்கு என்ன பெற்றோரா இல்லை. ஏதோ சோறு போட்டு படிக்க வைத்தாயிற்று. கல்யாண செலவைக்கூட அவர்கள் ஏற்காவிட்டால் எப்படி? விட்டுத்தர அளவில்லையா?

**அ**ன்று இரவே அப்பாவிடம் பேச முடிவெடுத்தான்.

ராகவன் பட்டணம் வந்து செட்டிலாகி பல வருடங்கள் ஆன போதும், சில கிராமிய பழக்க வழக்கங்களை கைவிட்டதில்லை. இயற்கை உணவு முறை, எளிய வாழ்க்கை, கோவில் குளம் என்று மட்டும் வெளியே போவது என்று அமைதியாக வாழவே விரும்பினார்.

எட்டு மணிக்கு இரவு உணவை முடித்துக் கொண்டு, வாசல் ஊஞ்சலில் வேப்ப மரக்காற்றை அனுபவித்தபடி அமர்வார். சில்லறை வேலைகளை முடித்துக் கொண்டு ஜானம்மாவும் வந்து சேர்ந்து கொள்வார். குழந்தைகளாய் இருந்த போது சேகரும் மஹியும் அதிகம் எதிர்பார்க்கும் ஆவலான நேரமிது. அதனாலேயே அவசரமாய் ஹோம்ஒர்க் படித்து எல்லாம் முடித்து விட்டு உணவை சாப்பிட்டவுடன் அவர் பின்னாலேயே ஒட்டிக் கொண்டு ஓடி வருவார்கள்.

சரித்திர இதிகாசங்களிலிருந்து பல அரிய பெருமைமிகு கதாபாத்திரங்களைப் பற்றிய கதைகளை மிகச் சுவையாய் ராகவன் சொல்வார். உலக, நாட்டு நடப்புக்களைக்கூட சுவையாய் கதை போல் சொல்வார்.

காந்தி, ஏகநாதர், வீரசிவாஜி, ராஜராஜசோழன், காரைக்கால் அம்மையார், சங்கரர், விவேகானந்தர், பரமஹம்சர், சாரதாதேவி, பாரதியார், லிங்கன், மண்டேலா, நெப்போலியன், ரூசோ, டிக்கன்ஸ், மேரிக்யூரி, ஜோன் ஆப் ஆர்க், காளிதாசன், கம்பன், ஷேக்ஸ்பியர் என்று நீண்ட பட்டியலே போடலாம். வீரம், நாட்டுப்பற்று, தன்னம்பிக்கை, விடாமுயற்சி, இலக்கியம், நேசம் என்று எத்தனை குணங்களை புரிந்து கொள்ள முடிந்திருக்கிறது.

வருடக்கணக்காக அவர் போதித்த நல்ல குணங்களை, வனிதா ஒரே இரவில் பணத்தைக் காட்டி மாற்றி விட்டாள்.

எத்தனையோ நல்ல விஷயங்களைப் பேசிய அந்த நல்ல நேரத்தைத்தான் தன் விஷயம் பேச சேகர் தேர்ந்தெடுத்தான். ஒன்பது மணிக்கு டாணென்று படுக்கப் போய் விடுவாரே!

சேகர் அவரிடம் பேசப் போன போது ஜானம்மாவும் அங்குதான் அமர்ந்து கொண்டிருந்தார். இப்போது குழந்தைகள் வளர்ந்து விட்டதால், அந்த நேரத்தில் இருவரும் வீட்டு விஷயங்களையும் ஆன்மீக விஷயங்களையும் பேசுவது வழக்கமாகி விட்டது.

எதிர்பாராமல் சேகர் வந்தவுடன் இருவரும் நிமிர்ந்தார்கள்.

''என்னப்பா?'' ராகவன் வழக்கமான நிதானத்தோடு கேட்டார்.

''கொஞ்சம் பேசணும்பா''

''பேசலாமே. உட்காரு.''

ஊஞ்சலில் நகர்ந்து இடம் விட்டார். அவனோ அவர் அருகே அமராமல் எதிரே நாற்காலியில் அமர்ந்தான். மெல்ல வனிதாவும் அவருகே வந்து நின்று கொண்டாள்.

ஆயிரம் முறை ஒத்திகை பார்த்து, வனிதாவுடன் பேசி, மனதில் 'இது நியாயம் தான்' என்று பதித்துக் கொண்டு வந்து விட்டாலும், ராகவன் முகம் பார்த்தவுடன் அவனுக்குத் தயக்கம் ஏற்படத்தான் செய்தது.

''என்னப்பா தயக்கம் என்கிட்ட''

''எவ்வளவு தூரம் நான் சொல்லப்போற விஷயத்தை நீங்க சரியாப் புரிஞ்சுக்கப் போறீங்கனு கவலையா இருக்கு.''

''அப்படி என்னப்பா சொல்லிடப் போறே?''

''அப்பா, என்னைத் தப்பா எடுத்துக்காதீங்க...''

''இல்ல, எதுவா இருந்தாலும் சொல்லு.''

''என் ஆபீஸ் ராமகப்புவோட அப்பாவுக்கு திடீர்னு பெராலஸிஸ் வந்துடுச்சு. சிகிச்சைக்கு ஆயிரக்கணக்குல செலவாச்சு. முகுந்தனோட மாமாவுக்கு பை-பாஸ். லட்சக் கணக்குல செலவு...''

''சரி, இப்ப எதுக்கு இதெல்லாம்?''

''இருங்க... எதிர் வீட்டு ரங்கநாதன் சார் பிள்ளையை என்ஜினியரிங்ல சேர்க்க நாலு லட்சம் ஆனதா நீங்க தான் சொன்னீங்க.''

''ஆமாம். இப்ப அதுக்கு என்ன?''

''இல்ல, இதையெல்லாம் கேட்கும் போது பயமா இருக்கு. நம்ம வீட்லயும் வயசானவங்க இருக்கீங்க. இனி குழந்தை குட்டினு எனக்கும் குடும்பம் பெருகும். கையில பணம் வேணாமா?''

''அதனாலதானே உன் சம்பளப் பணத்துல பெரும் பகுதியை சேமிக்கறோம்.''

''அது சரிப்பா. அது என் குழந்தைகள் எதிர்கால படிப்புக்கே சரியாயிடும். மத்த எதிர்பாரா செலவு ஏதாவது வந்தா...''

ராகவனின் முகம் சிறுத்துப் போனது. என் சேமிப்பு என் பிற்கால நலனுக்கு என்றும், அதில் உனக்கெல்லாம் எதுவும் எதிர்பாராதே என்றும் ஜாடையாய் பேசும் மகனை ஆழமாய்ப் பார்த்தார். ஜானம்மாவும் துடித்துப் போனார். ராகவன் அதற்கும் பொறுமை இழக்கவில்லை.

''சரி, அதுக்கு இப்ப என்ன செய்யலாங்கறே?''

''சிம்பிள். நிலத்தை வித்து உங்க பேர்லயும் அம்மா பேர்லயுமா என்னை வாரிசா போட்டு, டெபாசிட் செஞ்சுடுங்க. அவ்வளவுதான்.''

பெரிய பிரச்சினையை சாமர்த்தியமாய் சுலபமாய் பேசித் தீர்த்து விட்ட பெருமிதத்தில் மனைவியை நோக்கினான்.

ராகவன் இளக்காரமாய் ஒரு புன்னகையை சிந்தினார்.

ஜானம்மா பதட்டமாய், ''அப்ப மஹி கல்யாணம்?'' என்றார்.

மகனை ஓரக்கண்ணால் பார்த்தபடி, ''அதுக்கேன் கவலைப்படறே ஜானா? அதை சேகர் கவனிச்சுப்பான்'' என்றார் அழுத்தமாக.

திடுக்கிட்டுத் திரும்பிய சேகர், ''அதெப்படிப்பா? அவ என்ன என் கூடப்

பிறந்தவளா? நாம எதுக்கு லட்சக்கணக்குல செலவழிக்கணும்? சித்தி, சித்தப்பா செலவழிக்கட்டுமே. நாம நிறைவா ஒரு பட்டுப்புடவை, நெக்லஸ்னு செய்வோம். அதுதானே சரி? அனாவசியமா பாரம் சுமந்துகிட்டு இந்த வீட்ல நான் இருக்க வேண்டிய அவசியமில்லப்பா.''

மிகச் சாமர்த்தியமாய் பேசினான். ஜானம்மாவால் தன் காதுகளையே நம்ப முடியவில்லை. தான் பெற்று வளர்த்த மகனா இப்படிப் பேசுகிறான். மஹி மீது பாசத்தைப் பொழிந்தவனா இவன்? பொருளாதார நெருக்கடி மிகுந்த காலகட்டத்தில் பண விஷயத்தில் யாருமே கறாராக இருப்பது அதிசயமில்லை. அதில் மகனும் தப்ப முடியாது என்பதால்தான் கூடுமான வரை தங்கள் பணத்தை செலவழித்து அவன் பணத்தை சேமித்தார்கள். இருந்தும் மகன் இப்படிச் சிந்திக்கிறான் என்றால்? பொருளாதாரச் சுமையிலிருந்து மீள பாசத்தையா விலையாய் கொடுக்க வேண்டும் அவன்?


உள்ளங்கையால் வாயைப் பொத்திக் கொண்டு உட்கார்ந்து விட்டார் ஜானம்மா.

ராகவனுக்குமே தன் வழக்கத்திற்கு மாறாய் கோபம் வந்தது.

''என்னடா பேசறே? அவ இந்த வீட்டுப் பொண்ணுடா. உனக்கு வீட்டை வித்துக் கொடுத்த மாதிரி, அவளுக்கு நிலத்தை வித்துக் கொடுப்பேன். அது அவ அம்மா வழிச் சொத்து. அதைக் கேட்க உனக்கோ எந்தக் கழுதைக்குமோ உரிமை கிடையாது. புரியுதா? எனக்கோ என் மனைவிக்கோ ஏதாவது நேர்ந்தா பெத்த கடனுக்குக் கூட நீ எதுவும் செய்ய வேண்டாம். என் ரிடையர்மெண்ட் பணத்துல வைத்தியம் செஞ்சுப்பேன். அதுக்கு மீறிப் போனா, எங்க விதினு போய்ச் சேரறோம். போதுமா? நீ எனக்காக ஒரு பைசா செலவழிக்க வேண்டாம்பா. இனிமே இது விஷயமா யாரும் இந்த வீட்ல பேசக்கூடாது'' என்று ஊஞ்சலை விட்டு விருட்டென்று எழுந்தவர் அதே வேகத்தில் மகனருகே வந்து நின்றார். ஒரு முறை மருமகளை முறைத்துப் பார்த்துவிட்டு மகனிடம் கர்ஜித்தார்.

''இங்க பாரு சேகரா, எங்களை பாரமா நீ நினைச்சா சொல்லிடு. என் மனைவி, மக, அக்காவோட நான் இந்த வீட்டை விட்டுப் போயிடறேன். ஆனா, எனக்கு ஒரு இருப்பிடம் வேணும். இந்த வீட்டுக்கு நான் கொடுத்த முன் பணத்தை கீழே வை. அடுத்த நொடி நான்





போயிடறேன். யோசிச்சு வை... நீ அனாவசியமா பாரம் சுமந்துகிட்டு இருக்க வேண்டாம்'' என்றார்.

''அப்பா'' அவன் அலறி விட்டான்.

''இன்னைக்கு தங்கை பாரம். நாளைக்கு நாங்க! நீயா 'போ வெளியே'னு சொல்றதுக்கு முன்னாடி நாங்களா போயிடறது கவுரவம் எங்களுக்கு. முடிவு உன் கையில.''

சொல்லிவிட்டு விருட்டென்று உள்ளே போய் விட்டார். ஜானம்மாவும் மகனை முறைத்துவிட்டு நகர்ந்தார்.

தன் அறை பால்கனியில் நின்று கொண்டிருந்த மஹதியின் காதில் எல்லாம் விழுந்தது. தன் பொருட்டு வீட்டில் இத்தனை பிரச்சனையா?

எல்லாமாய் இருந்த அண்ணன் விலகிப் போவதற்காக வருந்துவதா? தன்னை விட்டுக் கொடுக்காத அப்பாவிற்காக நெகிழ்ந்து மகிழ்வதா? ஒரே நேரத்தில் மனம் மகிழவும் வருந்தவும் முடியுமா?

இப்போது என் மனதில் துக்கமா, சந்தோஷமா?

வழியும் கண்ணீர் ஆனந்தமா, சோகமா?

எது எப்படி இருந்தாலும் என் பொருட்டு இந்த வீட்டில் சண்டையோ, பிரிவினையோ வரக்கூடாது. சொந்த மகளாகவே இருந்திருந்தாலும், நான் வேறு வீட்டுக்கு போக வேண்டியவள். அப்பா- மகன் அப்படி அல்ல. அவர்கள் ஏன் பிரிய வேண்டும்?

ஆனால், இதற்கு என்ன தீர்வு? என்னால் அவர்கள் மனதில் கசப்பு ஏற்பட்டு விட்டால் காலத்திற்கும் மாறாதே. தடித்த வார்த்தைகள் மனதில் வடுவை அல்லவா எழுதி விடுகின்றன!

கடவுளே, இதற்கு ஒரு நல்ல முடிவைத் தாயேன்.

நான் என்ன செய்ய வேண்டும்?

இரவு முழுதும் அவளுக்கு உறக்கம் வரவில்லை.

## 16

**ம**ஹதி கிளினிக்கிலிருந்து திரும்பும் போது அபூர்வமாய் ராகவன் சமையலறை முன் உட்கார்ந்து தீவிரமாய் ஜானம்மா, மங்கா பாட்டியுடன் பேசிக் கொண்டிருந்தார். அவள் பெயர் அடிபடவே சற்று நிதானித்தாள். மெல்ல அவரருகே சென்று ''என்னப்பா?'' என்றாள்.

அவசரமாய் மங்காப்பாட்டி, ''ஒண்ணுமில்ல மஹி'' என்றார்.

ராகவன் ''இல்ல, அவளுக்கும் தெரிஞ்சிருக்கணும். சொல்லிடலாம்'' என்றார்.

''என்னப்பா? ஒரே சஸ்பென்சா இருக்கு.''

''பெரிசா ஒண்ணுமில்லம்மா. உன்னைப் பெண் கேட்டு ஒரு நல்ல இடத்துலயிருந்து வந்திருக்காங்க. பையன் மல்டி நேஷனல் கம்பெனியில அஞ்சிலக்க சம்பளம். பையன் உன்னை ஏதோ ஃபங்ஷன்ல பார்த்தானாம். பைசா எதிர்பார்க்காம கல்யாணம் செஞ்சுக்கறதா கேட்கறாங்க. அம்மா நல்ல இடம் முடிச்சுடலாம்னு நினைக்கறா. நீ படிப்பை முடிக்க ஒரு வேலைக்குப் போன பிறகு உனக்குக் கல்யாணம் பேசலாம்னு நான் நினைக்கறேன். என்ன சொல்றே?''

மஹதிக்குப் படிப்பில் அதிக ஆர்வமுண்டு. அதனால் தன் முடிவைத்தான் அவள் ஆமோதிப்பாள் என்று அவர் தீவிரமாய் நம்பினார். சில மாதங்களுக்கு முன் இப்படி ஒரு சூழல் என்றால் நிச்சயம் அவர் எதிர்பார்த்தபடி தான் அவள் சொல்லி இருப்பாள். ஆனால், இப்போது மஹதி அவர் எதிர்பார்த்த பதிலைச் சொல்லத் தயங்கினாள். பைசா எதிர்பாராமல் ஒருவன் தன்னை மணம் முடிக்க முன் வந்தால் இந்த வீட்டுப் பிரச்சினைகள் முழுதும் தீர்ந்து விடும். தனக்காக இவர்கள் எதுவும் செலவழிக்கத் தேவை இருக்காது. அண்ணனும் அப்பாவும் பிரிய வேண்டாம். கடவுளாய் பார்த்து கொடுத்த வரம் இது.

''எனக்கு இந்தக் கல்யாணத்துல சம்மதம்பா'' என்றாள்.

ராகவன் ஒரு நொடி ஸ்தம்பித்தார்.

''கல்யாணத்துக்குப் பிறகும் என்னை படிக்க மட்டும் அனுமதிக்கச் சொல்லுங்கப்பா. போதும்.''

சொல்லி விட்டு மெல்ல நகர்ந்தாள் மஹதி.

அடிபட்ட பறவையாய்த் துடிக்கும் அவள் நிலை கண்டு அந்த மூன்று நெஞ்சங்களும் பதறின. ராகவன் ஏதோ சொல்ல வாயெடுத்தார். மங்காப்பாட்டி தடுத்து விட்டார்.

''அவளை ஒருத்தன் விரும்பி கல்யாணம் செஞ்சுக்க முன் வரான். போற இடத்துலயாவது அவ நல்லா இருக்கட்டும்''

அதற்கு மேல் யாரும் எதுவும் பேசவில்லை.

அவள் எதிர்பார்த்தது போலவே அண்ணனும் அண்ணியும் இந்த முடிவில் மகிழ்ந்தார்கள்.

அவள் எதிர்பாராத விதமாய் பெண் பார்க்க வந்தது, விகாஷ்.

## 17

**மு**தல் இரவு அறை பூவுடை வாசனைபத்தியுமாய் மணத்தது.

விகாஷுக்கு இருப்பு கொள்ளவில்லை. முறைப்படி பெண் பார்க்க மஹதி வீட்டிற்குப் போன போது அவனுக்கு உள்ளூர கொஞ்சம் பயம் இருக்கத்தான் செய்தது. அதே சமயம் மஹதி பண்பான பெண். வழியில் அவனிடம் பேச முயல்வதற்கும், முறையாய் பெண் கேட்டு அவள் வீட்டு விருந்தாளியாய்ப் போவதற்கும் உள்ள வித்தியாசத்தை உணர்ந்திருப்பாள். அதனால், முறை தவறி ஒரு 'சீன் க்ரியேட்' செய்ய மாட்டாள் என்ற நம்பிக்கையும் இருக்கத்தான் செய்தது.

அதே போல், இவனைப் பார்த்தவுடன் அவள் முகத்தில் ஒரு ஆச்சரியம் தெரிந்ததே தவிர, கோபமோ வெறுப்போ தெரியவில்லை. ஆனால், ஆழமான பெண்ணின் மனதை புரிந்து கொள்வது கடினம் என்று அவன் அறிவான். முகத்தில் எந்த உணர்வும் காட்டாமல் பிறகு என்னை மறுத்து விட்டால்... அதனால் அவளிடம் தனிமையில் பேசி தன் காதலை வெளிப்படுத்தத் துடித்தான்.

''மஹதிகிட்ட, இஃப் யு டோண்ட் மைண்ட், கொஞ்சம்... தனியாப் பேசலாமா?'' என்று கேட்டு விட்டான்.

''பேசுங்க தம்பி. இதுல என்ன இருக்கு?''

நாகரீகமாய் பெரியவர்கள் வழிவிட, மஹதியும் விகாஷும் தோட்டத்துக்கு வந்தார்கள்.

''உங்களுக்கு என்னை இங்கே பார்த்தது ஷாக்கா இருந்திருக்கும்.''

அவள் மவுனமாகவே நின்றாள்.

''மஹி, உங்களை உங்க அம்மா வீட்ல பார்த்த நிமிஷம் முதல் என் மனசை உங்ககிட்ட பறி கொடுத்துட்டேன் தெரியுமா? காதலே இன்பாச்சுவேஷன், இனக்கவர்ச்சி, உடலோட ரசாயன மாற்றம்னு எல்லாம் கேலி பேசினவன் தான் நான். ஆனா, உங்களைப் பார்த்த அந்த நிமிஷம் எனக்கு என்னாச்சு? தடாலடியா விழுந்துட்டேன். 'காதல் பொய் என்று சொன்னேன் உன்னைப் பார்க்கும் வரை'. எவ்வளவு உண்மையான வரினு புரிஞ்சது. துரத்தித் துரத்தி உங்களைத் தொந்தரவு செய்யறேன்னு நினைக்காதீங்க. என் மனசு, என் அன்பு புரியுதா?''

அவள் ஆழமாய் பார்த்தாள். தன்னிடம் இவனுக்கு இத்தனை அன்பா?

கேட்ட வேகத்தில் அவள் கரம் பற்றி தன் நெஞ்சில் பதித்துக் கொண்டான் அவன். அவள் அதை எதிர்பார்க்கவில்லை. மெல்ல கையை விடுவித்துக் கொண்டவள், சிரித்தாள்.

''என்ன?'' என்றான் புரியாமல்.

''சங்க இலக்கியப் பாட்டு ஒண்ணு ஞாபகம் வருது. தன்னை நெருங்குற காதலனை காதலி 'அக்கா பார்க்கறா'னு சொல்லித் தவிர்ப்பாள். யார் அந்த அக்கானு தேடுனா, ஒரு மரத்தைக் காட்டுவாள். அவளோடு அந்த வீட்ல ஒரு பெண்ணா வளர்ந்ததாம் அந்த மரம். என்ன அழகா ஒரு காதல் பாடல்ல கூட இயற்கை நலத்தையும் மரத்தைப் பராமரிக்க வேண்டிய அவசியத்தையும் அழகா சொல்றாங்க!''

''ஐயயோ, அப்படி இங்க உங்களுக்கு எத்தனை அக்கா தங்கை இருக்காங்க?''

''இந்தத் தோட்டம் பூரா என் அக்கா தங்கைகள் தான்.''

''அப்ப, கையைக் கட்டிக்கிட்டு நல்ல பிள்ளையா இருனு சொல்றீங்க? ரைட்!''

அவள் முகம் சிவக்க தலை குனிந்தாள்.

''மஹி, உங்க சம்மதத்தை மறைமுகமா தெரிவிக்கறீங்கனு நான் எடுத்துக்கலாமா?''

''உங்க அன்பு என்னைக் கட்டிப் போட்டுடுச்சே!''

அவள் தலையாட்டலில் மடமடவென்று வேலைகள் முடிந்து விட்டன.

**அ**வன் வீட்டில் இப்போது முதல் இரவு. பெண் பார்த்ததிலிருந்து ஒரே மாதத்தில் திருமணம் என்பதால், திருமண வேலையில் நாட்கள் பரபரப்பாய் ஓடிவிட்டன. எப்போதாவது அவளிடம் போன் பேசியதோடு சரி, யானைப் பசிக்குச் சோளப் பொரி போல்.

இப்போது இதோ இந்த நிமிடம் மஹி அவன் அருகில். எந்தப் பெண்ணுக்காக ஏங்கித் தவித்து உருகினானோ- அவள் அவன் அருகில் நெருக்கிய நிலையாய்!

அவன் மனதில் அவளிடம் கொட்ட எத்தனை விஷயங்கள்!

''மஹி, கனவு மாதிரி இருக்கு. உன் பின்னாடியே சுத்தின என்னைத் தப்பா புரிஞ்சுகிட்டு மறுத்துடுவியோனு பயந்தேன். இப்ப எவ்வளவு சந்தோஷமா இருக்கேன் தெரியுமா?''

''முதல்ல உங்களைத் தப்பாத் தான் நினைச்சேன். ஆனா, பெண் பார்க்க நீங்க வந்தப்போ பேசினது, உங்க கண்களில் தெரிஞ்ச உண்மையான அன்பு என் மனசைக் கரைச்சுடுச்சு.''

''உண்மையா மஹி?''

''ஏன் சந்தேகம்?''

''இல்ல உங்க வீட்டுச் சூழல் காரணமா எவனையோ ஒருத்தனைக் கல்யாணம் செஞ்சுக்கிட்டுப் போனா போதும்னு ஒரு விரக்தியில என்னை கல்யாணம் பண்ணிக்க சம்மதிச்சியா?''

அவன் அவளை ஆச்சர்யமாய் பார்த்தாள். பின் நிதானமாய் சொன்னாள். ''அப்படிப்பட்ட மனநிலையில நான் இருந்தது உண்மை. ஆனா இப்ப, ஒரு நல்லவர்- என்னை நேசிக்கறவர்- எனக்குக் கணவரா அமைஞ்சது, நான் செஞ்ச புண்ணியம்னு நினைக்கறேன்... ஆமா, உங்களுக்கு எப்படி என் நிலைமை அவ்வளவு துல்லியமாத் தெரியும்?''

ஒரு நொடி மவுனித்தவன், ''உங்க பெரியம்மா, பாட்டி மூலம் தெரிஞ்சுகிட்ட. உங்கம்மா உன் நிலைக்காக ரொம்ப என்கிட்ட வருத்தப்படுவாங்க தெரியுமா...''

அவன் சொல்லி முடிக்கும் முன் அவள் முகம் மாறியது. ''ஆடு நனையுதேனு ஓநாய் அழுததாமா?'' என்றவளின் முகமும் குரலும் இறுக கண்டிப்பாய் பேசினாள். ''இங்க பாருங்க, நான் நம்ம கல்யாணத்துக்கு முன்னாடி ஒரே ஒரு கண்டிஷன் போட்டேன். நினைவிருக்கா?''

அவன் தலையாட்டினான்.

''என்ன சொல்லுங்க பார்ப்போம்.''

''உங்கம்மாவைப் பத்தி பேசவே கூடாது. ரைட்?''

''ம். அதை தயவு செஞ்சு மீற வேண்டாம்.''

''சரி, மஹதி. ஆனா உங்கம்மா அப்படி நடந்துக்க ஒரு காரணம் இருக்கலாம் இல்லையா?''

''என்ன பெரிய காரணம்? எனக்காக செலவு செய்யணுமே அதான். இந்தக் கல்யாணத்துக்கே எங்கம்மா ஒரு பைசா செலவு செய்யலை தெரியுமா? பெருந்தன்மையா நீங்க எதுவும் எதிர்பார்க்கலை. ஆனாலும் பெரியப்பா, பிள்ளையை மீறி விட்டுக் கொடுக்காம செஞ்சாரு. இல்லையா? ஆனா, பெத்த இவங்க?''

''ஆனா, மஹி...''

''பிளீஸ்... அம்மா பத்தி எதுவும் பேச வேண்டாமே''

அவளின் மனப்புண் ஆறட்டும். பின் மெல்ல எடுத்துச் சொல்லலாம் என்று முடிவெடுத்தவனாய், ''வெல், உனக்குப் பிடிக்கலைனா விட்டுடலாம். சரி, உனக்கு ஒரு நல்ல வெட்டிங் கிஃப்ட் வாங்கித் தரணும்னு நினைக்கறேன். என்ன வேணும் சொல்லு?''

அவனை ஆழமாகப் பார்த்தாள்.

## தங்க கால்பந்து

உலகின் பிரதான விளையாட்டுகளில் கால்பந்து போட்டி முதலிடம் வகிக்கிறது. உலகின் முன்னணி நாடுகள் உலக கால்பந்து போட்டியில் முன்னணி வகிக்கின்றன. ஒலிம்பிக் போட்டியிலும் கால்பந்து போட்டி முக்கிய இடம் பெற்றுள்ளது. மற்ற எல்லா விளையாட்டுக்களைக் காட்டிலும் கால்பந்து விளையாட்டு போட்டிக்கு தான் உலக அளவில் ரசிகர்களும் அதிகம்.

உலக கால்பந்துப் போட்டி உலகத் திரு விழாவாகவே கொண்டாடப்படுகிறது. சமீபத்தில் நடந்த உலக கால்பந்துப் போட்டியில் பிரேசில் கோப்பையை தட்டிச் சென்றது.

அனைத்து விளையாட்டுகளுக்கும் முக்கியத்துவம் அளித்து வரும் ஜப்பான், அந்த விளையாட்டுகளுக்கான கருவிகளையும் விளையாட்டுப் பொருட்களையும் தயாரிப்பதில் முன்னிலை வகிக்கிறது. மேலும் இதில் ஒரு புதுமையை புகுத்தவும் ஜப்பான் நிறுவனங்கள் தவறுவதில்லை.



கால்பந்து போட்டிக்கு மிக முக்கியத்துவம் அளிக்கும் வகையில் ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் 'மிட்சுகோஷி' என்ற கடையில் தங்கத்தால் செய்யப்பட்ட கால்பந்தை விற்பனைக்கு வைத்துள்ளது.

இதன் விலை ரூ.62 லட்சம்.

என்ன? இவ்வளவு விலையா, என்கிறீர்களா?

ஜப்பான் தயாரிப்பு என்றால் சும்மாவா.

-கண்ணா.

''எது கேட்டாலும் கிடைக்குமா?''

''நிச்சயமா. என்ன சந்தேகம்?''

''எங்கம்மா வீட்டுக்கு அடுத்த வீடு உங்க வீடுனு எனக்குத் தெரியாது. இப்பத்தான் தெரிஞ்சது. பிளீஸ் வீட்டை மாத்திடலாம் செய்வீங்களா?''

அவன் அசந்து போனான். பெற்றவள் மீது இத்தனை வெறுப்பா? கடவுளே!

''கொஞ்சம் டயம் கொடு'' என்றான் பெருமூச்சுடன்.

### 18

**நா**ட்கள் பறந்தன...

மஹதி மிக மிக மகிழ்ச்சியாய் இருந்தாள். ஜானம்மா அவ்வப்போது வந்து பார்த்து விட்டுப் போனார்.

விகாஷும் அவன் அம்மாவும் அவளை உள்ளங்கையில் வைத்துத் தாங்கினார்கள். எந்த அன்புக்காக சில மாதங்களாய் ஏங்கினாளோ, அந்த அன்பை போட்டி போட்டு அவர்கள் வழங்க, திக்குமுக்காடிப் போனாள். அதனால் எல்லா விதத்திலும் அன்பாகவும் அனுசரணையாகவும் அவர்களிடம் நடந்து கொண்டாள். ஆனால் அவன் 'அம்மா' என்ற ஒரு சொல்லுக்கு மட்டும் 'காளி'யாய் மாறினாள். விகாஷ் அந்த ஒரு விஷயத்தில் திண்டாடிப் போனான்.

வீடு மாற வேண்டும் என்று சொன்னதை மட்டும் எந்த காரணம் கொண்டும் மாற்றவில்லை. அதே போல் அடுத்த வீட்டுக்குப் போய் அம்மாவைப் பார்க்கவோ, அம்மா வந்தால் பேசவோ அவள் முயலவேயில்லை. ராதா வந்தால் முகத்தில் அடித்தது போல் எழுந்து போய் விடுவாள்.

''என் கல்யாணத்தின் மூலம் அம்மாவும் பொண்ணும் சேர்ந்துடுவீங்கனு நினைச்சேன். அது லேசுல நடக்காது போல இருக்கு அத்தை'' என்று ராதாவிடம் அவனால் புலம்பத்தான் முடிந்தது.

''நல்லது நினைக்கறவங்களுக்கு நல்லதே நடக்கும் மாப்பிள்ளை. கவலைப்படாதீங்க.'' என்றாள்.

ராதா மனதுள் அழுதாலும் வெளியே தன்னைத் தெம்பாகக் காட்டிக் கொள்கிறாள் என்பது புரிய விகாஷ் மேலும் மனதில் அடிபட்டான்.

அவனைப் புரிந்து கொண்ட அவன் அம்மா நீலா கூட ''கவலைப்படாதே விகாஷ், எல்லாத்துக்கும் காலம் நல்ல மருந்து'' என்றாள்.

''நீ சொல்ற அந்த காலம் சீக்கிரமா கனிஞ்சா நல்லதும்மா.''

**ம**ஹதி இளநீல கிரேப் சில்க் புடவை கட்டி, முத்து மாலையும், தோடும் போட்டிருந்தாள். முத்து செட் நகைகளுடன் அவள் தோளில் புரண்ட முல்லைச்சரம் போட்டி போட்டன. ஒரு முறை கண்ணாடியில் பார்த்துக் கொண்டவள் திருப்தியாகி அறையை விட்டு வெளியே வந்தாள்.

''என்னம்மா ரெடியாயிட்டியா?''

அத்தை கேட்க ''ம்'' என்றாள். விகாஷோடு சினிமாவிற்குப் போவதாய் இருந்தாள்.

''உங்களையும் கூப்பிட்டா, வர மாட்டேன்னு சொல்லிட்டீங்களே, அத்தை.'' என்றாள் குறைபடும் குரலில்.

''அசட்டுப் பெண்ணே, புதுசா கல்யாணமான ஜோடியோட இந்தக் கிழவியும் சினிமா பார்க்கக் கிளம்பணுமா? அதான் டி.வி., வி.சி.டி. எல்லாம் இருக்கே. ஒரு வேலை செய்ய விடமாட்டேங்கறே. இட்லி ஹாட் பேக்ல போட்டு வச்சுட்டே. சட்னி அரைச்சு வச்சுட்டே. டி.வி. பார்த்துட்டு, சாப்பிட்டு நீங்க வர்றதுக்குள்ள ஒரு குட்டி தூக்கமே போட்டுடுவேன். போதுமா? வயசான காலத்துல இதைவிட நிம்மதி வேற என்ன வேணும்? சீக்கிரமா ஒரு பேரனையோ பேத்தியையோ பெத்துக் கொடு. போதும்.''

நீலா மருமகள் தலையைக் கோத, வெட்கத்தை மறைத்துக் கொண்டு கேலி

பேசினாள் மஹதி. ''ஆஹா, அத்தை ஒரு கரிதார் போட்டுக்கிட்டா 'எந்த காலேஜ்ல படிக்கறீங்க'னு கேட்பாங்க. அப்படி இருக்க, பாட்டியாகணும்னு ஆசைப்படறேன்.''

நீலா குளிர்வது போல பாவனை செய்தார்.

''அம்மாடி, போதும்டாம்மா. ஐஸ் மழை பொழிஞ்சு எனக்கு சளி பிடிக்க வெச்சுடாதே.''

இருவரும் சிரிக்க, அப்போது தான் அலுவலகம் சென்று விட்டு உள்ளே நுழைந்த விகாஷ் ஒரு நொடி அசந்து போனவன் போல் நின்றான்.

''ஐயோடா, ரெண்டு பேரும் மாமியார் மருமகதானா? எனக்கு சந்தேகமா இருக்கே.''

அம்மாவும் பெருமையாகச் சிரித்தபடி, ''போடா, கண் வச்சுடாதே... அவ ரொம்ப நேரமா தயாரா இருக்கா. கிளம்பற வழியப் பாரு.'' என்றாள்.

''இதோ அஞ்சு நிமிஷத்துல ரெடியாயிடுவேன். மஹி காபி கொடு. அப்புறம், ஒரு விஷயம். சினிமா போறதுக்கு முன்னாடி... எனக்குத் தெரிஞ்ச ஒருத்தர் ஆஸ்பத்திரியில அட்மிட் ஆயிருக்காங்க. அவங்களைப் பார்த்துட்டு போகலாம்.''

''ஓ அதுக்கென்ன?'' என்றபடி சிட்டாய் சமையலறை நோக்கி ஓடினாள் மஹதி.

''யாருடா ஆஸ்பத்திரியில இருக்கா?'' என்ற அம்மாவின் கேள்விக்கு மெல்லிய குரலில் அவன் அளித்த பதிலைக் கேட்கும் தொலைவிலோ மனநிலையிலோ மஹதி இல்லை.

## 19

**அ**ந்தத் தனியார் மருத்துவமனை கொஞ்சம் ஐந்து நட்சத்திர ஹோட்டலின் சாயலில் இருந்தது. அரசு மருத்துவமனையின் குடலைப் பிரட்டும் மருந்து வாசம் இல்லை. அதிக சப்தமோ பேச்சோ இல்லை. அவரவர் அவரவர் வேலையில்; அவரவர் அவரவர் கவலையில் இருந்தனர். பெரிய பெரிய மருத்துவ அறிக்கைகளும், முகத்தின் கவலைகளும், நர்ஸ்கள் மருத்துவர்களின் நடமாட்டமும் மட்டுமே அது மருத்துவமனை என்று அறிவித்தன.

ரிசப்ஷனில் விசாரித்துக் கொண்டு அறை நோக்கி நகர்ந்தான் விகாஷ். பின்னால் நாய்க்குட்டி போல் அவசர நடையில் தொடர்ந்தாள் மஹதி.

அறை எண் சரிபார்த்துக் கொண்டு லேசாக கதவில் தட்டிவிட்டு உள்ளே நுழைந்தான் விகாஷ். அவன் பின்னாலேயே நுழைந்த மஹதி அதிர்ச்சியில் அப்படியே நின்றாள்.

கட்டிலில் நோயாளியாய்ப் படுத்திருந்தது அவள் அம்மா ராதா. அருகே துணைக்கு நவீன்.

''வாங்க மாமா. வாக்கா'' என்றான் முகம் மலர. மெல்ல கண்களை மலர்த்தினார் ராதா. விகாஷையும் மஹதியையும் ஒரு சேரப் பார்த்தவுடன் கன்னமும் இதழும் துடிக்கப் பரபரத்தார்.

''அத்தை, அலட்டிக்காதீங்க. நவீன் கிட்ட பேசிக்கறேன்... அடுத்த வீட்ல இருக்கோம்னு பேரு. விஷயம் தெரியலை பாருங்க. என்னாச்சா உன் போன் வந்து தான் விஷயமே தெரியும், நவீன்.''

ராதாவிடமும் நவீனிடமும் மாற்றி மாற்றி பதட்டமாய் பேசினான் ஆகாஷ்.

''பகல் ஒரு மணி இருக்கும். திடீர்னு அம்மாவுக்கு மயக்கம் வந்து விழுந்துட்டாங்க. நான் எதேச்சையா சாப்பிட வீட்டுக்குப் போனேன். நடு ஹால்ல அம்மா கிடக்காங்க. பதறிப் போயி ஆட்டோ பிடிச்சு இங்கே சேர்த்தேன். அப்பாவுக்கு போன் போட்டுட்டு அப்படியே பெரியம்மாவுக்கும் உங்களுக்கும் தகவல் சொன்னேன். அவங்க வந்து பார்த்துட்டு இப்பத்தான் போறாங்க...''

''திடீர்னு மயங்கி விழ என்ன காரணம்?''

அவன் பதட்டமாய், அக்கறையாய் கேட்க மஹதி மனதில் அனல் கொப்பளிக்க நின்றாள்.

''ரத்தக் கொதிப்பு அதிகமாயிடுச்சு... தாங்க எவ்வளவு அன்பு செலுத்தி நல்ல பார்த்துக்கிட்டாலும் மனசைப் போட்டு அலட்டிக்கறாங்க. என்ன தான் செய்ய?''

''கிடைக்காத அன்புக்கு ஏங்கியே அவங்க அமைதியை இழக்கறாங்க'' என்றான் விகாஷ் ஓரக் கண்ணால் மனைவியைப் பார்த்தபடி.

கணவனுக்காக தன் உணர்வெல்லாம் அடக்கிக் கொண்டு அதுவரை நின்ற மஹதி விகாஷ் தன்னை மறைமுகமாக குறிப்பிடுவதைக் கேட்டவுடன் அதற்கு மே[ல்] அடக்க முடியாதவளாய் படபடவென் பொரிந்து விட்டாள்.

''கிடைக்காத அன்புக்கு ஏங்கினதா[ல்] வந்த வியாதி இல்லீங்க இது, அன்பை சரி[யா]

வழங்காத குற்ற உணர்வால் வந்த மன அழுத்தம் இது. எப்படி நிம்மதி கிடைக்கும் மனசுல வஞ்சம் இருக்கும் போது? பெத்த மக இருக்கேனா செத்தேனானு கவலைப்படாத நெஞ்சுல பாசமாவது அன்புக்கு ஏக்கமாவது... இப்படி நாடகமாடி இதுக்குத் தானா என்னைக் கூட்டி வந்தீங்க? உங்களுக்குத் தேவைனா இருந்து பேசிட்டு வாங்க. நான் வெளியே காத்திருக்கேன்.'' என்றவள் விடுவிடென்று கதவைத் திறந்து கொண்டு வெளியேறினாள்.

ஏதோ பேசத் துடித்த ராதா கண்களில் நீர் கோர்க்க அப்படியே படுக்கையில் சரிந்தாள். நவீனும் விகாஷும் பாய்ந்து அவளிடம் ஓடிய போது, அந்த வெறுப்புடன் மஹதி அந்த அறையை விட்டு வெளியே வந்தாள்.

நீண்டிருந்த நடையின் மறு கோடியில் சில நாற்காலிகள் கிடந்தன. அதை நோக்கி அவள் நடக்க, பக்கத்து அறையைத் திறந்து கொண்டு அதே சமயம் வெளிவந்த வயதான ஆயா இவளை ஏற இறங்கப் பார்த்தபடி உடன் நடந்தாள்.

பின் பொறுக்காதவளாய் கேட்டே விட்டாள். ''ராதாம்மா அறையிலிருந்து வரியே கண்ணு, அவங்க மகதானே நீ?'' என்றாள்.

ஏற்கனவே மனம் நொந்திருந்த மஹதி அந்தக் கேள்வியை ரசிக்கவில்லை. கிழவி விடுவதாய் இல்லை. தன் போக்கில் பேசிக்கொண்டு போனாள்.

''வாயைத் திறந்து நீ சொல்லாட்டி என்ன, தான் உன் முகமே சொல்லுதே.''

காசு எதிர்பார்த்து கிழவி அனாவசியமாய் பகவதாய் நினைத்த மஹதிக்கு, கிழவியின் பேச்சு நாராசமாய் பட்டது. அவளைத் தவிர்ப்பது போல், ஏதும் பேசாமல் போய் நாற்காலியில் உட்கார்ந்து முகம் திருப்பிக் கொண்டாள்.

கிழவி இதையெல்லாம் பாராட்டவில்லை. மிகச் சுவாதீனமாய்ப் போய் மஹதியின் காலடியில் உட்கார்ந்து கொண்டாள்.

இதென்னடா வம்பு என்று மஹதிக்கு ஆயாசமாய் இருந்தது. கிழவியோ கெஞ்சையாய் அவள் விரல் நீவி விட்டாள். பாக்களை வெடுக்கென உருவ நினைத்து திரும்பிய மஹதி கிழவியின் முகத்தில் தெரிந்த கெஞ்சையில் ஒரு நொடி ஸ்தம்பித்தாள்.

''உன்னை உயிரோட இப்படி வளர்ந்த பொண்ணாப் பார்க்க எவ்வளவு சந்தோஷமா இருக்கு கண்ணு! எனக்கே இப்படி இருந்தா, ராதாம்மாவுக்கு எப்படி இருந்திருக்கும்! ராதாம்மா செஞ்ச புண்ணியம்னு தான் சொல்லணும்.''

கிழவி நீட்டி முழக்க, அவளைக் கூர்ந்து நோக்கினாள் மஹதி. என்ன சொல்கிறாள் இவள்? ''என்ன சொல்றீங்க, ஆயா?''

''அட! என்ன கண்ணு, தெரியாத மாதிரி கேக்கற. அது இருக்கும் ஒரு இருபது வருஷம் முன்னாடி. இப்ப நீ இருக்கறா மாதிரி உங்கம்மா அப்ப இருந்தாங்க அழகா, செவப்பா. இதே ஆஸ்பத்திரியில தான் நிறைமாச கர்ப்பிணியா வந்து சேர்த்தாங்க. அப்ப, இந்த ஆஸ்பத்திரி இப்ப மாதிரி பளபள, குளுகுளுனு இருக்கலை. சாதாரணமாத் தான் இருந்தது...''

ஏதோ கதை சொல்வது போல் கிழவி நீட்டி முழக்க, ஆர்வமும் அலுப்பும் ஒரு சேர மஹதியை அசத்தின. கிழவி அதை கவனிக்காமல் பேசினாள்.

''உங்க அப்பாவோட அம்மா இருக்காங்களே மனோன்மணி... ஐயோ சரியான... தப்பா எடுத்துக்காதே ராட்சசி. 'பொண்ணாப் பெத்தா வீட்டுக்கே வராதே'னு இங்க வந்து கத்திட்டுப் போயிட்டாங்க. உங்கம்மாவோ அழுவது... ஆணோ பெண்ணோ, நம்ம கையிலயா இருக்கு? அது பயந்தபடியே நீ பொண்ணா பிறந்துட்ட. மவராசி உன் மனோன்மணிப் பாட்டி வந்து 'கள்ளிப் பாலைக் கொடு, நெல்லு மணியக் கொடு. இதை சாகடிச்சுட்டு வீட்டுக்கு வா. இல்ல வரவே வராதே'னு சொல்லிட்டுப் போயிட்டாங்க.''

இப்போது நடந்தது போல் கிழவி விவரிக்க, மஹதி பிரமித்துப் போய் உட்கார்ந்திருந்தாள்.

''உங்க பாட்டியோட அக்கா நாலு பொண்ணைப் பெத்து சீர் செனத்தினு செஞ்சே சொத்தை இழந்தாங்களாம். உங்க வீடும் அப்ப அவ்வளவு வசதியா இல்லை. உங்கப்பாவோ தன் அம்மா கிழிச்ச கோட்டை தாண்டாதவர். மாமியாரையும் எதிர்த்துப் பேச முடியாம உன்னையும் கொல்லத் துணியாம உங்கம்மா உன்னை நெஞ்சோடு அணைச்சுகிட்டு அன்னைக்குக் கதறின கதறல், இன்னமும் என் கண் முன்னாடி நிக்குதும்மா. உங்க மங்காப்பாட்டியோ மக வேதனைய தாங்க முடியாம துடிக்கறாங்க. என்ன செய்ய. தெய்வம் மாதிரி உங்க பெரியம்மா பெரியப்பா வந்தாங்க. 'இவ இனிமே எங்க மக'னு உன்னை அள்ளி எடுத்துக்கிட்டாங்க.''

தன் கலங்கிய கண்களைத் துடைத்து, சற்று செருமிக் கொண்டு மீண்டும் தொடர்ந்தார் ஆயா.

''அந்த மன உளைச்சல் தாங்காம

உங்கம்மாவுக்கு உடம்புக்கு வந்துடுச்சு. அதையே வெளி உலகுக்குக் காரணமாக் காட்டி குழந்தையைத் தாங்களே வச்சுகிட்டு, உங்கம்மாவை மட்டும் புகுந்த வீட்டுக்கு அனுப்பினாங்க. அப்பவும் மனோன்மணி திருப்தியாகலை. 'பின்னாடி கல்யாணம் கார்த்திகைனா என் பிள்ளை தானேடி இவளுக்கு கொட்டி அழணும்'னு கத்தினாங்களாம். அதெல்லாம் எங்க பொறுப்புனு உங்க மங்காப்பாட்டியும் . பெரியப்பாவும் சொன்னாங்களாம். 'தாய்ப் பாசங்கற பேர்ல நீ அந்தப் பொண்ணு கிட்ட பேசி, ஆசையா நடந்து அன்பு காட்டி எதுவும் செய்யக் கூடாது'னு உங்க அம்மாகிட்ட கண்டிஷன் போட்டு தான் உன்னை உயிரோட இருக்கவே அந்தம்மா விட்டிருக்காங்க. மனசைக் கல்லாக்கிகிட்டு நீ உயிரோட இருந்தாப் போதும்னு உங்கம்மா நடைபிணமா வாழ்ந்தது எனக்குத் தெரியும், கண்ணு. ஆனா, உங்கம்மா ஜெயிச்சுட்டா. இந்தக் கால பொண்ணுங்க மாதிரி புருஷனை எதிர்த்து வாழ அந்தக் காலத்துல தெரியாது. தனக்கு முடிஞ்ச வழியில உங்கம்மா சாதிச்சுட்டா. உன்னைப் பார்க்கும் போது எனக்கே மனசு இவ்வளவு சந்தோஷப்படுதே. ராதாம்மா எப்படி மகிழ்ந்திருக்கும்... ஆமா, இது எதுவுமே உனக்குத் தெரியாதா?''

மஹதியால் பேசவே முடியவில்லை. சிலையாய் சமைந்து விட்டவள் மெல்ல தலையை மட்டும் மறுப்பாய் ஆட்டினாள். கண்களிலிருந்து கண்ணீர் தானாய் வடிந்து கொண்டிருந்தது.

''உங்கப்பா மேல உனக்கு மதிப்பு குறைஞ்சிடக் கூடாதேனு எல்லோரும் மறைச்சிருப்பாங்க. எப்படியோ என் மூலம் உனக்கு விஷயம் தெரிஞ்சுடுச்சு. நடந்ததை விடு. ராதாம்மாவுக்கு நீ அனுசரணையா இருக்கியே அதுவே போதும். அழுவாத கண்ணு.'' என்று மேலே பேசப் போன ஆயா, பெரிய டாக்டர் தலை தெரிந்தவுடன் ''அப்புறம் பேசலாம் கண்ணு'' என்று கூறிவிட்டு வேகமாய் நகர்ந்து விட்டாள்.

மஹதிக்கு அதுவரை யாரோ வைத்து அழுத்திய ஒரு யானை எடையை நெஞ்சிலிருந்து எடுத்தது போல் நிம்மதி ஏற்பட்டது.

'என் அம்மா என்னை வெறுக்கவில்லை!

அம்மா, நீ என்னை வெறுப்பதாய் நினைத்தேனே. அந்த வெறுப்பு முகமூடிக்குப் பின்னால் இத்தனை வலியை நீ தாங்கி இருக்கிறாயா? நான் பொண்ணா பிறந்ததே ஒரு குறையா எனக்கு தோணக் கூடாதுனு இந்த விஷயத்தை மறைச்சிட்டியாம்மா? சுகமாய் நான் பெரியம்மா வீட்டில் வளர்ந்த காலமெல்லாம் நீ நெருப்பில் குளித்திருக்கிறாயா? அண்ணி வந்த பின் ஆறேழு மாதங்கள் தான் நான் வதைபட்டேன். நீ வாழ்க்கை பூராவும் சித்திரவதை பட்டிருக்கிறாயே, அம்மா. உன் உண்மை நிலை தெரியாமல், நான் உன்னை எப்படி வெறுத்து, ஒதுக்கி, உதாசீனம் செய்தேன். நான் உயிரோடு இருந்தால் போதும் என்று என்மீது கொண்ட அன்பையெல்லாம் மனதில் பதுக்கி மாமியார், கணவனின் முன்னே வெளிக்காட்ட முடியாமல் எப்படியெல்லாம் துடித்திருப்பாய். பாவி, நான் உணராமல் அவர்கள் நல்லவர்கள், நீதான் மோசமானவள் என்றல்லவா பாதகமாய் நினைத்திருந்தேன்.'

நினைக்க நினைக்க ஆறாக கண்ணீர் பொங்கியது.

'நீ ராதாம்மாவுக்கு அனுசரணையா இருக்கியே அதுவே போதும்.' ஆயாவின் குரல் நினைவில் மோத, கண்களைத் துடைத்துக் கொண்டு வேகமாய் தாயாரின் அறை நோக்கி நடந்தாள். இனியும் காலம் தாழ்த்துவது மடமை.

பல வருடங்களாய் மனதில் தேக்கி வைத்திருந்த அன்பையெல்லாம் குழைத்து, ஜீவனையே கொட்டிக் கலந்து ''அம்மா'' என்றபடி ராதாவின் காலடியில் போய் விழுந்தாள் மஹதி.

அர்ப்பணிக்கப்பட்ட பூக்களை ஆனந்தமாய் ஆண்டவன் ஏற்பது போல், எந்தக் குரலின் கனிவான 'அம்மா'விற்காகக் காத்திருந்தாளோ, அதன் ஓசை அவள் கர்ப்பக்கிரகத்தை சிலிர்க்க வைத்து துள்ளி எழ வைக்க, ராதா தாவி மகளை அணைத்துக் கொண்டாள்.

தான் சொல்லாமல் மனைவிக்கு எப்படி விஷயம் தெரிந்தது என்று புரியாத விகாஷ், அவள் மனமாற்றத்தை முதலில் ஜானம்மா குடும்பத்திற்கு தெரியப்படுத்த நினைத்தான். அந்த ஆனந்த சங்கமத்தைப் பார்த்து அவன் கண்கள் பனித்தன.

★★★(முற்றும்)★★★

### விநாயகர் குழந்தைகள்

விநாயகருக்கு சித்தி என்னும் மனைவியின் மூலம் ரட்சன் என்ற பிள்ளையும், புத்தி என்னும் மனைவியின் மூலம் லாபன் என்ற பிள்ளையும் பிறந்ததாக சிவமகா புராணம் கூறுகிறது.

-லட்சுமி சிவம், சென்னை.